# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 புரட்டாதி 13 வெள்ளிக்கிழமை (30.09.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 308




அதிகரித்து வரும் நெருக்குதல்கள்

14



சேர்ந்து வாழ அனுமதி

21



சுமுக உறவு சாத்தியமில்லை

23

# புனரமைப்பின் பேரில் பழைய பூங்கா அழிப்பு ஆளுநர் மற்றும் அமைச்சர் பஸிலின் திட்டம்

## டக்ளஸ், மாநகர முதல்வரும் உடந்தை

கொழும்பு, செப். 30

புனரமைப்பு மற்றும் மக்களுக்குத் திறந்து விடுதல் என்ற போர்வையில் பழைய பூங்காவை அழிக்கும் நடவடிக்கைகள் நேற்றும் யாழ். மாநகர சபையால் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டது. இந்தப் பணிகள் ஆளுநர் மற்றும் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ ஆகியோர் மேற்கொண்ட தனிப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலேயே ஆரம்பிக்கப்பட்டது என்று உதயனுக்குத் தெரிய வந்தது. அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாநகர முதல்வர் ஆகியோருக்கு இந்தத் திட்டம் குறித்து முன்னரே தெரிந்திருந்த போதும் இதனைத் தடுப்பதற்கோ பழைய பூங்காவைப் பாதுகாப்பதற்கோ நடவடிக்கை எடுக்காது அவர்களும் உடந்தையாக

பக் 27

## பழைய பூங்காவைப் பாதுகாக்க புத்திஜீவிகள் நீதிமன்றை நாடுவர்

கொழும்பு, செப். 30

பழைய பூங்காவை அழிக்க வடமாகாண ஆளுநர், அமைச்சர்கள் மற்றும் யாழ். மாநகர முதல்வரின் ஆதரவுடன் மேற்கொண்டுள்ள முயற்சிகளை எதிர்த்து நீதிமன்றம் செல்வதற்கு யாழ்ப்பாணப் புத்திஜீவிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

பழைய பூங்கா தேசியச் சொத்தாகவும் யாழ்ப்பாணத்

பக் 25

# சர்வதேச அரங்கில் இலங்கையை அடியோடு கைகழுவியது இந்தியா

## உங்கள் பிரச்சினையை நீங்களே பாருங்கள் என்றார் மன்மோகன்

கொழும்பு, செப்ரெம்பர் 30

இறுதிப் போரின்போதும் அதன் பின்னரும் சர்வதேச அரங்கில் இலங்கைக்குப் பெரும் பாதுகாப்பு அரணாக விளங்கி வந்த இந்தியா இப்போது அந்தப் போக்கைக் கைவிட்டுள்ளது என்று உதயனுக்கு அறியவந்தது. இலங்கையின் எந்தவொரு உள்விவகாரத்திலும் இனி இந்தியா தலையிடாது என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் நேரில் தெரிவித்துள்ள இந்தியப்



பிரதமர் மன்மோகன் சிங், இலங்கைப் பிரச்சினையை இலங்கை அரசே இனிப் பார்த்துக்கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார் என்று அறிய வந்தது.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபைக் கூட்டத்தில் உரையாற்ற நியூயோர்க் சென்றிருந்த ஜனாதிபதி அங்கு இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துப் பேசினார். இருவருக்குமிடையில் ஒன்றரை மணிநேரத்திற்கும் மேலாக இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது இந்தியாவின் இந்த நிலைப்பாட்டை டாக்டர் மன்மோகன் சிங் நேரடியாகவே

பக் 25

## நாவாந்துறை உரிமை மீறல் மனு: சட்டமா அதிபருக்கு கால அவகாசம்

யாழ்ப்பாணம், செப். 30

நாவாந்துறையில் படையினர் மற்றும் பொலிஸாரால் பொதுமக்கள் மோசமாகத் தாக்கப்பட்டமை தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கை விசாரிப்பதா? தள்ளுபடி செய்வதா? என்பதை கொழும்பு உயர் நீதிமன்றம் எதிர்வரும் 27 ஆம் திகதி முடிவு செய்யும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சட்டமா அதிபருக்கு கால அவகாசம் தேவை எனக் கோரியதை அடுத்து இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

கடந்த ஒகஸ்ட் 22 ஆம் திகதி இரவு நாவாந்துறையில் மர்ம மனிதனின் நடமாட்டத்தை அடுத்து ஏற்பட்ட கலவரத்தின் போது படையினர் மற்றும் பொலிஸாரால் கைது செய்

பக் 27

# சர்வதேச விசாரணையா?

## ரணிலுக்கு எதிராக பொங்குகிறது தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம்

கொழும்பு, செப். 30

தருஸ்மன் அறிக்கையை சர்வதேசம் ஏற்றுவிட்டது என அறிக்கைக்கு சொந்தக்காரரான ஐ.நா.செயலர் பான் கீ - மூன் கூட இன்னும் அறிவிக்கவில்லை. அதற்கு முன்னர் ரணில் முண்டியடிப்பதன் நோக்கம் என்ன? புலிகளுக்கு வால்பிடிக்கப் போய் இழந்தது போதாதா?

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில்விக்கிரமசிங்கவை கடுமையாக விமர்சிக்கின்றார் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி

பக் 27

## நாடு கடத்தப்பட்ட 50 இலங்கையர்கள் பிரிட்டனிலிருந்து கட்டுநாயக்காவுக்கு

### 100 அதிகாரிகளின் பாதுகாப்புடன் வந்தனர்

கொழும்பு, செப்.30

பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட 50 இலங்கையர்களும் நேற்று முற்பகல் 10.26 இற்கு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.எல்.சி. 6286 என்னும் விமானத்தில் 100 பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் பாதுகாப்புடன் மேற்படி 50 பேரும் இலங்கையை வந்தடைந்தனர்.

கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த இவர்களைத் தேசிய குற்றப் புலனாய்வு பிரிவினர் பொறுப்பேற்றுள்ளனர்.

நாட்டுக்கு திருப்பி அனுப்பப்பட்ட இந்த இலங்கையர்களிடம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து குற்றப் புலனாய்வுத் துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இவ்வாறு இலங்கை வந்தவர்களில் 42 ஆண்களும் 8 பெண்களும் அடங்குவதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

மனித உரிமை அமைப்புகளின்; எதிர்ப்புகளுக்கு மத்தியில் பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்பட்ட 50 பேரும் விசாரணைகளின் பின்னர் விடுவிக்கப்படுவர் என்று இலங்கைக் குடிவரவு திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த அகதிகளை நாடு கடத்தும் நடவடிக்கைகள் பிரிட்டன் நீதிமன்ற உத்தரவால் ஒத்தி வைக்கப்பட்டதாக ஏற்கனவே செய்தி வெளியாகியிருந்தது.

எனினும் ஏற்கனவே அறிவிக்கப்பட்டபடி 50 இலங்கையர்களும் நேற்று

பக் 25

## பஸ் சில்லில் அகப்பட்டு யாழ். இந்து மாணவன் உடல் நசுங்கிச் சாவு

யாழ்ப்பாணம், செப்.30

நயினாதீவுக்குச் சென்ற யாழ். இந்துக்கல்லூரி மாணவன் குறிகாட்டுவானில் தான் பயணித்த பஸ்ஸின் சில்லினுள் அகப்பட்டு தலைநசுங்கி ஸ்தலத்திலேயே பலியானான்.

இந்த பயணத்தின் போது 96 மாணவர்கள் பாடசாலை நிர்வாகத்தினரால் ஒரேயொரு பஸ்ஸில் நயினாதீவுக்கு அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். சம்பவத்தில் திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த நல்லைநாதன் தனுசன் (வயது-14) என்ற 9 ஆம் தரத்தில் பயிலும் மாணவனே பலியானவராவார்.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:

நயினை நாகபூசணி அம்மன் ஆலயத்தில் நேற்று நடைபெற்ற இரண்டாவது நாள் சரஸ்வதி பூசைக்கு இந்த மாண

பக் 27

### மின்கம்பிகளைக் கழற்றிய வேளை

## திடீரெனப் பாய்ந்தது மின்சாரம் இளைஞர் உடல் கருகி மரணம்

யாழ்ப்பாணம், செப்.30

வீதி அகலிப்புப் பணிகளுக்காக மின் கம்பங்களை வேறு இடத்துக்கு மாற்றவதுக்காக மின் கம்பத்தில் நின்று மின்சாரக் கம்பிகளை கழற்றிக்கொண்டிருந்த வேளை திடீரென அந்தக் கம்பிகளில் மின்சாரம் பாய்ந்தமையால் அதனைக் கழற்றும் பணியில் ஈடுபட்டிருந்த இளைஞர் ஒருவர் கம்பியில் தொங்கிய வண்ணம் உடல் கருகி மரணம்ானார். அதேநேரத்தில் பிறிதொரு இடத்தில் நடந்த இதே சம்பவத்தில் இன்னொரு இளைஞர் படுகாயமடைந்து உயிர்தப்பிய நிலையில் யாழ். போதனா

பக் 27

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம்: 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com

# வடக்கில் சிறுவர் வைத்தியசாலை அமைக்க பிரதம செயலாளர் பின்னடித்து வருகிறார்

## வலி. மேற்கு ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், செப்.30

கொழும்பில் அமைந்துள்ள லேடிரிச்வே சிறுவர் வைத்தியசாலையைப் போன்று சங்கானையில் வட பகுதிக்கான நவீன சிறுவர் வைத்தியசாலையை அமைக்குமாறு கடந்த 2 வருடங்களாகக் கோரிக்கை விடுத்து வருகிறோம். இதற்கான முன்மொழிவு 05.02.2009 இல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு வழங்கப்பட்டு ஜனாதிபதி அதனை அமைக்குமாறு பணித்தபோதும் வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் அதற்கு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொள்ள நடவடிக்கைகளைச் செய்யாமல் அந்தத் திட்டத்தைப் பின்தள்ளி வருகிறார். இது வேதனை தரும் விடயம் சிறுவர்களுக்கு இழைக்கப்படும் அநீதியாகும்.

இவ்வாறு சங்கானை அரசினர் வைத்தியசாலை அபிவிருத்தி சங்க தலைவர் குணரத்தினம் குணசிறி நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கவலை தெரிவித்தார்.

வலி.மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

இதில் கலந்துகொண்ட தலைவர் குணரத்தினம் குணசிறி மேலும் கூறுகையில்,

வடக்கு மாகாணத்துக்கான சிறுவர் வைத்தியசாலையை உடன் அமைக்குமாறும் அதற்கான நிதியை ஒதுக்குமாறும் ஜனாதிபதி பணித்தற்கமைய ஜனாதிபதியின் உதவிச் செயலாளர் சிறிமாலி டி அதாவுட ஆராய்ச்சி வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இதனையடுத்து வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் நவீனசிறுவர் வைத்தியசாலையை சங்கானையில் அல்லது தெல்லிப்பழையில் அமைக்கலாம் என்றும், இதற்கு முதற்கட்டமாக 100 படுக்கை அறைகளைக் கொண்ட நவீன கட்டடம் ஒன்றை அமைப்பதற்கு 80 மில்லியன் ரூபா தேவையெனவும், இதற்கான நிதியை வழங்குமாறு கோரியிருந்தார். இதற்குப் பின்னர் அதற்கான நிதி ஒதுக்கீடும் இல்லை. நடவடிக்கைகளும் இல்லை. அதனை வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் பின்தள்ளி வருகிறார் - என்றார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த வலி.மேற்கு பிரதேச சபை முன்னாள் உள்ளூராட்சி உதவியாளர் நவீன சிறுவர் வைத்தியசாலை அமைப்பதற்கு 120 மில்லியன் ரூபா கோரப்பட்டது. அதற்கு 80 மில்லியன் ரூபா ஒதுக்கப்படும் என கூறப்பட்டபோதும் இதுவரை அதற்கு நிதி ஒதுக்கப்படவில்லையென தெரிவித்தார்.

மேற்படி விடயங்களை உள்வாங்கி கொண்ட வலி. மேற்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் கூறுகையில்,

வடக்குக்கான நவீன சிறுவர் வைத்தியசாலை தொடர்பாக உடன் முடிவு எட்டப்பட்டு அது அமைக்கப்படும் என்றும், இதற்காக மேற்கொள்ளப்பட்ட கடிதங்களின் இணைப்பிரதிகள் மற்றும் திட்டம் தடைப்படுவதற்கு யார் காரணம் என்பதனை தெரியப்படுத்துமாறும், விரைவாக ஆவணங்களை தந்து உதவுமாறும் கோரினார்.

மேற்படி கூட்டத்தில் மீன்பிடி, கல்வி, சுகாதாரம், மின்சாரம் உட்பட 14 துறைகள் தொடர்பாக ஆராயப்பட்டன.

பிரதேச செயலர் திருமதி தேபாபு கூட்டத்தை ஒழுங்கமைத்தார்.

(த-302)




அனைத்து மாவட்டங்களிலும் வானம் தெளிவாக காணப்படும்.

CSE COLOMBO STOCK EXCHANGE

பங்குப்பரிவர்த்தனை யாழ்ப்பாணம்.
398/1, ஆஸ்பத்திரி வீதி. 2221455.
புரட்டாதி 28 2011
பங்குச் சந்தைச் சுட்டிகள்
அனைத்துப்பங்கு(ASPI) 6,710.69↓
மிலங்கா(MPI) 5,999.28↓
உரிமைமுதல் தகவல்கள்
வியாபாரப்புரள்வு(Rs.) 1,511.38Mn
பங்குகளின் அளவு(No.) 55.75Mn
வியாபாரம்(No.) 16,169
விலை அசைவுகளின் அடிப்படையில்
அதிகரிப்பு(Top 5 gainers)விலை Rs.
கென்வினியன்ஸ் பூட் 413.00
ரிக்னிஸ் 401.00
லேக்கவுஸ் பிறின்ரேஸ் 179.80
கொழும்பு போட்லான் 25.90
பெருவல வோக் இன் 179.70
குறைவு(Top 5 losers) - விலை Rs.
ஆசிறி சென்றல் 186.70
மொறிசன் 2400.00
எச்.வி.எ பூட் 55.00
செரன்டிப் ஹொட்டல்(x) 21.70
ஹைலீஸ் எக்போட் 42.10
மேலதிக தகவல்கள்- www.cse.lk

## மீன்பிடியியல் கல்லூரியை குருநகரில் பஸில் திறப்பார்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சரும், ஜனாதிபதியின் சகோதரருமான பஸில் ராஜபக்ஷ எதிர்வரும் 3ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார்.

ஜப்பானிய அரசின் 'ஜெய்க்கா' நிறுவனத்தினால் குருநகரில் அமைக்கப்பட்ட மீன்பிடியியல் கல்லூரியை அன்றைய தினம் பஸில் திறந்து வைப்பார்.

அதன் பின்னர் அச்சுவேலியில் அமைக்கப்பட்டுள்ளதென்னை நாற்றுஉற்பத்தி நிலையத்தையும் அமைச்சர் திறந்து வைக்கவுள்ளார். (த-15)

# நிகழ்வுகள்

### கூட்டம்

புராதன பண்பாட்டுச் சின்னங்களையும் அவை அமைந்துள்ள இடங்களையும் பாதுகாப்பு தொடர்பான கூட்டம் ஒன்று தமிழர் பண்பாட்டு மையத்தினால் இன்று வெள்ளிக்கிழமை நடத்தப்படுகிறது.

யாழ். நீராவியடியில் உள்ள சைவ பரிபாலன சபை மண்டபத்தில் இன்று மாலை 4 மணிக்கு இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.

இதன்போது யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை வாழ்வியல் பொருட்காட்சி வெளிக்கொணர்ந்துள்ள பல நூற்றாண்டுகள் பழைமைவாய்ந்த எமது சுதேசிய பண்பாட்டுச் சின்னங்களையும் தொல் பொருள் எச்சங்களையும் அவை அமைந்துள்ள இடங்களையும் பாதுகாப்பது தொடர்பாக ஆராயப்படவுள்ளது.

எமது பண்பாட்டுப் பேணுகையுடன் ஆர்வமுள்ள சகலரையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் புராதன சின்னங்களைப் பாதுகாத்தலில் பங்களிப்பு நல்குமாறும் கேட்டுக்கோள்ளப்பட்டுள்ளது. (த-4)

### ஞானச்சுடர் வெளியீடு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆன்மிக சஞ்சிகையின் 165ஆவது மலரான புரட்டாதி மாத இதழ் வெளியீட்டுவிழா இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேரவை நிர்வாக உறுப்பினர் அருணகிரி நாதன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வெளியீட்டுரையை சிவ. ஆறுமுகசாமியும், மதிப்பீட்டுரையை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும் நிகழ்த்துவார்கள். (த-236)

### கடன் வழங்கும் நிகழ்வு இன்று

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினரின் ஏற்பாட்டில் இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் கடன் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் த. ஈஸ்வரராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் உதவிப் பிராந்திய முகாமையாளர் கே. சசீந்திரன் சிறப்பு விருந்தினராக தேசிய இளைஞர் சேவைகள் மன்ற வடமாகாணப் பணிப்பாளர் திருமதி. விமலேஸ்வரி ஸ்ரீஸ்காந்தரூபன் ஆகியோர் கலந்து கொள்வர்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 30 வயதுக்கு உட்பட்ட இளைஞர், யுவதிகள் சுயதொழிலை மேற்கொள்வதற்காக இதில் கடன் வழங்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பொது முகாமையாளர் ப. பஞ்சலிங்கம் அறிவித்துள்ளார். (த-313)

### செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு சங்கீதம், நடனம் ஆகிய பாடங்கள் கற்கும் மாணவர்களுக்காக செயன்முறை வழிகாட்டல் செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (த-207)

### கலாசார விழா

நல்லூர் பிரதேச செயலக கலாசார பேரவையின் கலாசார விழா முதல்நாள் நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும்.

நல்லூர் பிரதேச செயலர் ந. செந்தில்நாதன் தலைமையில் சித்தாந்த பாரதி சிவராமலிங்கம்பிள்ளை அரங்கில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கமும், சிறப்பு விருந்தினராக செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை தலைவர் பேராசிரியர் வீ.கே.கணேசலிங்கமும் கலந்துகொள்வர். கலை நிகழ்வுகள், சான்றிதழ் வழங்கும் நிகழ்வுகளும் இதில் இடம்பெறும். (த-7)

### 'பன் ஏசியா' வங்கி நெல்லியடியில் திறப்பு

பன்ஏசியா வங்கியின் கிளை ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடியில் திறந்து வைக்கப்படவுள்ளது.

திறக்கப்படும் இந்தப் புதிய கிளை பன்ஏசியா வங்கியின் 56 ஆவது கிளையாகும். யாழ். மாவட்டத்தில் இது இரண்டாவது கிளையாகும்.

யாழ்ப்பாணம் பிரதான வீதியில் நெல்லியடி பொதுச் சந்தைக்கு அருகில் இந்த வங்கிக்கென வடிவமைக்கப்பட்ட புதிய கட்டடம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது. [illegible]

### சான்றிதழ் வழங்கும் வைபவம்

வடமராட்சி வலயத்தின் புலோலியில் அமைந்துள்ள கணினி கற்கை நிலையத்தில் பயிற்சிபெற்ற பாடசாலைகளை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஒன்றுகூடல் மண்டபத்தில் வலயக்கல்விப் பணிப்பாளர் வ. செல்வராசா தலைமையில் நடைபெறும். இந்த நிகழ்வில் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பயிற்சியை முடித்துக்கொண்ட மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவிப்பார். (த-1901-236)

***

யாழ்ப்பாணம்,செப்.30

வடமராட்சி வலய தகவல் தொடர்பாடல் தொழில் நுட்ப கல்வி நிலையத்தின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 2 மணிக்கு நெல்லியடி மத்திய மகாவித்தி யாலய மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

வடமராட்சி கல்வி வலய பணிப்பாளர் வி.செல்வராசா தலை மையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வட மாகாண கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (த-10)

### பரிசளிப்பு விழா

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு மகா வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வீ. மீனேஸ்வரன் தலைமையில் இடம்பெறும் இந்த நிகழ்வில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆ. ராஜேந்திரன் பிரதம விருந்தினராகவும், சங்கானைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் துரை எங்கரசு, யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி. ஜெ. உதயகுமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், டாக்டர் கா.சுமந்திரன், வடக்கு மாகாணக் கல்வித் திணைக்கள திட்டமிடல் உதவிக் கல்விப் பணிப்பாளர் க. மணிமார்பன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (த- 311)

### ஓவியக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ். பல்கலைக்கழக நுண்கலைத்துறை மற்றும் கலை வட்டம் ஆகியவற்றின் ஆதரவுடன் பிரதீப் தயவத்த என்பவரின் றெட் அன்ட் வைற் என்னும் தொனிப்பொருளின் ஓவியக்கண்காட்சி ஒன்று நுண்கலைத்துறை கலைக் கூடத் தொகுதியில் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

இந்தக் கண்காட்சி முற்பகல் 11மணிக்கு ஆரம்பமாகும்.

தொடர்ந்து 3 நாள்கள் இடம் பெறவுள்ள இந்தக் கண்காட்சியானது தினமும் முற்பகல் 11மணி தொடக்கம் பிற்பகல் 4மணி வரை இடம் பெறும்.

கலை ஆர்வலர்கள் அனைவரையும் இதில் கலந்து சிறப்பிக்குமாறு யாழ். பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி எ.என். கிருஸ்ணவேணி அறிவித்துள்ளார். (த-311)

### சிறுவர் தின விழா

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சிறுவர் தின விழாவும், புலமைப்பரிசிலில் உயர் புள்ளிகளைப்பெற்ற மாணவர்களைக் கௌரவித்து பாராட்டும் விழா இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதானமண்டபத்தில் பாடசாலை அதிபர் சு.சிவபாதசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக அமெரிக்காவின் நியூயோர்க்கில் அமைந்துள்ள எஸ்.ஐ.பல்கலைக்கழக வைத்தியசாலையின் வைத்தியர்களான டாக்டர் சண்முகசுந்தரம் தெய்வேந்திரம் , டாக்டர் றாஜம் தெய்வேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (த-323)

### விஞ்ஞான விழா

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்.கொக்குவில் இந்துக்கல்லூரி உயர்தர கணித,விஞ்ஞான மன்றத்தின் ஏற்பாட்டில் 'விஞ்ஞான தின விழாவும் , சாரதி நூல் வெளியீடும்சு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மன்றத் தலைவர் பி.செந்தூரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக ஸ்ரீலங்கா ரெலிக் கொம் யாழ். அலுவலக உதவிப் பொறியியலாளர் இராஜரெத்தினம் இராஜேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.இந்த நிகழ்வில் டெங்கு ஒழிப்பில் முக்கிய பங்கு வகிப்பது அரச நிறுவனமா? பொதுமக்களா? என்னும் தலைப்பில் கொக்குவில் இந்துக்கல்லூரி மாணவர்களும் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகளும் விவாதம் நடத்துவர். (த-323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி நீதிமன்ற கட்டடத்தை பிரதம நீதியரசர் திறந்து வைத்தார்



கிளிநொச்சி,செப்.30

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் புதிய கட்டடத் தொகுதி பிரதம நீதியரசர் திருமதி ஷிராணி பண்டார நாயக்காவினால் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

கிளிநொச்சியில் மக்கள் மீளக் குடியேறியதை அடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் கடந்த 2010 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு தற்காலிகமாக கிளிநொச்சி சிறைச்சாலை வளாகத்தில் இயங்குகின்றது. இதனையடுத்து கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றத்தின் கட்டடம் 41 மில்லியன் செலவில் புனரமைக்கப்பட்டு அதனைத் திறந்து வைக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் 10.30 மணிக்கு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் விருந்தினர்கள் மங்கள வாத்தியம், மற்றும் கிளிநொச்சி மத்திய கல்லூரி மாணவர் களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் நீதிமன்ற வளாகத்துக்கு அழைத்து வரப்பட்டனர்.

கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் பெயர்ப் பலகையைப் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கா திரைநீக்கம் செய்து வைத்து நீதிமன்றக் கட்டடத்தையும் திறந்து வைத்தார்.

வரவேற்புரையினை கிளிநொச்சிமாவட்ட நீதிமன்ற நீதிபதி பெ.சிவகுமார் நிகழ்த்தினார். சிறப்புரைகளை பிரதம நீதியரசர் ஷிராணி பண்டார நாயக்கா, நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், நீதியமைச்சின் செயலாளர் சுகத கம்லத் ஆகியோர் வழங்கினர்.

நிகழ்வில் மேல் நீதிமன்ற நீதிபதிகளான ஜெ.விஸ்வநாதன் என்.சமரக்கோன் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி ஆர்.பிரபாகரன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி, கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூபவதி கேதீஸ்வரன் மற்றும் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பிரதிச் செயலாளர்கள் அரச பிரதிநிதிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் கலந்து கொண்ட நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம், பூநகரி, நாச்சிக்குடா ஆகிய பின்தங்கிய கிராம மக்களுக்குச் சேவையாற்றக் கூடிய வகையில் ஒரு நடமாடும் மாவட்ட நீதிமன்றம் ஒன்றை நாச்சிக்குடாப் பகுதியில் அமைப்பதற் குத் தீர்மானம் செய்துள்ளதாகத் தெரிவித்தார்.

# தங்க பிஸ்கட் கடத்தல் முயற்சி நேற்று முறியடிப்பு

கொழும்பு, செப். 30

இலங்கையிலிருந்து நேற்று பெங்களூருக்குச் செல்லவிருந்த யூ.எல்.171 என்ற இலக்க விமானத்தின் ஊடாகத் தங்க பிஸ்கட்டுகளைக் கடத்திச்செல்ல முயற்சித்த இருவரை கட்டுநாயக்க விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்கள் நீர்கொழும்பு, கட்டுநாயக்க ஆகிய பிரதேசங்களில் வசிப்பவர்களாவர்.

இவர்களின் உடலில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கிலோ 400 கிராமுடைய 24 தங்க பிஸ்கட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் சுங்க அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-சி)

# கனகரத்தினம் மகா வித்தியாலய மாணவிகள் விடுதி புனரமைப்பு

யாழ்ப்பாணம், செப்.29

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மாணவிகள் விடுதி 6.6 மில்லியன் ரூபா செலவில் புனரமைக்கப்படவுள்ளது.

1995ஆம் ஆண்டில் சேதமடைந்த இந்த விடுதி வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் முயற்சியின் பயனாக யாழ். அரச அதிபரினால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதையடுத்து புனரமைப்புப் பணிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.

வித்தியாலய அதிபர் வி. ஞானகாந்தன் தலைமையில் நடைபெற்ற புனரமைப்பு பணிகளின் ஆரம்ப நாள் நிகழ்வில் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின், யாழ். மாநகர மேயர் திருமதி யோ. பற்குணராசா, நல்லூர் கோட்டக்கல்வி அலுவலர் மாணிக்கராசா உட்பட பலர் கலந்து கொண்டனர். (த-207)

# மங்களநேசனுக்கு எதிராக மாநகர சபையில் பிரேரணை

## கூட்டத்தை விட்டு வெளியேறினார் முதல்வர்

யாழ்ப்பாணம், செப். 30

யாழ். மாநகரசபை ஆளும் கட்சி உறுப்பினர் மனுவல் மங்களநேசன் மாநகரசபை உத்தியோகத்தர் ஒருவரைத் தாக்கியமை, பெண் ஊழியர் ஒருவரைத் தகாத வார்த்தைகளால் பேசியமை ஆகியவற்றைக் கண்டித்து பிரேரணை ஒன்று மாநகர சபைக் கூட்டத்தில் நேற்று மாலை கொண்டு வரப்பட்டது.

எதிர்க்கட்சி உறுப்பினர் அ.பரஞ்சோதி இந்தப் பிரேரணையைக் கொண்ட வந்ததையடுத்து பிற்பகல் 3.45 மணியளவில் கூட்டத்தை நிறுத்தி விட்டு அங்கிருந்து வெளியேறினார் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா.

முன்னதாக இந்தப் பிரேரணை கொண்டு வர வேண்டிய அவசியம் இல்லை எனவும், அதனைக் கொண்டு வந்தால் கூட்டத்தை ஒத்தி வைக்கப்போவதாகவும் முதல்வர் தெரிவித்தார்.

உறுப்பினர் அ.பரஞ்சோதி முன்கண்ட பிரேரணையைச் சபையில் சமர்ப்பிக்க ஆரம்பித்தும் ஆளும்கட்சி உறுப்பினரான எஸ்.விஜயகாந், பிரோரணையைச் சபைக்குத் தெரிவித்து அது சபைத் தீர்மானத்துக்கு வந்த பின்னரே பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படவேண்டும். உறுப்பினர் பரஞ்சோதி ஏற்கனவே பத்திரிகைகளுக்கு இதனை வழங்கிவிட்டு மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெறும் ஒருமுயற்சிக்காகவே இதனைச் செய்கிறார் எனக் குற்றம் சாட்டினார்.

இந்தச் சமயம் எதிரணி உறுப்பினரான மு.றெமிடியஸ், இது பெண்கள் தொடர்பான குற்றச்சாட்டு உள்ளடங்கிய விடயம். உறுப்பினர்கள் கௌரவமாக நடந்து கொள்வது அவசியம். நடந்த விடயங்கள் குறித்துப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன.

எனவே, இந்தப் பிரேரணை தொடர்பாக விவாதிக்கவேண்டும். உண்மை நிலையைச் சம்பந்தப்பட்ட உறுப்பினர் தெளிவுபடுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

எதிரணி உறுப்பினர்கள் இந்தப் பிரேரணையை விவாதிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தினார்கள். எனினும் மாநகரசபை வளாகத்துக்குள் பாதுகாப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனத் தீர்மானித்துள்ளதால் இந்தப் பிரேரணை அவசியமில்லை. எனக் குறிப்பிட்ட முதல்வர் சபையை விட்டு வெளியேறினர். அதையடுத்து உறுப்பினர்களும் வெளியேறிக்கொண்டனர். (த-7)

# சிறையில் இருந்து சபைக்கு வந்தார் கோமகன்

விடுதலைப்புலிகளுக்கு உதவி வந்ததாகச் சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ளபோதும் இதுவரை வழக்கு பதிவு செய்யப்படவில்லை. வழக்குப் பதிவு செய்தால்தான் குற்றம் என்ன என்பது குறித்து தெரியவரும் என யாழ். மாநகரசபையில் நேற்று நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் தெரிவித்தார் ஆளும் கட்சி உறுப்பினர் கோமகன்.

நேற்று யாழ். மாநகரசபையின் மாதாந்த பொதுக் கூட்டம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் ஆரம்பமானபோது ஏற்கனவே கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள ஆளும் கட்சி உறுப்பினர் கோமகனும் கலந்து கொண்டார். கடந்த ஆண்டு செப்ரெம்பர் மாதத்துக்குப் பின்னர் சுமார் ஒரு வருடம் கழித்து நேற்றைய கூட்டத்தில் அவர் கலந்து கொண்டார்.

எனது கோரிக்கையின் பேரிலேயே எனது வங்கிக் கணக்கில் எனது கொடுப்பனவுகள் வைப்பிலிடப்பட்டன. இதில் ஊழல் எதுவும் இல்லை. வங்கிக் கணக்கில் இருந்து நான் இன்னும் [illegible] பனவுகளை எடுக்கவில்லை - என்றார் கோமகன். [illegible]

# காணிப்பதிவு விண்ணப்பப் படிவங்களை விநியோகிக்க உறுதியைக் கோரமுடியாது

## அவ்வாறு கோரினால் முறையிட வசதி

யாழ்ப்பாணம்,செப்.30

'மண்ணின் மகிமை' வேலைத் திட்டத்தின் கீழ் காணிகளைப் பதிவு செய்ய மக்களுக்கு விநியோகிக்கப்பட வேண்டிய விண்ணப்பப் படிவங்களை கிராம சேவகர்கள் எந்தவித ஆவணங்களையும் கோராமல் விநியோகிக்க வேண்டும். அதேபோல எந்தபூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களையும் எவ்வித ஆவணங்களையும் கோராமல் ஏற்காது விட்டால் மக்கள் எழுத்து மூலமாக வடமாகாண காணி ஆணையாளருக்கு முறைப்பாடு செய்ய முடியும். அவ்வாறு செய்யப்படும் முறைப்பாடுகள் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுக்கு நேரடியாக அனுப்பப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு வடமாகாணக் காணி ஆணையாளர் 'உதயனுக்கு' தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

'மண்ணின் மகிமை' வேலைத் திட்டத்தின் கீழ் காணிகளைப் பதியும் விண்ணப்பப்படிவங்களைச் சில கிராம சேவையார்கள் மக்களுக்கு வழங்கும்போது காணி உறுதிகளை அல்லது அதன் பிரதிகளை சமர்ப்பிக்குமாறு வற்புறுத்துகின்றனர். இது தொடர்பாகப் பலரிடமிருந்து எனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

அத்துடன் விண்ணப்படிவங்களை மீள சமர்ப்பிக்கும் போதும் கிராம சேவையாளர்கள் காணி உறுதிகளை மக்களிடம் கேட்கின்றனர். இந்த விண்ணப்பப்படிவங்கள் தகவல்களைப் பெறும் படிவம் மட்டுமே. இந்தப் படிவங்களை நிபந்தனையின்றிப் பெற்றுக்கொள்வதற்கு மக்களுக்கு உரிமை உண்டு. அவற்றை மக்களுக்கு வழங்காவிட்டால் அது மக்களின் உரிமையை மீறும் செயல்.

எனவே இவ்வாறான விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் எமது அலவலகத்துக்கு நேரடியாக எழுத்து மூலமான முறைப்பாடுகளை மேற்கொண்டால் அவற்றை நேரடியாகப் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக்கு அனுப்பி நடவடிக்கை எடுக்கப்படும்.

கிராம சேவையாளர்கள் விண்ணப்பப் படிவங்களை ஏற்க மறுத்தால் பிரதேச செயலகத்திலோ அல்லது மாகாணக் காணி ஆணையாளர் அலுவலகத்திலோ அல்லது காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுக்கோ அவற்றை அனுப்பி வைக்க முடியும் - என்றார். (த-15)

# கண் பரிசோதனை முகாம்

தென்மராட்சி, செப். 30

சுகாதார அமைச்சின் விஷன் 2020 திட்டத்தின் கீழ் சாவகச்சேரி வைத்தியசாலையில் விசேட கண் பரிசோதனை முகாம் நடத்தப்படவுள்ளது. எதிர்வரும் நான்காம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30மணி தொடக்கம் வைத்தியசாலையின் 26 ஆம் இலக்க அறையில் கண் சிகிச்சை நிபுணர்களால் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. ஏற்கனவே பதிவு செய்யாதவர்களை கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-207)

# மாணவர் மனமகிழ் தினம்

தென்மராட்சி, செப்.30

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலய மனமகிழ் தின நிகழ்வுகள் நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்றன.

இந்த நிகழ்வில் தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தமூர்த்தி, சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு. சிவானந்தம், ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் [illegible] [illegible]கர்களான து. செல்வராசா, செல்வி இ. இராமலிங்கம், கல்வி வலய பதவிநிலை உதவியாளர் பொன். தர்மேந்திரா ஆகியோர் கலந்து கொண்டு மாணவர்களுடன் அளவளாவியதுடன் வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற சிறுவர் நிகழ்வுகளை மாணவர்களுடன் அமர்ந்து பார்வையிட்டு மாணவர்களை மகிழ்வித்தனர்.

இந்த நிகழ்வு மாணவர்களை பெரிதும் கவர்ந்துள்ளதாக வித்தியாலய அதிபரும் ஆசிரியர்களும் தெரிவித்தனர். (த-207)

# சிறைச்சாலைகள் இடம்மாறுகின்றன

கொழும்பு, செப். 30

பொரளை சிறைச்சாலையை தற்போதைய இடத்திலிருந்து மஹர, வட்டரெக்க மற்றும் களுத்துறைக்கும், தங்காலை சிறைச்சாலையை ரான்ன, மாத்தறைக்கும் மற்றும் காலி சிறைச்சாலையை பிட்டபெத்தரவுக்கும் மாற்றுவது தொடர்பாக அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பத்திரத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவால் குறித்த பத்திரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. பல்வேறு செயற்றிட்ட அறிக்கைகளை ஆராய்ந்த பின்னரே குறித்த திட்டம் அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருவருக்கு அபராதம்

தென்மராட்சி,செப்.30

கைத்தொலைபேசியில் உரையாடிய வண்ணம் வீதியில் வாகனம் செலுத்திச் சென்ற இருவர் யாழ். நீதிமன்றில் 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எல்லையில் இவ்வாறு உரையாடிய வண்ணம் சென்ற இருவரையும் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து நேற்று நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர் படுத்தினர்.

இவர்களை விசாரித்த நீதிவான் இருவரும் தமது குற்றத்தை ஒப்புக் கொண்டதை அடுத்து தலா 4 ஆயிரம் ரூபா வீதம் 8 ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

இதேவேளை மது அருந்திவிட்டு வாகனம் செலுத்தியமை, சாரதி அனுமதிப்பத்திரம், வாகனப் பதிவுப் புத்தகம் இன்றி வாகனம் செலுத்திச் சென்றவருக்கு நீதிமன்றம் 7 ஆயிரம் ரூபா அபராதம் விதித்தது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட பகுதியில் இவர் அவ்வாறு சென்றபோதே பொலிஸார் இவர் மீது வழக்குப் பதிவு செய்தனர். இவரைப் பொலிஸார் நீதிமன்றில் நேற்று ஆஜர் படுத்தினர். இதன்போது நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா இந்த அபராதத் தொகையை விதித்தார். (த-4)

## யாழ். நகரில் தொழில் வாய்ப்பு, வெளிநாட்டு உயர்கல்வி சம்பந்தமான இலவச கருத்தரங்கு

**கருத்தரங்கில்**

* நீங்களும் ஒரு ஆசிரியர் ஆகலாம்.
* நீங்களாகவே மாதாந்த சுய வருமானத் தைத் தேடிக்கொள்ளலாம்.
* நீங்களும் கல்வி நிறுவனம் ஒன்றை சுய மாக ஆரம்பிக்கலாம்.
* London, USA, Canada போன்ற நாடு களில் உயர் கல்வி
* கனடா நாட்டின் புதிய வேலைவாய்ப்புக் கள்.

*இன்னும் சுவாரசியமான விடயங்களை இந்த இலவச கருத்தரங்கில் கலந்து பயனடையுங்கள். ஆர்வமுடையோர், பெற்றோர், மாணவர்கள் அனைவரும் வரலாம்; அனுமதி இலவசம்.*

இடம்: Green Grass Hotel, (No.33, Hospital Road, Jaffna) Asirwatham Lane.

காலம்: சனிக்கிழமை (01.10.2011)

நேரம்: காலை 9.30 முதல்

**Greenwich College,
No.34, Galle Road,
Dehiwala.**

**தொடர்புகளுக்கு: 0775083460**

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## அறிவித்தல்

**பல்கலைக்கழக அனுமதி-கல்வியாண்டு 2010/2011 புதிய மாணவர்களை பதிவு செய்தலைப் பிற்போடல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொதுப்பட்ட மளிப்புவிழா எதிர்வரும் 06.10.2011 அன்று நடைபெற இருப்பதால் அன்றைய தினம் புதிய மாணவர்களைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் நடைபெறமாட்டாது.

மீண்டும் 10.10.2011 தொடக்கம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அனுமதிகள் கிளையில் புதிய மாணவர்களைப் பதிவு செய்தல் இடம்பெறும் என்பதை அறியத்தருகிறேன்.

மேலதிக விவரங்களுக்கு 021-2226714 என்ற தொலைபேசி எண் ஊடாக அனுமதிகள் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

பதிவாளர்
29.09.2011.

## இதய அஞ்சலிகள்



எமது கல்லூரியின் முன்னாள் அலுவலகப் பணியாளரும், பழைய மாணவர் சங்க உறுப்பினருமாகிய

அமரர் **செல்லப்பா சுந்தரலிங்கம்**

அவர்களின் ஆத்மா சாந்திபெற இறை வனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
யா/செங்குந்த இந்துக் கல்லூரி,
திருநெல்வேலி கிழக்கு, யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

பருத்தித்துறைப் பிரதேச செயலக கிராம அலுவலராகக் கடமையாற்றும் திருமதி. சாருமதி அவர்களின் அன்புக் கணவர்

அமரர் **கதிரவேலு தியாகராசா**

கடந்த 27.09.2011 செவ்வாய்க்கிழமை அகால மரணமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரதேச செயலகம்,
பருத்தித்துறை.


பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும்.
ஊழியர் நலன்புரி சங்கம்.

## உடனடியாக வீட்டுப் பணிப்பெண் தேவை

வீட்டில் தங்கியிருந்து இரண்டு வயதுக் குழந்தையைப் பராமரிப்பதற்கும், வீட்டு வேலைகளைச் செய்வதற்குமாகப் பணிப் பெண் தேவையாகவுள்ளது. திருப்தியான சம்பளம் தரப்படும்.

**தொடர்பு: 0778284837**

## ONE YEAR DIPLOMA
## MULTIMEDIA



Coreldraw, R.A.V.E
Photoshop, Morph
Flash, Sound Forge
Premiere, Combustion
3D Studio Max
Charactor Studio
Director, Project.

CSC-ASIAN
COMPUTER EDUCATION

யாழ்.நகர் - 2G ஸ்ரான்லி வீதி, 021 2225677
நெல்லியடி - கொடிகாமம் வீதி, 021 2262399
சாவகச்சேரி- 230, கண்டி வீதி, 021-2270267

## COMPUTER COURSES

Diploma in Computerized **Accounting** — Tally, Quick Book, Accpac, M.Y.O.B

Diploma in **Video Editing** — Premiere Pro CS4, particleillusion, Pinnacle Studio, Adobe After Effe. Nuendo,

Diploma in **AutoCAD** — 2D & 3D Modeling

Adv. Dip. in **Hardware & Networking**

புதிய பிரிவுகள் ஆரம்பம்.

**DMI COMPUTER EDUCATION**

DMI COMPUTER EDUCATION

யாழ்ப்பாணம் .Tel.: 021-222 4403
நெல்லியடி. Tel. : 021-226 2470
சாவகச்சேரி. Tel. :021-227 0243

## வீடு வாடகைக்குத் தேவை

யாழ் நகரில் சிறிய குடும்பம் ஒன்றுக்கு வசதியான வீடு உடனடியாகத் தேவை

தொடர்புகளுக்கு:0778284837

## காணி விற்பனைக்கு

மீசாலை கிழக்கு, அல்லாரை வீதி, ஏகாம்பரம் ஒழுங்கையில் பயன்தரும் தென்னைமரங் களும், கிணறும் சேர்ந்த 13 பரப்புக் காணி விற் [illegible]

தொடர்புகளுக்கு:0779103628

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலி

கடந்த 31.08.2011 புதன்கிழமை அன்று சிவபதமடைந்த எமது சபையின் சக உத்தியோகத்தர் திருமதி அபிராமி சுதர்சன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர் **இளையதம்பி நவரத்தினம்**

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை. (மல்லாகம்)

ஊழியர், நலன்புரி சங்கம்,

## மரண அறிவித்தல்

### கண்ணதாசன் கிருஸ்ணரூபன்
(கிருஸ்ணா)



மண்டைதீவு 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட க. கிருஸ்ணரூபன் 29.09.2011 வியாழக்கிழமை அகால மரண மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தரும லிங்கம்-அன்னலெட்சுமி தம்பதியர் மற்றும் அல்லைப்பிட்டி இராசலிங்கம்-பரமேஸ்வரி தம்பதியரதும் அன்புப் பேரனும், கண்ணதாசன்-மேனகா தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும், வாகீசனின் அன்புச் சகோதரனும் ரூபிகா (லண்டன்), ரேணுகா ஆகியோரின் பெறாமகனும், பிறேமகாந்தனின் (சுவிஸ்) மருமகனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக மண்டைதீவு இந்து மயானத்துக்கு இன்று (30.09.2011) வெள்ளிக்கிழமை மு.ப. 10 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6 ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

## சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**எரிபொருள் நிரப்புநர் பதவிக்கு தகுதியான ஆண்பாலாரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது**

1. சம்பள குறியீட்டு இலக்கம் - 313/16 (சுற்று நிருப இல.165/88 இன் படி)
2. சம்பள அளவுத்திட்டம் - ரூபா.9200-70X10-75X10- ரூபா 10650 (சுற்று நிருப இல.66/2006)
3. தகைமைகள்-

அ) கூட்டுறவுப் பணியாளர் 17 வது சம்பளத்திட்டத்தில் ஒரு வருடத்துக்குக் குறையாத அனுபவம் *அல்லது*

ஆ) எட்டாம் (08) வகுப்பு கல்வித் தராதரப் பத்திரம்

**பொது**

1. மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் சங்கத்திலிருந்து பெறப்பட்ட விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி விண்ணப்பத்தை "பொதுமுகாமையாளர், சாவகச்சேரி பலநோக்கு கூட்டுறவுச்சங்கம் (வ-து), கண்டி வீதி, சாவகச்சேரி" என்ற முகவரிக்கு கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'எரிபொருள் நிரப்புநர் பதவிக்கான விண்ணப்பம்' எனக் குறிப்பிட்டு அனுபவ தகைமைச் சான்றிதழ்களின் பிரதிகளையும் இணைத்து பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
2. சங்க எல்லைப் பரப்பினுள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.
3. வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கத்தி னூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.
4. வயது-18 தொடக்கம் 45 வரை (சங்கப்பணியாளர்களுக்கு வயதெல்லை பொருந்தாது)
5. விண்ணப்ப முடிவுத் திகதி - 15.10.2011
6. இந்தப்பதவிக்கு விண்ணப்பம் செய்யும் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து சங்கத்தால் குறிப்பிடப்படும் ரொக்கப்பிணையைச் செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.

சாவகச்சேரி ப.நோ.கூ.சங்கம் (வ-து)
சாவகச்சேரி

பொதுமுகாமையாளர்.

## நெஞ்சம் மறவாத பதினொராவது ஆண்டு



தோற்றம்: *21.11.1937*
மறைவு: *30.09.2000*

**பொன்னையா குகதாசன்**
*(பிரபல கட்டடக் கலைஞர்)*

*தன்மானமும் தனித்துவமுமே
தாரக மந்திரம் என வாழ்ந்த அப்பாவே!
தரணியில் நாமும் தன்னிறைவுடன் வாழ
தளம் அமைத்துத் தந்தீரே
தரணியினை விட்டகன்று
பதினொராண்டு சென்றாலும்
தளரவில்லை நாம் இங்கே
தங்கள் வழியில் எங்கள் பயணம் தொடரும்*



'கேமாலயம்',
அல்வாய்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# நிறம்மாறுவது தான் அரசியலா?

இலங்கை அரசாங்கத்தின் மீது போர்க் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் செலயாளர் நாயகம் பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையை, சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டு விட்டது -

ஆகையால், போர்க்குற்றங்கள் அடங்கலான, மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்த நாட்டின் அரசாங்கம் உடனடியாக, இந்த வருட இறுதிக்குள் சாதகமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். காலத்தை இழுத்தடித்துச் சென்றால் சர்வதேசத்தின் கடும் நெருக்கடிகளை இலங்கை சந்திக்க நேரிடும். -

இவ்வாறு கருத்து வெளியிட்டிருப்பவர் எதிர்க்காட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கா.

ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கையை இலங்கை நிராகரித்துள்ள போதிலும், சர்வதேசம் அதனை ஏற்றுக்கொண்டுள்ளது. அந்த அறிக்கை, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் சபையிலும் சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. மொத்தத்தில் இலங்கை அரசு மீதான - இந்த நாட்டின் மீதான - போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் இந்த அறிக்கை சர்வதேசத்தால் முக்கிய ஆவணமாகக் கருதப்படுகிறது; பார்க்கப்படுகிறது. - என்றும் அரசைப் பார்த்து ரணில் இடித்துரைத்திருக்கிறார்.

அது மட்டுமன்றி, போரில் பல பொதுமக்கள் உயிரிழந்ததையும், இங்கு ஜனநாயகம் முற்றாக அழிந்து போயுள்ளதையும் நாம் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும். இவற்றுக்கு பரிகாரம் கிடைக்கும் வரை அரசு தீவிரமாகச் செயற்பட வேண்டும் - என்றும் எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தி உள்ளார்.

எதிர்க்காட்சித் தலைவர் தமது நிலைப்பாட்டையும், அரசாங்கம் என்ன செய்ய வேண்டும் என்பதனையும் நாடாளுமன்றத்தில் பேசவில்லை. அவ்வாறு செய்திருப்பின் அது ஒரு கனதியான, பெறுமதியான ஆவணமாகி இருக்கும். அவ்வாறில்லையெனின் சர்வதேச ஊடகங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொள்ளும் ஊடக மாநாடு ஒன்றில் தெரிவித்திருப்பாராயின் சர்வதேசங்களையும் இது விடயத்தில் அக்கறை உள்ளவர்களையும், ஆர்வம் உள்ளோரையும் பரந்த அளவில் சென்றடைந்திருக்கும். அதன் மூலம் இது விடயத்தில், இலங்கையில் அரசின் நிலைப்பாட்டுக்கு மாறான கருத்தியல் பிரதான எதிர்க்கட்சியிடமும் உண்டு என்பது வெளிச்சத்துக்கு வந்திருக்கும்.

ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அவ்வாறு செய்வதை வேண்டுமென்றே தவிர்த்திருக்கிறார். அதனாலேயே தமிழ்மொழி ஊடகங்களுக்கென மட்டும் தமது செய்தியாளர் மாநாட்டை வரையறுத்து விட்டார்.

போரில் பல தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்ததை - கொல்லப்பட்டதை - ஏற்றுக்கொண்டாக வேண்டும் என்ற தமது கருத்தை வெளி உலகம் அறிந்து கொள்ளக்கூடாது என்பதே அவரின் உள்நோக்கம் என்பது துலாம்பரமாகத் தெரிகிறது. அவ்வாறு செய்து, தமது தாய் நாட்டை - அரசை - காட்டிக்கொடுத்தவன் என்ற துரோகிப் பட்டம், ''கெட்டபெயர்'' வாங்கக் கூடாது என நினைத்திருப்பார் போலும்!

இதனை இங்கே குறிப்பிடுவதற்குக் காரண காரியம் எதுவும் இல்லாமல் இல்லை.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தை, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா கடந்த ஜூலை மாதம் ஐந்தாம் திகதி (இரகசியமாகச்) சந்தித்துப் பேசியதை பின்னோக்கிப் பார்ப்பது பொருத்தமாக இருக்கும்.

அவ்வேளை, இலங்கை, தாய்நாடு போர்க்குற்றச்சாட்டுக்களால் பொறியில் சிக்கியுள்ளதை உணர்ந்து, அதிலிருந்து அதனைக் காப்பாற்றும் ராஜதந்திரத்தை நிறைவேற்ற முயன்றார் ரணில். அவரது கருத்துக்கள் முழுக்க முழுக்க அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கும் தொனியில் அமைந்திருந்தன.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை உள் நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் இலங்கையை மட்டம் தட்டும் நிலையை உண்டாக்கி உள்ளதாக அன்று பான் கீ மூனுடனான சந்திப்பின்போது மனம் வெதும்பிய குரலில் குறிப்பிட்ட ரணில், இன்று நிபுணர் குழுவின் அறிக்கையைச் சர்வதேசம் ஏற்றுவிட்டது என அரசை எச்சரிக்கும், அச்சுறுத்தும் தொனியில் கருத்து வெளியிட்டிருக்கிறார்.

இந்த விடயத்தில் முன்னேற்றம் காண்பதற்கு தமிழ் மக்களின் மன எழுச்சியை - உணர்வுகளை - மட்டும் கருத்தில் கொள்ளாமல், நாட்டு மக்கள் அனைவரினதும் உணர்வுகளைக் கருத்தில் எடுக்க வேண்டும் என்று பான் கீ மூனுக்கு ஆலோசனை தெரிவித்ததன் மூலம், ஜனாதிபதி மஹிந்தவுக்கும் அவரது அரசுக்கும் அன்று வக்காலத்து வாங்கியவர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில். இன்று திடீரென சுடலை ஞானம் வந்தது போல, இந்த விடயத்தில் அரசு உடனடிக் கவனம் செலுத்திச் செயற்படவேண்டும் என அரசைக் குற்றம் சாட்டும் வகையில் கருத்து வெளியிடுவதில் உள்ள மர்மம் என்ன?

சோழியன் குடுமி சும்மா ஆடாது.

எதிர்வரும் எட்டாம் திகதி இடம்பெறவுள்ள கொழும்பு மாநகரசபைத் தேர்தலை மனதில் வைத்தே, அவர் தமிழ் ஊடகவியலாளர்களிடம் மட்டும் இத்தகைய இறுக்கமான கருத்தை வெளிப்படுத்தியிருப்பார் என்று கொள்ளலாம்.

தமிழர் பிரதேசங்களுக்கு வெளியே, தமிழ் மக்கள் பெரிய அளவில் செறிந்து வாழும் பிரதேசம் கொழும்பு மாவட்டமே. எந்த ஒரு தேர்தலிலும் அரசியல் கட்சிகளின் வெற்றியைத் தீர்மானிப்பதில் கொழும்பு வாழ் தமிழ் மக்களின் வாக்குகள் கணிசமான அளவு முக்கியத்துவம் பெற்றிருந்தன. இப்போதும் அதே நிலை காணப்படுகிறது.

அந்த வகையில், இடம்பெறவுள்ள கொழும்பு மாநாகராட்சித் தேர்தலில் ஐ.தே.கட்சியின் வாக்கு வங்கியை உயர்த்திக்கொள்ள, கொழும்பு வாழ் தமிழ் வாக்காளர்களின் வாக்குகளை ஐ.தே.கட்சிக்கு பெற்றுக் கொள்ள, ரணில் அடித்திருக்கும் அவசர குத்துக்கரணமே தமிழர் மீதான அனுதாபத்தை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ள கருத்தியல்.

அரசியல் வாதிகள், அரசியல் தலைவர்கள் என்றால், கால வர்த்தமானங்களுக்கு ஏற்பத் தம்மை - தமது கருத்துக்களை - மாற்ற வேண்டும் என்பது அவர்களுக்கான ஒழுக்கக் கோவையாகி இருக்கிறது. ஏனைய நாடுகளை விட அது இலங்கையிலேயே அதி பிரசித்தமாகி வருகிறது. அவ்வளவு தான்...!

# வடமாகாண கிராமிய சிறுவர்களை உள்ளடக்கிய சிறுவர் தின நிகழ்வு

யாழ்ப்பாணம், செப்.30

வடமாகாண கிராமிய சிறுவர்கள் பங்குபெறும் சர்வதேச சிறுவர் தின நிகழ்வு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

காரைநகர் கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய மாணவி செல்வி. கிந்துஜா பாலசிங்கம் தலைமையில் நிகழ்வு இடம் பெறவுள்ளது.

வடமாகாண கல்வி விளையாட்டுத் துறை அமைச்சின் செயலாளர் இ. இளங்கோவன் பிரதம விருந்தினராகவும் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பிராந்திய இணைப்பாளர் எஸ்.சிவசங்கர், மாவட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் சி.சிவகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

சிறுவர் அபிவிருத்தி நிலையத்தின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமாகும் இந்த நிகழ்வில் காரைநகர், கல்மடு, கிளிநொச்சி, வவுனியா, வடமராட்சி கிழக்கு, மன்னார், கெற்பேலி, செட்டிக்குளம் ஆகிய இடங்களிலுள்ள சிறுவர் கழகங்களின் கிராமிய கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

(ம-14)

# தேசிய சுகாதார வார நிகழ்வுகளை பிரதேச ரீதியாக நடத்த அறிவுறுத்து

தென்மராட்சி, செப். 30

நாடளாவிய ரீதியிலான தேசிய சுகாதார வாரத்தை ஒக்ரோபர் மூன்றாம் திகதி தொடக்கம் ஒன்பதாம் திகதி வரை அந் தந்தப் பிரதேசங்களில் நடத்துமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

பொலிஸார், உள்ளூராட்சிச் சபைகள், சுகாதாரத் திணைக்களத்தினர் ஆகியோர் இணைந்து நுளம்புக் கட்டுப்பாட்டு வேலைத் திட்டங்களை மேற்கொள்ளுமாறும் அறிவித்துள்ளது.

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவினர் தென்மராட்சிப் பிரதேசத்தில் இந்த வாரத்தில் பல்வேறு செயற்றிட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

முதல் நாளான மூன்றாம் திகதி தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ள திணைக்களத் தலைவர்களுடனான கலந்துரையாடல் பிற்பகல் 2 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இரண்டாம் நாள் கைதடி, மட்டுவில், கல்வயல், சாவகச்சேரி நகர்ப்பகுதி, மந்துவில் பொதுச்சந்தை, கொடிகாமம் வைத்திய சாலை ஆகிய இடங்களில் சிரமதானப் பணிகளும், மூன்றாம் நாள் கைதடி முத்துக்குமார சுவாமி ம.வி, மட்டுவில் சந்திரமௌலீச, வித்தியாலயம், சாவகச்சேரி றோ.க.த.க. பாடசாலை,மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மிருசுவில் றோ.க.த.க. பாடசாலை, நுணாவில் அமிர்தாம்பிகை வித்தியாலயம் ஆகியவற்றில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளும் இடம்பெறவுள்ளன.

நான்காம் நாளான 6 ஆம் திகதி சாவகச்சேரி நகரம், வரணி சந்தை, கைதடி பொதுச் சந்தை, சரசாலைச் சந்தி, கொடிகாமம் நகரம் ஆகிய இடங்களில் அவதானிப்புக்களை மேற்கொள்ளலும் ஐந்தாம் நாள் கைதடி அரச முதியோர் இல்லத்தில் நடமாடும் வைத்திய சேவையும் முதியோர்களுக்கான விளையாட்டுப் போட்டிகளும் ஆறாம் நாள் டெங்கு மற்றும் போசாக்குக் கண்காட்சியும் டெங்கு ஒழிப்பு நடவடிக்கைகளில் சிறப்பாகச் செயற்பட்ட உத்தியேகத்தர்கள் பாராட்டிக் கௌரவித்தலும் இடம்பெறும்.

இறுதிநாள் இரத்ததான நிகழ்வுகளும் இடம்பெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

(ம-207-86)

# கணித உபகரணம் தயாரித்தல் போட்டி

ஆசிரியர்களுக்கான கணித உபகரணம் தயாரித்தல் போட்டி வலய, மாகாண, தேசிய மட்டங்களில் நடைபெற உள்ளது.

இப்போட்டியில் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படவுள்ளன.

ஆசிரியர்கள் தங்களது விண்ணப்பங்களை ஒக்ரோபர் 20 ஆம் திகதிக்கு முன்னர் வலயக் கல்விப் பணிமனையில் ஒப்படைக்க வேண்டும்.

கணித பாடம் கற்பித்தலில் இலகுவாகவும், விளையாட்டுக்களுடனும் பயன்படுத்தக் கூடியதாகவும், ஆசிரியரின் சுய ஆக்கமாக இருக்கும் உபகரணங்கள் போட்டிக்கு தகுதியுடையவை என்று மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-267)

# கோயிற் கட்டடக் கலைகளின் ஊடாக வரலாற்றைப் பேணல்

கோயில் கட்டும் முறை எம்மால் தொன்று தொட்டுக் கையாளப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் கோயிற் கட்டடக் கலை கி.பி. 8 ஆம் நூற்றாண்டில் சிறப்புற்றிருந்ததாகக் குறிப்பிடுவர். எட்டாம் நூற்றாண்டில் பல புதிய கோயில்கள் உருவாகின. ஏற்கனவே இருந்த கோயில்கள் புதுப்பிக்கப்பட்டுப் புத்துருவம் பெற்றன.

கோயிற் கட்டடக் கலையை மூன்று பிரிவாக வகைபபடுத்திக் காட்டுவர். அவை நாகரம், வேசரம், திராவிடம் என்பனவாம். நாகரம் என்னும் பிரிவை சார்ந்த கோயில்கள் வட இந்தியாவில் உள்ளன. இவை அடியில் இருந்து உச்சிவரை நாற்சதுரமாக இருக்கும். வேசரம் என்னும் இனத்தைச் சார்ந்தவை பிரதானமாகப் பௌத்த கோயில்களாக விளங்கின. விமான அமைப்பிலும் கட்டட அமைப்பிலும் வட்டவடிவமாக அமைபவை. திராவிட அமைப்பிலேயே வைதிக நெறிக்குரிய ஆலயங்கள் தென்னாட்டில் அமைக்கப்பட்டன. ஈழத்தில் உள்ள ஆலயங்களும் திராவிடக் கட்டடக்கலை மரபைச் சார்ந்தவை யாகும்.

தமிழகத்தில் ஆட்சி செய்த ஆட்சியாளர்கள் மறைந்து விட்டாலும் அவர்கள் பற்றிய வரலாற்றை எழுதுவதற்கு கோயில் கட்டடக் கலையும் ஆதாரமாக விளங்குகின்றது.

எமது பிரதேசத்தில் தற்போது புதிய கோயில்கள் கட்டப்படுகின்றன. பல கோயில்கள் புனருத்தாரணம் செய்யப்பட்டுப் புதுவடிவம் எடுத்து வருகின்றன. இனிவரும் காலத்தில் எமது வரலாறு எப்படியாகுமோ என்ற ஏக்கம் எம்மத்தி யில் உள்ள இக்காலகட்டத்தில் கோயிற் கட்டடக் கலையில் கோயில் சார்ந்த வரலாற்றுப் பதிவுகளை, சம்பவங்களை இடம் பெறச்செய்தல் சாலப் பொருத்தமுடையதாக அமையும்.

ஞானக்கதிர்

எம் பிரதேசத்தில் உள்ள பெரும்பாலான கோயில்கள் ஏதோ ஒரு தெய்வீக வரலாற்றுடன் அல்லது சம்பவத்துடன் தொடர்புடயவை. இவற்றைச் சிற்பங்களாகச் செதுக்கி ஆலயக் கோபுரத்திலோ அன்றிக் கருவறையின் மீதுள்ள விமானத்திலோ, கோவில் சுற்றுப் பிரகாரங்களிலோ நிலைபெறச் செய்வது எம்மவரின் இருப்புக்கு ஆதாரமாக அமையும்.

*ச. லலீசன், விரிவுரையாளர், கோப்பாய் ஆசிரிய கலாசாலை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.மாவட்டத்தில் விலங்கு விசர்நோய் தாக்கம் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது

## இந்த வருடம் இறப்புகள் பதிவாகவில்லை





யாழ்ப்பாணம், செப்.30

பொதுச் சுகாதார பரிசோதகர்களின் தீவிர நடவடிக்கைகளால் இந்த வருடம் யாழ். மாவட்டத்தில் விலங்கு விசர் நோயால் எவரும் இறக்காது பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன்.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் நேற்று முன்தினம் தியாகிகள் அறக்கொடை நிலையத்தில் உலக விலங்கு விசர் நோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வுக் கருத்தரங்கு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் தலைமையுரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது தெரிவித்ததாவது:

விலங்கு விசர் நோய்க்குச் சிகிச்சைகள் எதுவும் கண்டுபிடிக்கவில்லை. விலங்கு விசர் நோய் ஏற்படும் ஒருவர் நிச்சயம் மரணத்தை எதிர்கொள்ள வேண்டிவரும்.

2004 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் 13 பேர் விலங்கு விசர் நோயால் இறந்ததை முன்னிட்டு 2006 ஆம் ஆண்டு திட்டவட்டமாக நாய்களுக்கு தடுப்பு ஊசி வழங்கும் நடவடிக்கை 10 வீதமே மேற்கொள்ளப்பட்டது.

அதன் பின்னர் 2009 ஆம் ஆண்டு 78 வீதமும், 2010 ஆம் ஆண்டு 83 வீதமும் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

விலங்கு விசர் நோய்க்கான தடுப்பு மருந்துக்கு அதிகளவான பொருளாதாரம் தேவைப்படுவதால் பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்கி யாழ். மாவட்டத்தில் முற்றாக விலங்கு விசர் நோயைத் தடுக்க ஆதரவு வழங்க வேண்டும்.

ஆரம்பப் பொதுச் சுகாதாரத்தில் இலங்கை முதலிடத்தில் இருப்பதால் அதனைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பும் எம்மிடம் உள்ளது.

இலங்கையில் சராசரி யாக வருடந்தோறும் 50 முதல் 60 வீதமானவர்கள் நோயால் இறப்பைச் சந்தித்தனர்.

யாழ். மாவட்டத்தில் 10 வீதமானோர் இறப்பைச் சந்தித்து வந்தனர்.

இதனால் தொற்று நோயில் இருந்து பொதுமக்களைப் பாதுகாக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.- என்றார். (ம-4-313)

# மீளக்குடியமரும் ஆர்வத்தில் சென்ற கிளாலி மக்கள் ஏமாந்து வந்தனர்

தென்மராட்சி, செப்.30

மீளக்குடியமரும் ஆர்வத்தில் சென்ற கிளாலி மக்கள் பெரும் ஏமாற்றத்துடன் திரும்பி வந்தனர்.

பச்சிலைப்பள்ளி பிரதேசத்தைச் சேர்ந்த கிளாலி பிரிவில் கடந்த திங்கட்கிழமை மீளக்குடியமர்வு இடம்பெறுமென கிளிநொச்சி மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டது.

இதனையடுத்து அந்தப் பகுதி மக்கள் தமது காணிகளைப் பார்வையிட காலையிலேயே கிளாலி சந்தியில் காத்திருந்தனர்.

கடந்த 15 வருடங்களின் பின்னர் தமது சொந்தக் காணிகளில் மீளக்குடியமரும் ஆர்வத்துடன் காத்திருந்த மக்களுக்கு மீளக்குடியமர்வு திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்ற தகவல் கிடைத்தது. தவிர மீளக்குடியமர்வுக்காக எந்தவொரு அதிகாரியும் வராததால் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

மக்கள் மீளக்குடியமர் வில் காட்டிய ஆர்வம் காரண மாகத் மீளக்குடியமர்வுத் திகதி கள் பிற்போடப்பட்டமை குறித்து வெளியான செய்திகளைக் கூட அவதானிக்கவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (ம-207)

# சுதுமலை அம்பாளின் இறுவட்டில் தென்னிந்திய பாடகரின் பாடல்கள்

யாழ்ப்பாணம் .செப்.30

சுதுமலை அம்பாளின் பெருமையை எடுத்துக் காட்டும் அம்பிகை அருளாலே இறுவட்டு வெளியீட்டு விழாவில் தென்னிந்திய இசையமைப்பாளர் அக்னி, பாடகர்கள் ராகுல், ஹேமாம்பிகா ஆகியோர் பாடல்களைப் பாடினர்.

இந்த நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

பெருந்திரளான மக்கள் திரண்டிருக்க சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழகத்தால் அம்பிகை அருளாலே -பாகம் 2 இசை இறுவட்டு வெளியிட்டு வைக்கப்பட்டது.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் தலைமையில் வெளியீட்டு விழா இடம்பெற்றது.

பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், திருமதி சண்முகலிங்கன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யாழ்.பல்கலைக்கழக தமிழ்த் துறை பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா சிறப்புரையாற்றினார்.

வெளியீட்டு உரையை ஆசிரியர் இ.குகானந்தன் வழங்க முதல் பிரதியைச் சுதுமலை அம்பாள் விளையாட்டுக் கழக இணைப்பாளர் இ.றஜீவன் பெற்றுக் கொண்டார். (ம-302)

# குற்றச்செய்திகள்

வருமானவரிப் பத்திரமின்றியும் போக்குவரத்து விதிமுறைகளை மீறியும் வாகனம் செலுத்திச் சென்ற நபர் யாழ். நீதிமன்றில் ஆயிரத்து ஐநூறு ரூபா அபராதம் செலுத்தினார்.

யாழ். பொலிஸார் அவருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அதன்போதே நீதிவான் இந்த அபராதம் விதித்தார்.

* * *

போக்குவரத்து விதிமுறைகளை மீறி வாகனம் செலுத்திச் சென்றவர் யாழ். நீதிமன்றில் ஆயிரத்து ஐநூறு ரூபா அபராதம் செலுத்தினார்.

யாழ். பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இவ்வாறு செலுத்திச் சென்ற போதே பொலிஸார் அவர் மீது வழக்குப் பதிவு செய்து நீதிவான் ஏ.ஏ. ஆனந்தராஜா முன்னிலையில் ஆஜர்படுத்தினர். அதன்போதே நீதிவான் இவ்வாறு அபராதம் விதித்துத் தீர்பபளித்தார். (ம-4)

# தற்கால இளைஞரின் பழக்கவழக்கம் முற்றிலும் மாறுபட்ட வகையில் உள்ளது

## ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் சந்திரகுமார் எம்.பி.

யாழ்ப்பாணம், செப்.30

தற்கால இளைஞர்களின் பழக்க வழக்கம் முற்றிலும் மாறிவிட்டது. பெண்கள் மீது சேஷ்டை விடுவதும் காதலித்துக் கைவிடுவதும் ஏமாற்றுவதும் வல்லுறவு செய்வதும் சாதாரணமாகிவிட்டது.

கடந்த கால போராட்ட காலங்களில் இந்த நிலை இறுக்கமாக இருந்தது. இதனை அவதானிக்கக் கூடியதாகவும் இருந்தது.

வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

வலி.தென்மேற்கு பிரதேச செயலக பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. கூட்டத்துக்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்ததாவது:

கடந்த 30 ஆண்டுகாலத்தில் கற்பழிப்பு மற்றும் களவு போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டோரின் தலையில் சூடு விழுந்த காலம் ஒன்று இருந்தது. அந்தக் காலங்களில் மனிதனின் கையில் சட்டம் இருந்தது. அவ்வாறான பழக்கதோசத் துக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் நீங்கள்.

இன்று நிலைமை மாறிவிட்டது. சட்டம், நீதி என்பவற்றை நிலைநாட்ட பொலிஸ் மற்றும் நீதித்துறை உள்ளது. கிறீஸ் மனிதனுக்கு மோகினி, பிசாசு என்ற பெயர் இன்று சூட்டப்பட்டுள்ளது. இது நாளைய ஊடகங்களில் ஊதி பெருப்பிக்கப் படவுள்ளது.

ஆனால் இந்தப் பூதம், இதன் செயற்பாடு தணிந்து வருகின்றது. இதன் பின்னால் ஒரு சக்தி இருக்கிறது.- என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட வலி.தென்மேற்குப் பிரதேசசபை உறுப்பினர் க.கௌரிகாந்தன் தெரிவிக்கையில்:

நவாலி கல்லுண்டாயிலும் நவாலி தெற்கு கேணியடியிலும் கொட்டப்பட்ட கழிவுகளை அகற்ற முன்வரவேண்டும்.

இதனால் நவாலி மக்களை காசநோய், இருமல் மற்றும் பேரழிவை தரக்கூடிய நோய்கள் தாக்கவுள்ளன.

வலி.தென்மேற்குப் பிரதேச செயலருக்கு நவாலி தெற்கு கேணியடி கழிவுகளால், கல்லுண்டாய் கழிவுகளால் ஏற்படும் பிரச்சினையைத் தெளிவுபடுத்தினார். தொடர்ந்து சண்டிலிப்பாய் கால் நடை வைத்திய நிலையம் தொடர்பாகப் பிரச்சினை முன் வைக்கப்பட்டது.

இதில் சபை குழம்பும் அளவுக்கு பண்டத்தரிப்பு, சண்டிலிப்பாய் மக்கள் காரசாரமான விவாதத்தில் ஈடுபட்டனர்.

இதனால் பிறிதொரு திகதியில் இதற்கான தீர்வை எடுப்பதாக தலைவர் கூறினார். கூட்டத்தில் பிரதேச சபை தலைவர் அ. ஜெபநேசன், முன்னாள் தலைவர் வெ.அ. ஜோன்சன், பிரதேச சபை செயலர் திருமதி பு.சிவலிங்கம், பிரதேச செயலர் எ.அ. யோகநாயகம், திட்ட மிடல் உதவிப் பணிப்பாளர் எஸ். நிரஞ்சனா மற்றும் அனைத்துத் திணைக்கள அதிகாரிகளும் கலந்து கொண்டனர். (ம-115)

# சிறைச்சாலைகளும் பொலிஸ் நிலையங்களும் வடக்குப் பிரதேசத்துக்கு தேவையில்லை

## அருட்தந்தை றொசான்

யாழ்ப்பாணம், செப்.30

கடந்த கால துன்பகரமான வாழ்வு எமக்குத் தேவையில்லை. அதேபோல் வடக்குக்குச் சிறைச்சாலைகளும் பொலிஸ் நிலையங்களும் தேவையில்லை.

யாழ். சிறைச்சாலை ஆன்மிகக் குருவும் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியருமான எஸ்.ஏ. றொசான் இவ்வாறு தெரிவித்தார்.

யாழ்.சிறைச்சாலை கைதிகளுக்கான சந்தோச மற்றும் மகிழ்தின நிகழ்வு சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தன ஏக்க நாயக்கா தலைமையில் இடம்பெற்றது.

யாழ்.நகரமைய றோட்டறிக் கழகமும் சுன்னாகம் றோட்டறிக் கழகமும் இணைந்து இந்த சந்தோச நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

இந்த நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

வடக்குப் பகுதி அபிவிருத்தி துரித கதியில் இடம்பெற்று வருகிறது. இந்த அபிவிருத்தி பற்றிய செய்திகளை ஊடகங்களில் பார்த்துள்ளோம். அந்த வகையில் யாழ்.மாவட்டத்தின் முன்னிலை அதிகாரிகள் வடக்கு மாகாணத்துக்கு நிரந்தர பொலிஸ் நிலையத்துக்கான கட்டடத்தையும் நிரந்தர் சிறைச் சாலைக்கான கட்டடத்தையும் அமைக்குமாறு கோரிக்கைகள்-முன்மொழிவுகள் சமர்ப்பித்த வண்ணம் உள்ளனர்.

ஆனால் நீண்ட காலமாக இந்த இரு நிலையங்களுக்குமான கட்டட நிர்மாண வேலைகள் ஆரம்பமாகவில்லை.

கடவுள் இந்த இரு கட்டடங்களையும் அமைப்பதற்கு விரும்பவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது.

நாம் நிம்மதியுடன் வாழவேண்டும். இங்குள்ள கைதிகளின் வாழ்வு வளம் பெறவேண்டும்.- என்றார்.

கைதிகளின் சந்தோச நிகழ்வில் கைதிகளில் ஒருவரான ஜனகன் மற்றும் ரேணுகா தம்பதியரின் திருமணப் பதிவு இடம் பெற்றது. இந்த நிகழ்வில் சிறைச்சாலை அத்தியட்சகர் சந்தனா ஏக்க நாயக்கா தலைமையேற்று பேசுகையில்:

கைதிகளின் சந்தோச நிகழ்வில் நான் பங்குபற்றுவதையிட்டு மகிழ்ச்சி அடைகிறேன். அதனைவிட கைதி ஒருவரின் திருமணப் பதிவை என் முன்னிலையில் நடத்தி அவர்களது வாழ்வு சிறக்க வாழ்த்துகிறேன்.- என்றார். (ம-302)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை ஆஸ்பத்திரியில் உள்ளூர் வைத்திய நிபுணர்கள்

## பிரான்ஸ் வைத்தியக் குழு வெளியேறியது

வடமராட்சி, செப்.30

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் பொது வைத்தியம், சத்திர சிகிச்சை, மகப்பேறு ஆகிய சிகிச்சைப் பிரிவுகளில் உள்ளூர் வைத்திய நிபுணர்கள் நோயாளர்களுக்கு சிகிச்சைகளை வழங்கிவருகின்றனர்.

இந்த சேவைகளிலிருந்து பிரான்ஸ் வைத்தியக்குழுவினர் விலகிக் கொண்டதையடுத்து, இந்தச் சேவைகளுக்கென யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரின் துரித நடவடிக்கையால் வைத்திய நிபுணர்கள் நியமிக் கப்பட்டு சிகிச்சைகள் நடைபெற்று வருகின்றன.

இந்தச் சிகிச்சைப் பிரிவுகளில் மகப்பேற்று சிகிச் சைப் பிரிவு மாத்திரம் வாரத்தில் திங்கள், செவ்வாய், வியாழன் ஆகிய தினங்களில் மகப்பேற்று வைத்திய நிபுணர் கே. குழந்தை வடிவேலால் நடத்தப்பட்டு வருகின்றன.

அவர் ஏனைய தினங்களில் தெல்லிப்பழை அரசினர் ஆதார வைத்தியசாலையில் மகப்பேற்று சிகிச்சையை வழங்கி வருகின்றார்.

தெல்லிப்பழை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் நியமிக்கப்பட்டதும், வைத்திய நிபுணர் கே. குழந்தைவடிவேலுவைப் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு நிரந்தரமாக நியமிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-236)

# ஆலயங்களில் வாகனங்கள் திருடப்பட்டன

இருபாலை நாச்சியம்மன் ஆலயத்திலும் மனோண்மணி அம்மன் ஆலயத்திலும் நேற்றிரவு பெறுமதியான பொருள்கள் களவாடப்பட்டுள்ளன. நாச்சியம்மன் ஆலயத்திலும் மனோண்மணி அம்மன் ஆலயத்திலும் நேற்றுமுன்தினம் இரவு புகுந்த திருடர்கள் 2 லட்சம் பெறுமதியான எழுந்தருளி விக்கிரகம் மற்றும் குதிரை, எருது வாகனங்கள் என்பவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

நாச்சியம்மன் ஆலயத்தில் புகுந்த திருடர்கள் அங்குள்ள இரண்டு வாகனங்களையும் திருடிச் சென்று அப்பகுதியில் உள்ள வயல் வெளியில் வாகனத்தின் அடிப்பாகத்தை கழற்றிவிட்டு குதிரை, எருது வாகனங்களைக் கொண்டு சென்றுள்ளனர். பின்பு அதே பகுதியில் அமைந்துள்ள மனோன்மணி அம்மன் ஆலயத்தில் மக்களின் துயரைப் போக்கும் எழுந்தருளி விக்கிரகத்தையும் திருடியுள்ளனர்.

இரண்டு ஆலயங்களிலும் பல பெறுமதியான பொருள்கள் உள்ளபோதும் அவை எவையும் களவாடப்படவில்லை.

இந்தத் திருட்டுச் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

# 'பிறந்த நாட்டில் பெற்ற சுகந்தம்' விவரம் தேடுகிறார் நூலாசிரியர்

தென்மராட்சி, செப்.30

கனடாவில் வதியும் செல்லையா செந்தில் என்பவர் தென்மராட்சிப் பிரதேசத்தின் பெருமையை வெளிக்கொண்டு வரும் 'பிறந்த நாட்டில் பெற்ற சுகந்தம்' என்னும் நூலை வெளியிடவுள்ளார்.

இந்த நூலில் பிரதேசத்தில் உள்ள அனைத்துக் கிராமங்களின் பெருமை கூறும் விவரங்களையும் தொகுத்து வெளியிட ஆர்வம் கொண்டுள்ளார்.

கிராமத்துக்கு அந்தப் பெயர் பெற இடம்பெற்ற காரணிகளுடன் கிராமத்தின் பெருமை களை எடுத்தியம்பும் சிறப்பு மிகு ஆலயங்கள், பாரம்பரிய கலை, கலாசார விழுமியங்கள் ஊரில் வாழ்ந்த புகழ் பெற்ற பெரியார்கள் போன்றோரின் விவரங்கள் நூலின் தனித்தனிக் கட்டுரைகளாக வெளியிடப்படவுள்ளன.

இதற்கான ஆக்கங்கள் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம விழுமியங்கள் பற் றிய தகவல்களை வழங்க விரும்புவோர் ஒவ்வொரு கிராமத்தைப் பற்றியும் தனித் தனியான கட்டுரையாக தயாரித்து "கொன்ஸ்ரன்ரைன் ஜக்கீல், செய லாளர், நகரசபை, சாவகச் சேரி" என்னும் முகவரியிட்டு அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

கோயிலாக்கண்டி, மறவன் புலோ, மண்டுவில், சரசாலை, இராமாவில், அல்லாரை, கரம்பகம், கெற்பேலி, எழுதுமட்டுவாழ், மிருசுவில், நாவற்காடு, மாசேரி, கரம்பைக் குறிச்சி, தாவளை, இயற்றாலை, மந்துவில், சந்திரபுரம், வெள்ளாம் போக்கட்டி, பாலாவி, விடத்தற்பளை, இடைக்குறிச்சி, குடமியன், வரணி ஆகிய கிராமங்களின் விவரங்களே கோரப்பட்டுள்ளன. (ம- 207)

# சட்ட உதவிகள் பயிற்சிக் கருத்தரங்கு

வடமராட்சி, செப்.30

வடக்கு மாகாணத்தில் புதிதாகத் தெரிவான உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு சட்ட உதவிகள் தொடர்பான பயிற்சிக்கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 10ஆம், 11ஆம், 12ஆம் திகதிகளில் கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிக் கருத்தரங்குக்கான ஏற்பாடுகள் இலங்கை சட்ட உதவி ஆணையகம், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிதியம், நோர்வேயின் அகதிகளுக்கான ஆணையம் ஆகியவற்றின் உதவியுடன் செய்யப்பட்டுள்ளன. (ம-236)

## இனியும் நடக்காது....



அவசர முடிவு: யாழ். மாநகரசபையின் டிறக்டர் தனியார் பஸ் ஒன்றும் நேற்று மோதி விபத் துக்குள்ளானது. இதில் மினிபஸ் முன்பகுதி சேதமடைந்தது. யாழ்ப் பாணத்தில் இருந்து பருத்தித்துறைக்கு பயணி களுடன் வந்து கொண்டிருந்த பஸ் யாழ். மாநகர சபைக்கு முன்பாக டிறக்டருடன் மோதியது. (ம-7)

# சொந்த இடமின்றித் தனியார் கட்டடத்தில்

யாழ்ப்பாணம், செப்.30

15 வருடங்களுக்கு மேலாக மாதகல் உப அலுவலகம் வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகிறது. நிரந்தரக் கட்டடத்துக்குப் பொருத்தமான இடத்தைத் தெரிவு செய்ய அனைவரும் முன்வர வேண்டும் என்று வலி. தென் மேற்குப் பிரதேச சபை உறுப்பினரும் முன்னாள் தலைவருமான வெ. அ.ஜோன்சன் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்த அலுவலகக் கட்டடம் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருவதால் அதன் வளர்ச்சி - அபிவிருத்தி பின் நிற்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்துப் பிரதேச சபை மாதாந்தக் கூட்டத்தில் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு அதற்கான தீர்மானத்தை எடுப்பதாகவும் இதற்காக எடுக்கப்படும் தீர்மானம் இறுதித் தீர்மானமாக இருக்கும் என்றும் சபைத் தலைவர் அ.ஜெபநேசன் தெரிவித்தார். (ம- 302)

# புதிதாக அமைக்கப்படும் மதில்கள் இடிந்து வீழ்வதாக சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம்-காங்கேசன் துறை வீதி அகலிப்புக்காக மதில்கள் இடிக்கப்பட்டு புதிய மதில்கள் அமைத்துக் கொடுக்கப்படுகின்றன.

இந்த மதில்கள் இடிந்து வீழ்வதாக உடுவில் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் பொதுமக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் தலைமையில் செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற இந்தக் கூட்டதில் இது குறித்து சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினர் இந்த விடயம் சம்பந்தமாக உரிய கவனம் எடுக்க வேண்டும். பொதுமக்கள் இத்தகைய விடயங்கள் பாதிப்புகள் சம்பந்தமாக பிரதேச செயலரின் அல்லது தமது கவனத்துக்கு கொண்டுவரும் சந்தர்ப்பத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் இதில் கூறப்பட்டது.

இந்த விடயத்தில் கூடிய கவனம் எடுத்து உரிய நிபுணர்கள் மூலம் இவற்றைப் பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-86)

# வரலாற்றில் முதல் தடவையாக

தென்மராட்சி, செப்.30

தென்மராட்சி கல்வி வலயத்தைச் சேர்ந்த போக்கட்டி றோ.க. தமிழ் கலவன் பாடசாலை வரலாற்றில் முதல் தடவையாக ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர் ஒருவர் சித்திபெற்றுள்ளார்.

சிவகுமார் இளங்குமரன் என்னும் மாணவனே 154 புள்ளிகள் பெற்று இவ்வாறு சித்திபெற்றுள்ளார்.

இந்த மாணவனையும் அவருக்கு வழிகாட்டிய ஆசிரியையும் பாடசாலைச் சமூகத்தினர் பாராட்டிக் கௌரவிக்கவுள்ளனர்.

இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பாடசாலை அதிபர் கு. இரவீந்திரன் தெரிவித்தார். (ம-207)

# தென்மராட்சி அபிவிருத்திக்கு ரூ. ஒரு லட்சத்து 94 ஆயிரம்

தென்மராட்சி, செப்.30

தென்மராட்சிப் பிரதேசத்தில் அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ள யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் நால்வர் இந்த வருட பன்முகப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியில் 16 லட்சத்து 94 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளதாக யாழ்.அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, முருகேசு, சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின், ஐக்கிய தேசியக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஆகியோரே இந்த நிதி ஒதுக்கீடு செய்துள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதேசத்தில் 19 வேலைத் திட்டங்களை மேற்கொள்ள 9 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, 5 வேலைத் திட்டத்துக்கு 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவையும் நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் ஐந்து வேலைத்திட்டங்களுக்கு மூன்று லட்சம் ரூபாவையும் நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் இரண்டு வேலைத் திட்டங்களுக்கு ஒரு லட்சத்து 94 ஆயிரம் ரூபாவையும் ஒதுக்கீடு செய்துள்ளனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மந்துவில் கிழக்கு பாலர் பகல் பராமரிப்பு நிலையத்துக்கு தளபாட கொள்வனவு, சரசாலை தெற்கு சனசமூக நிலைய பராமரிப்பு, வரணி நவஜன சன சமூக நிலையத் திருத்தம், சரசாலை மத்தி சனசமூக நிலையத்துக்கு குழாய் கிணறு அமைத்தல், மட்டுவில் மோகனதாஸ் சனசமூக நிலையத்துக்கு மலசலகூடம் அமைத்தல் போன்றவற்றுக்கு இந்த நிதியை வழங்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன், சாவகச்சேரி கச்சாய் வீதி ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகத்துக்கு தளபாடக் கொள்வனவு, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கு தளபாடக் கொள்வனவு, சாவகச்சேரி கல்வயல் டேனுஜா அறிவொளி மழலைகள் முன்பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, மந்துவில் பாரதி சனசமூக நிலைய திருத்தம், கைதடி சேதுகாவலர் வித்தியாலயத்துக்குத் தளபாடக் கொள்வனவு ஆகியவற்றுக்கு நிதி ஒதுக்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் மட்டுவில் தெற்கு அ.மி.த. பாடசாலை, மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ஆகியவற்றுக்கு [illegible] கள் கொள்வனவுக்கு நிதி ஒதுக்கியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் கெற்பேலி அ.த.க.பாடசாலை கட்டட புனரமைப்பு, கச்சாய் அ.த.க.பாடசாலைக்கு விளையாட்டு உபகரணங்கள் கொள்வனவு, கச்சாய் கலைமகள் ச.ச.நிலைய முன்பள்ளி புனரமைப்பு, மிருசுவில் சிவசக்தி முன்பள்ளி புனரமைப்பு, அல்லாரை ஐங்கரன் சனசமூக நிலைய புனரமைப்பும் தளபாடக் கொள்வனவும், தவசிகுளம் இளங்கோ சனசமூக நிலைய கட்டடப் புனரமைப்பு, சங்கத்தானை ஸ்ரீமுருகன் முன்பள்ளி கட்டட புனரமைப்பு, கைதடி வளர்மதி சனசமூக நிலையத்துக்கு நிழற்பட இயந்திர கொள்வனவு, பாலாவி வடக்கு பிள்ளையார் ஆலயத்துக்கு மலகூடம் அமைத்தல் போன்றவற்றுக்கு நிதி ஒதுக்கியுள்ளார்.

பாலாவி கலைவாணி சனசமூக நிலைய புனரமைப்பு, பாலாவி தெற்கு முருகன் ஆலய மின்னிணைப்பு, கெற்பேலி பரமசிவன் ஆலய மின்னிணைப்பு, கொடிகாமம் அரசடி பிள்ளையார் ஆலய கூரை திருத்தம், கொடிகாமம் மாவடிப் பிள்ளையார் ஆலய திருத்தம், கச்சாய் தெற்கு துர்க்கை அம்மன் ஆலய கட்டட புனரமைப்பு ஆகியவற்றுக்கும்,

கெற்பேலி வீரபத்திரர் சன சமூக நிலையத்துக்கு தள பாட கொள்வனவு, மிருசுவில் பத்திரகாளி அம்பாள் ஆலயத்துக்கு கிணறு அமைதல், மிருசுவில் தரவையம்பதி ஸ்ரீவிக்கினேஸ்வரர் ஆலயத்துக்கு மின்னிணைப்பு மிருசுவில் குருக்கள் மாவடி பிள்ளையார் ஆலய திருத்த வேலை ஆகியவற்றுக்கும் இவர் இந்த ஒதுக்கீடு வழங்கியுள்ளார். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமூக நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கு பல்லின நாடாக இலங்கை மாற வேண்டும்

வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வில் நிகழும் சொல்லொணா வேதனைகள் சவால்கள் இழப்புக்கள் என்பவற்றை எதிர்கொள்வதற்கு என்ன வழி என்பது இன்று எம் முன்னுள்ள முக்கிய கேள்வியாகும் என பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர முன்னணி ஊடகங்களுக்கு அனுப்பிய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பழைய யாழ்.சந்தை, யாழ் நூல் நிலையம் எரிக்கப்பட்டதிலிருந்து இன்றைய நில அபகரிப்பு, மக்களின் அன்றாட வாழ்வில் ராணுவத் தலையீடு, கிறீஸ் பூதம் வரையிலான பிரச்சினைகளை மக்கள் அனுபவிக்கிறார்கள்.

இந்தப் பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதானால் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களும் நிலத்தின் மீதான அதிகாரங்களும், நீதித்துறை அதிகாரங்களும் கொண்ட அதிகாரப் பகிர்வுக் கட்டமைப்பு அவசியம். மாநில மட்டத்திலான அரச கட்டமைப்பிற்குள் இது அடங்க வேண்டும்.

தற்போது வடக்கு,கிழக்கில் மேற் கொள்ளப்பட்டுவரும் காணிப்பதிவுகள் மக்கள் மத்தியில் பல்வேறு சந்தேகங்களையும் கேள்விகளையும் எழுப்பியுள்ளது.

இடம்பெயர்ந்து இலங்கையிலும் இந்தியாவிலும் அகதிகளாக் வாழ்பவர்கள் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்புவதற்கான இயல்பு நிலை ஏற்படுத்தாத வரையில், அச்ச நிலை முழுதாக நீங்காத நிலையில், அவசர அவசரமாக இத் தகைய காணிப்பதிவுகள் மேற்கொள்ளப்படுவது சொந்த ஊரிலேயே தம்மை சிறுபான்மையினராக ஆக்குவதற்காகவா என்ற கேள்வி இயல்பாக எழுகிறது.

வடக்கின் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தைகுறைப்பதற்கே சனத்தொகை கணக்கெடுப்பு உபயோகிக்கப்பட்டிருக்கிறது.

யுத்தம் முடிவுக்கு வந்து சமூகங்களிடையே புரிந்துணர்வு சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது அந்த அழிவுக்கு உட்பட்ட சமூகத்தை மீளெழுச்சி கொள்ள வைப்பதும், அச் சமூகத்துக்குள்ள சுதந்திரம், ஜனநாயக உரிமைகள் என்பவற்றை உறுதிப்படுத்துவதும் ஆகும்.

தமிழ்தேசிய கூட்டமைப்புடன் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தை உலகளவிலும், பிராந்தியளவிலும் பேசப்படுகிறது. நிலம், பொலிஸ், நிதி, நீதி அதிகாரங்களை வென்றெடுப்பதிலேயே தமிழ் மக்களின் வாழ்விலும்ஒருபாதுகாப்பான நிலையை ஏற்படுத்த முடியும். சிங்கள தலைவர்களுடன் மாத்திரமல்லாமல் முஸ்லிம், மலையகத் தலைவர்களுடனும் இவை பற்றி பேசப்படவேண்டும். பல்லினங்களின் நாடாக இலங்கை மாற்றப்படுவதிலே உண்மையான புரிந்துணர்வு, சமூக, பொருளாதார அபிவிருத்தியும் ஏற்பட முடியும் இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது

(எ)

# செய்தித்துளிகள்

கொழும்பு, செப். 30

23 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பு நேற்றும் இன்றும் இடம்பெறவுள்ளது. 17 மாநகரசபைகள், ஒரு நகரசபை மற்றும் 5 பிரதேச சபைகள் உட்பட்ட 23 உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால்மூல வாக்கெடுப்பே இவ்வாறு இடம்பெறவுள்ளது.

தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்தவர்களுக்கு வாக்காளர் அட்டைகள் கடந்த 9ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை விநியோகிக்கப்பட்டன. இதன்படி, தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்த அரச ஊழியர்கள் நேற்றும் இன்றும் வாக்களிக்கலாம். குறித்த 23 உள்ளூராட்சி சபைகளுக்குமான தேர்தல் வாக்கெடுப்பு ஒக்ரோபர் 8ஆம் திகதி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

* * *

யாழ். நீதிமன்ற வளாகத்துக்குள் கைதியொருவர் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக சேவையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருந்த கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த ஏழு பொலிஸ் அதிகாரிகளும் தலா 50ஆயிரம் ரூபா பெறுமதியான சரீரப் பிணையில் செல்ல யாழ். நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை அனுமதி வழங்கியது.

கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 2 பொலிஸ் சார்ஜன்ட்மாரும், 5 பொலிஸ் கான்ஸ்டபிள்களுமே இவ்வாறு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 19ஆம் திகதி யாழ். நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணைக்காகக் கொண்டுவரப்பட்ட சந்தேக நபர் ஒருவர் சட்டத்தரணிகள் முன்னிலையில் பொலிஸாரால் தாக்கப்பட்டு இழுத்துச் செல்லப்பட்டார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களான பொலிஸ் அதிகாரிகளை சேவையிலிருந்து இடைநிறுத்துமாறு பொலிஸ்மா அதிபர் என்.கே.இலங்கக்கோன் பணிப்புரை விடுத்திருந்தார். இந்நிலையில், அவர்கள் நேற்றுமுன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது பிணையில் செல்ல நீதிவான் அனுமதி வழங்கினார். இந்தச் சம்பவத்தைக் கண்டித்து யாழ். மாவட்ட சட்டத்தரணிகள் கடந்த 20ஆம் திகதி முதல் தமது பணிகளைப் பகிஷ்கரித்து வந்தனர். எதிர்காலத்தில் நீதிமன்றத்தை அவமதிக்கக் கூடிய இவ்வாறான செயல்கள் நடைபெறாது என்ற உத்தரவாதம் வழங்கப்படும் வரையில் தமது பகிஷ்கரிப்புத் தொடருமென அவர்கள் அறிவித்திருந்தனர்.

இந்த நிலையில், தங்களது பணிப் பகிஷ்கரிப்புப் போராட்டத்தைத் தொடர்வதா, இல்லையா என்பது குறித்து இன்று கூடி ஆராய வுள்ளதாக யாழ். சட்டத்தரணிகள் சங்க உறுப்பினர் மு.ரெமிடியஸ் தெரிவித்தார்.

* * *

வீரவில இராணுவ முகாமில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஐவர் கொண்ட குழுவின் அறிக்கை இன்று திகதி கிடைக்கப்பெறும் என இராணுவ ஊடகப் பேச்சாளர் நிஹால் ஹப்புஆராய்ச்சி தெரிவித்துள்ளார். மேலும், இந்தக் குழு தமது விசாரணை நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சாட்சியங்கள் பெறுதல், வெடிப்புச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இரசாயன பரிசோதனைகளை மேற்கொள்ளல் போன்ற நடவடிக்கைகளின் மூலம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். வீரவில இராணுவ முகா மில் இடம்பெற்ற வெடிப்புச் சம்பவத்தில் படையினர் ஒருவர் உயிரிழந்ததுடன் இருவர் காயமடைந்திருந்தனர்.

(வ)

## கந்தபுராணப் படிப்பு ஆரம்பம்

வடமராட்சி, செப்.30

துன்னாலை வடக்கு, அல்லையம்பதி ஸ்ரீசிவசுப்பிரமணியர் சுவாமி கோயிலில் கந்தபுராணப் படிப்பு நேற்று முன்தினம் புதன் கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

தொடர்ந்து 45 ஆவது நாள்வரை நடைபெறும் கந்தபுராணப் படிப்பின் இறுதி நாளன்று அன்னதானம் இடம் பெறும். (236)

## வல்லிபுர ஆழ்வார் ஆலய மடத்தில் அன்னதானம்

வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில் மகோற்சவ காலங்களில் 1938 ஆம் ஆண்டு தொடக்கம் மூச்சம்பலம் பொன்னையா சாமியார் மடத்தில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்த வருடமும் 26.09.2011 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமான அன்னதானப் பணிகள்தொடர்ந்து இடம் பெற்று வருவதாக அன்னதான சபையினர் தெரிவித்துள்ளனர். (வ-45)


**மாடிக் கடை விற்பனைக்கு**

வவுனியா நகர், கோயில் வீதியில் அமைந்துள்ள புதிய மாடிக் கடை விற்பனைக்குண்டு.

தொடர்புக்கு -0776617949, 0776512373

**பகிரங்க ஏல விற்பனை**

17.09.2011 ஆம் திகதி எமது நிறுவன நிர்வாக சபைக்கூட்டத்தில் தையல் இயந்திரங்கள், தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள் ஏலத்தில் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப் பட்டது.

விண்ணப்பத்தை எமது நிறுவனத்தில் பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்ப முடிவு திகதி. 05.10.2011 (புதன்கிழமை). விண்ணப்ப கோரிக்கைப் படிவம் விண்ணப்பதாரிகள் முன்னிலையில் 11.10.2011 செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு திறக்கப்படும். இறுதி முடிவு நிர்வாகத்தினரால் தீர்மானிக்கப்படும்.

நிர்வாகம், மக்கள் நலன் காக்கும் பிரிவு,
இருபாலைச் சந்தி, கோப்பாய்.

**கண்ணீர் அஞ்சலி**



எமது அலுவலக உத்தியோகத்தர்
திரு. இராசலிங்கம் வசிகரன் அவர்களின்
அன்புத் தாய்
திருமதி
**இராசலிங்கம் இராசமலர்**
அவர்கள் 28.09.2011 ஆம் திகதி காலமாகிவிட்டார்.
அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிரதேச செயலரும் உத்தியோகத்தர்களும்,
நலன்புரி சங்கம், பிரதேச செயலகம், தெல்லிப்பழை.

**வேலையாள்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கும் புடைவையகத்துக்கு பெண் வேலையாள்கள் தேவை. முன் அனுபவம் உள்ளவர்களும், பழக விரும்புபவர்களும் விரும்பத்தக்கது.



தொடர்பு :
ஏசியன் புடைவையகம்,
இல. 24, பலாலி வீதி,
திருநெல்வேலி.

**கணனி வேலையாள் தேவை**

பேஜ்மேக்கர், போட்டோசொப், கோரல்றோ தெரிந்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.
வேழன் பதிப்பகம்
கனகபுரம் றோட், கிளிநொச்சி.
0772718640, 0212285579

***Walk in Interview***

Post: English Lecturer (Full time)
Salary: Negotiable
Time: 11 am to 2 pm
Date: 01&02 of October 2011
Venue: British College of Higher Studies
No.15,Sirambiyadi Lane ,
Off stanly Road,Jaffna
Tel:0212224550
Mobile:0777222422

**யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம், இலங்கை**
**விஞ்ஞான பீடம்**
**அறிவித்தல்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்துக்குப் புதிதாக அனுமதிக்கப்பட்டுள்ள முதலாம் வருட மாணவர்களுக்கான 2010/2011 கல்வி ஆண்டுக்கான அறிமுக நிகழ்வு 10.10.2011 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். அறிமுக நிகழ்வில் தவறாது கலந்துகொள்ளுமாறு புதிய மாணவர்கள் அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அனைத்து மாணவர்களுக்கான கல்விச் செயற்பாடுகள் 24.10.2011 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகும். மாணவர்கள் தங்களுக்கான தங்குமிட வசதிகளைத் தாமாகவே ஏற்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

பதிவாளர்
(சி/4446) (45)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



யா/போக்கட்டி அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த
**கந்தசாமி பிரதீபன்**
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 152 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்தமையை பாராட்டுவதோடு 100 புள்ளிகளுக்குமேல் பெற்ற மாணவர்களான
சிவகுமார் பிரியங்கா - 121
சிவராசா சிலைக்சன் - 110
சதீஸ்வரன் கிருபாகரன் - 108
இந்த மாணவர்களையும் கல்வியில் சாதனைகள் படைத்து உயர்வுபெற வாழ்த்துவதில் பெருமகிழ்ச்சியடைகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர்.
யா/ போக்கட்டி அ.த.க. பாடசாலை,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## 2 கிழமைக்கு ஒரு தரம் ஒடியற்கூழ் குடித்தால் மலேரியா கிட்ட வராது...!

கஞ்சி கடப்படிவரை; கூழ் குளத்தடிவரை; பிட்டு செல்லுமிடம் வரை என்று கிராமத்தில் கூறுவார்கள். கஞ்சியைக் குடித்து விட்டு நடந்தால் பெரிய வளவின் எல்லை வேலியைக் கடக்கும் போது பசியெடுக்குமாம். கூழைக் குடித்தால் வயல் எல்லையிலிருக்கும் குளம் வரை சென்ற பின் பசிக்குமாம். பிட்டு உரமான உணவாம். இத்தனைக்கும் கஞ்சியும் கூழும் சத்தான ஆகாரங்கள். இற்றைக்கு ஏழு தசாப்தங்களுக்கு முன்னைய யாழ்ப்பாண மக்களின் காலை ஆகாரமாக பழந்தண்ணியே விளங்கியது. இரவு சோற்றில் தண்ணீர் ஊற்றி வைத்து, காலையில் அதனுள் உப்பு,வெங்காயம், மிளகாய் சேர்த்து அருந்தும் பானமே பழந்தண்ணியாகும். அதிகாலையிலேயே எழுந்து ஒருவர் துலா மிதிக்க,மற்றவர் பட்டையால் தண்ணீர் அள்ள பயிர்களுக்கு நீர் பாய்ச்சுவார்கள். அவர்களுக்குக் காலையில் மண்பானையில் பழந்தண்ணியை எடுத்துச் சென்று வழங்குவார்கள். அவர்களைப் பொறுத்தவரை சத்து மிக்க அமிர்தபானமது.

பண்டைய யாழ்ப்பாண மக்கள் நெல்லரிசிச் சோற்றுடன் மட்டும் நின்று விடவில்லை. வரகரிசி, சாமையரிசி ஆகியனவும் மதிய ஆகாரமாக விளங்கின. குரக்கனும் அவர்களது வாழ்வில் முக்கிய இடம் வகித்தது. ஒடியற் கூழ் வாராந்தம் அவர்களது இடை ஆகாரமாக இருந்தது. வன்னிப் பகுதியில் யுத்த காலத்தில் வாழ்ந்த ஒருவர் ஊரெல்லாம் மலேரியா தாக்கியபோதும் தமது குடும்பத்தில் யாருக்கும் பாதிப்பில்லை என்று கூறினார். அதற்குக் காரணம் இரு வாரங்களுக்கு ஒருமுறை தவறாது ஒடியற் கூழ் காய்ச்சி அருந்தியதுதான் என்றார்.

இன்று எமது உணவு முறை மாறி விட்டது. பேக்கரிகள் பெருகியிருப்பது உணவு முறை மாற்றத்தின் குறிகாட்டியே. நகரப்புறப் பிள்ளைகளைக் கேட்டால் பாணும்,ஜாமும் சாப்பிட்டதாகவே அனேகமானவர்கள் கூறுவார்கள். ஆனால் இன்று அந்த நிலையையும் கடந்து நூடுல்ஸ் கலாசாரத்துக்கு வந்து விட்டோம். 'நூடுல்ஸை' வாங்கி அவிய விட்டு,உருளைக்கிழங்கு, கரட், கத்தரிக்காய் முதலியவற்றைப் பொரித்துச் சுவையாகச் செய்யும் காலமெல்லாம் மலையேறி விட்டது. உடனடி நூடுல்ஸே இப்போது பயன்படுத்தப்படுகிறது. கோழிக்கறிச் சுவையோ, மரக்கறிச் சுவையோ - தேவையான சுவையூட்டிகளுடன் கடைகளில் கிடைக்கும் உடனடி நூடுல்ஸ் வீட்டுப் பெண்களின் சமையல் நேரத்தை மிகச் சுருக்கி விடுகின்றது. பிள்ளைகளுக்கு அறிமுகப்படுத்தி அவர்களை அதற்கு அடிமையாக்கியதால் நூடுல்ஸ் இல்லாமல் பிள்ளை சாப்பிடாது என்ற நிலை வந்து விட்டது. உடனடி தோசைமா, உடனடி அப்பக்கலவை என்பனவும் புழக்கத்தில் உள்ளன.

தேநீர்க்கடைகளில் தேநீரை இழுத்து ஆற்றித் தருவார்கள். தேநீரின் சுவைக்காகவே சில கடைகளை வாடிக்கையாளர் தேடி வருவர். அந்த நிலையிலும் இப்போது மண் விழுந்து விட்டது. நெஸ்கபே,சிலோன்ரா என கோப்பியும், தேநீரும் உடனடிப் பானங்களாகக் கடைகளில் விற்கப்படுகின்றது. தேநீர் தயாரிப்பவர்களின் கைவண்ணம் எமது வீட்டுப் பெண்களின் கைவண்ணத்தைப் போல கரைந்து போய் விட்டது.

பிள்ளைகளின் கல்வியும் அப்படித்தான் ஆகி விட்டது. அரசாங்கம் இலவசமாகப் புத்தகங்களை அடித்து விநியோகிக்கிறது. பாடசாலையில் அது கற்பிக்கப்படுகிறது.ஆனால் வித்தை தெரிந்தவர்கள் அதிலுள்ளவற்றை வினாவிடைகளாகத் தயாரித்து உடனடி விடையளிப்புக்கு வழி காட்டுகிறார்கள். சிலர் நூல்வெளியீட்டு விழா நடத்தி அதை வெளியிடுகிறார்கள். நமது புலமையாளர்களோ அழைத்துக் கௌரவப்படுத்தியதற்காகச் சிலாகித்துக் கூறி விட்டுச் செல்கின்றனர். சிலரோ எடுக்காத, இல்லாத பட்டங்களையெல்லாம் நூலில் போட்டுத் தம்மை அறிமுகப்படுத்தி கேள்வி பதில் நூலை வெளியிடுகின்றனர். பாடசாலை ஆசிரியர்களும் தமது வேலையை மிகக் குறைக்கும் நோக்கில் வினாவிடை நூல்களைப் பிள்ளைகளுக்குச் சிபார்சு செய்கின்றனர்.

ஆக எங்கும் "இன்ஸ்ரன் கல்ச்சர்" (Instant Culture) எனப்படும் உடனடிக் கலாசாரமே கோலோச்சுகிறது. இவையெல்லாம் விரைந்த சமூக வீழ்ச்சிக்கே வழிகோலப் போகின்றன.

விழிச்சான் குஞ்சு.

# அரசுக்கு அளிக்கும் ஒவ்வொரு வாக்கும் மக்களின் வீடுகளை உடைப்பதற்கான ஆயுதம்

## ஏ.சீ.எம். பதுர்தீன் தெரிவிப்பு

கொழும்பு மாவட்ட மக்கள் அரசுக்கு வழங்கும் ஒவ்வாரு வாக்கும் அவர்களின் வீடுகளை உடைப்பதற்கான பெரிய ஆயுதமாக அமையும் என்று கொழும்பு மாநகர சபைக்கு ஐ.தே.கவின் சார்பில் போட்டியிடும் முன்னாள் கொழும்பு மாநகரசபை உறுப்பினர் ஏ.சீ.எம்.பதுர்தீன் கூறினார்.

அவரை ஆதரித்து கொழும்பு கொம்பனித்தெருவில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் இது தொடர்பில் மேலும் கூறுகையில் தெரிவித்ததாவது:

என்மீது நம்பிக்கை வைத்து என்னை மதித்து மக்கள் என்னை நான்கு தடவைகள் வெற்றி பெறச் செய்தனர். எனது சேவை யில் மக்கள் திருப்தி கண்டதே இதற்குக் காரணம்.

நான் செய்த சேவைகளை எமது மக்கள் நன்கு அறிவர். எனது சேவையைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கான மக்களின் அங்கீகாரத்தைக் கோரியே நான் இந்தத் தேர்தலில் மீண்டும் இறங்கியுள்ளேன்.

கொழும்பு மக்கள் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கின்றனர். அந்தப்பிரச்சினைகளை என்னால் முடிந்த வரை நான் தீர்த்து வைப்பேன். மக்களின் சேவையை மாத்திரம் கருத்தில் கொண்டே நான் செயற்படுகிறேன். எதிர்காலத்திலும் அவ்வாறே செயற்படுவேன்.

எமது மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்கும் திட்டம் எதுவும் இந்த அரசிடம் இல்லை. மேலும் பிரச்சினைகளை உருவாக்கும் செயற்பாடுகளில்தான் அரசு ஈடுபட்டுள்ளது.

கொம்பனித்தெரு மக்களின் வீடுகளை உடைத்து அந்த மக்களை நடுவீதியில் நிறுத்தியதை நாம் மறந்துவிட வில்லை. அந்த வீடுடைப்புத் திட்டத்தை அரசு இன்னும் கைவிடவில்லை. மக்கள் அரசுக்கு வழங்கும் ஒவ்வொரு வாக்கும் அவர்களின் வீடுகளை உடைக்கும் ஆயுதமாகவே அமையும்.

தனது தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டும் செயலில் மக்கள் இறங்கிவிட வேண்டாம். கொழும்பு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக - அவர்களைப் பாதுகாப்பதற்காக என்றென்றும் பாடுபடும் ஐக்கிய தேசியக் கட்சியையே மக்கள் ஆதரிக்க வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியைத் தவிர எந்தவொரு கட்சியும் கொழும்பு மக்களின் பிரச்சினைகளை அறிந்ததும் இல்லை. அந்தக் கட்சி செய்த சேவை போல் வேறு எவரும் செய்ததும் இல்லை. இவ்வாறான கட்சியில் போட்டியி டும் என்னை மீண்டும் ஆதரிக்குமாறு நான் மக்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

யானைச் சின்னத்துக்கும் எனது இலக்கமான 4இற்கும் புள்ளடியிட்டு ஐந்தாவது தடவையாக என்னை வெற்றியடையச் செய்யுமாறு நான் மக்களிடம் கேட்டுக் கொள்கிறேன்.- என்றார். (வ)

# 250 தொன் அரிசியை கென்யாவுக்கு இலங்கை வழங்குகிறது

முதன்முறையாக இலங்கை ஆபிரிக்க நாடான கென்யாவுக்கு 250 மெற்றிக் தொன் அரிசியை ஏற்றுமதி செய்யவுள்ளது.

வியாங்கொட களஞ்சியசாலையில் உள்ள அரிசி இருப்பே இவ்வாறு கென்யாவுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ளது.

இலங்கையில் போதுமானளவு அரிசி இருப்பில் உள்ளதால் அதனை ஏற்றுமதி செய்ய தீர்மானித்ததாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சின் செயலாளர் சுனில் எஸ்.சிறிசேன தெரிவித்தார்.

மேலும் இருப்பில் உள்ள அரிசி சவூதி அரேபியா உட்பட்ட மத்திய கிழக்கு நாடுகளுக்கும் ஆபிரிக்க நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படவுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (வ)

# நோர்வேத் தொலைக்காட்சிக்கு எதிர்ப்புக் கூறும் இலங்கைத் தூதர்

நோர்வேயின் என்.ஆர்.கே. தொலைக்காட்சி இலங்கையின் கொலைக்களங்கள் ஆவணப் படத்தை ஒளிபரப்புவதற்கு அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதர் எதிர்ப்புத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதர் றொட்னி பெரேரா கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

மேற்படி ஆவணப்படம் முற்றிலும் பக்கச்சார்பானது என்றும், இதில் இலங்கை மீது ஆதாரமில்லாத குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பெரியளவிலான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில், இத்தகைய ஆவணப்படத்தை ஒளிபரப்புவது அதனைக் குழப்பத்துக்கு உள்ளாக்கும் என்றும் அவர் தனது கடிதத்தில் கூறியுள்ளார்.

இதுபோன்ற காட்சிகள் அடங்கிய காணொளியை ஒளிபரப்புவதன் மூலம் ஒஸ்லோவில் உள்ள இலங்கைத் தூதரகம் மட்டு மன்றி அதன் பணியாளர்களுக்கும் நோர்வேயில் வசிக்கும் இலங்கையர்கள் அனைவருக்குமே பாதுகாப்புப் பிரச்சினையை ஏற்படுத்தக் கூடும் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அதேவேளை, சனல் 4 தயாரித்த இந்த ஆவணப்படத்துக் குப் போட்டியாக இலங்கை பாதுகாப்பு அமைச்சுத் தயாரித்த Lies Agreed Upon, என்ற ஆவணப் படத்தை ஒளிபரப்புவது குறித்து கவனம் செலுத்துமாறும் என்.ஆர். கே. தொலைக்காட்சியிடம் இலங் கைத் தூதர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# தேர்தல் முடிந்த பின் ஐ.தே.கவில் பூகம்பம் வெடிக்கும் ரணில் சிறிகொத்தவிலிருந்து வெளியேறுவார்

## அமைச்சர் டலஸ் அடித்துக் கூறுகிறார்



உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் முடிவுகள் வெளியானதும் ஐக்கிய தேசியக் கட்சிக் குள் மீண்டுமொரு பூகம்பம் வெடிக்கும் என்பது உறுதி. எதிர்க்கட்சித் தலைவர் சிறிகொத்தாவை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்படலாம் என்று அமைச்சர் டலஸ் அழகப்பெரும எதிர்வு கூறியுள்ளார்.

தொடர் தோல்விகளைச் சந்தித்த ஐக்கிய தேசியக் கட்சி எம்முடன் தேர்தலில் போட்டியிட நடுங்குகின்றது. அந்தப் பயத்தால் அந்தக் கட்சியினர் எதையெதையோ உளறுகின்றனர் என்றும் அமைச்சர் கிண்டல் அடித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் கோட்டை என்று வர்ணிக்கப்படும் கொழும்பு மாநகர சபையையும் அந்தக் கட்சி பறிகொடுக்க வேண்டிய தருணம் வந்துவிட்டது. இதன் காரணமாக செய்வதறியாது தவிக்கும் அக்கட்சியினர் எம்மீது வசைமாரி பொழிகின்றனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் காலத்திலேயே அரச வளங்கள் தேர்தலுக்குப் பயன்படுத்தப்பட்டன. வளங்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டன என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியானதும் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் உட்பூசல் மேலும் அதிகரிக்கும். இதனால் தலைமைத்துவத்தை ரணில் இழக்கவேண்டிய நிலை ஏற்படலாம். அதுதான் உண்மையும் கூட. இந்த பயத்தினால்தான் ரணில் பிரசாரக் கூட்டங்களின்போது எமக்கெதிராகப் பேசி தலைமைத்துவத்தைத் தக்க வைத்துக்கொள்ள முயற்சிக்கின்றார் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

அரசுமீது ஐக்கிய தேசியக் கட்சி சுமத்தியுள்ள குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுக்க பெற்றோர் விழிப்புணர்வு அடைவது அவசியம்

## வவுனியா அரச அதிபர் தெரிவிப்பு

வவுனியா, செப். 30

வவுனியா மாவட்டத்தில் சிறுவர் துஷ்பிரயோகங்களைக் குறைப்பதற்குப் பெற்றோர்கள் விழிப்புணர்வடைவதுடன் தமது பிள்ளைகளுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும் என வவுனியா மாவட்ட அரச அதிபர் திருமதி பி.எஸ்.எம். சார்ஸ்ல் தெரிவித்தார்.

வவுனியாவில் இடம் பெற்று வரும் சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பாடசாலைகளில் இடம்பெற்ற சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளும் பொறுப்பை வடமாகாண ஆளுநரிடம் கையளித்துள்ளோம். பெற்றோர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைக்கு காலை 7.30 மணிக்கே அனுப்பவேண்டும். அதே போல் பாடசாலை விட்டு தமது பிள்ளைகள் குறித்த நேரத்துக்கு வருகின்றார்களா என்பதிலும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

பாடசாலை ஆரம்பிப்பதற்கு முன்னரும் பாடசாலை விட்ட பின்னரும் விசேட வகுப்புகள் மற்றும் பாடசாலை சம்பந்தமான செயற்பாடுகளுக்கு மாணவர்கள் சமூகம் கொடுக்க வேண்டுமாயின் வகுப்பாசிரியரின் எழுத்து மூலமான அனுமதியை எழுத்து மூலமான கோரிக்கைகளையும் பெற்றோர்கள் பார்வையிட வேண்டும்.

தனியார் கல்வி நிலையங்கள் காலை 6 மணிக்கு முன்னரும் மாலை 6 மணிக்கு பின்னரும் வகுப்புக்களை நடத்த அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அத்துடன் தனியார் கல்வி நிலையங்கள் பிரதேச செயலகத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்டாலே அதனை இயக்க முடியும் தனியார் கல்வி நிலையங்களில் வகுப்புக்கள் முடிவடையும் வரை பெண் ஊழியர் ஒருவர் பணியில் இருக்க வேண்டும்.

வவுனியாவில் காணப்படும் இன்ரநெட் கபே அனைத்தையும் பதிவு செய்யுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் பொலிஸாரை திடீர்சோதனை நடத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே சிறுவர்கள் இன்ரநெட் கபேக்களை பாவிப்பதை பெற்றோரும் கடை உரிமையாளர்களும் கவனிக்கவேண்டும்.

இதேவேளை பாடசாலை சேவையில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகள் மற்றும் பேருந்துகள் வவுனியா நகரசபை மற்றும் போக்குவரத்து பொலிஸிலும் பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்றார். (எ)

# தொண்டர் ஆசிரியர் பங்கு இன்றி புலமைப் பரிசில் பெறுபேறு வீழ்ச்சி

## பெற்றோர்கள் கவலை

முல்லைத்தீவு, செப்.30

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களின் பங்களிப்பு இல்லாமையினால் 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சித்தி பெறத்தவறியுள்ளனர் என பெற்றோர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கடந்த வருடங்களில் தமது கிராமப் பாடசாலை மாணவர்கள் சிறந்தபெறுபேற்றை பெற வேண்டும் என பாடசாலைகளில் ஆசிரியர்களோடு சரிநிகராக பெற்றோர்களும் மாணவர்களுக்கு கற்பித்து மேலதிக வகுப்புக்களை வீடுகளில் நடத்தியும் மாணவர்களை சித்திபெற வைத்தனர்.

இந்த வருடம் தொண்டர் ஆசிரியர்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படாமையால் விரக்தியில் அவர்களின் செயற்பாடுகள் குறைவடைந்துள்ளது.

இதனால் இந்தவருடம் முல்லை மாவட்டத்தில் மிகவும் குறைந்த மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர். ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் ஒரே ஒரு பாடசாலையில் மட்டும் 6 பேர் சித்தியடைந்துள்ளனர். இதிலிருந்து தொண்டர் ஆசிரியர்களின் பங்களிப்பு அவசியம் என்பது இந்த வருடம் இடம் பெற்ற புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவிலிருந்து தெரிகிறது என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர். (எ-500)

# கைப்பணிப் பயிற்சி நெறி பூநகரியில் ஆரம்பம்

கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் ஒரு மில்லியன் ரூபா செலவில் கைப்பணிப் பயிற்சி நெறியொன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.


கிளிநொச்சி, பூநகரிப் பகுதியில் பாடசாலைக் கல்வியை முடித்த பின்னர் தொழில் வாய்ப்பின்றி இருக்கின்ற யுவதிகளுக்கே தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தும் வகையில் பனை அபிவிருத்திச் சபையினால் பனைசார் கைத்தொழில் பயிற்சி ஒன்று ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது. கிளிநொச்சியில் பனைசார் கைப்பணிப் பொருள்களை பயிற்சி, பெற்றவர்களிடம் இருந்து கொள்வனவு செய்து அதனை விற்பனை செய்வதற்கு கற்பகம் என்ற பனைசார் கைப்பணிப் பொருள்களை விற்பனை செய்வதற்கான விற்பனை நிலையம் ஒன்றினை அமைக்கவுள்ளதாகவும், பனை அபிவிருத்திச் சபையினால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-06)

# கற்சிலைமடு பாடசாலை பவளவிழா ஏற்பாடு

முல்லைத்தீவு, செப்.30

கற்சிலைமடு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பவளவிழாக் காணும் நிலையில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயரை மகாவித்தியாலயமாக மாற்றி அமைப்பது சம்பந்தமாக பாடசாலை அபிவிருத்திச்சபையின் நிர்வாக சபைக்கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெற்றுள்ளது.

பாடசாலை அதிபர் சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் சில தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. பவளவிழாவை முன்னிட்டு மலர் ஒன்றும் வெளியிட வேண்டுமென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.(எ-500)



*வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியைச் சேர்ந்த தரம் 8 மாணவி சுந்தரராசா பிரியதர்சினி செப்ரெம்பர் மாதம் நடைபெற்ற சிங்கள மொழி பேச்சுப் போட்டியில் வலய, மாகாண மட்டங்களில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். சிங்களபாட ஆசிரியர் திருமதி நடராசா றோஸ்மேரியுடன் அவர் உள்ளார். (எ-43)*

# பஸ் தரிப்பிடங்களை நிறுவித் தருமாறு கோரிக்கை

முல்லைத்தீவு,செப்.30

முல்லை மாவட்டத்தில் பேருந்து தரிப்பிட வசதிகள் இதுவரையில் அமைக்கப்படாமையினால் மரங்களின் கீழும் கடை வாசலிலும் கால் கடுக்க நின்று பேருந்தில் பிரயாணம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பிரயாணிகள் கவலை தெரிவிக்கின்றனர். ஏற்கனவே இருந்த பஸ் தரிப்பிட கட்டடங்கள் அழிந்துள்ள நிலையில் அவை மீளவும் கட்டப்படவில்லை எனவும் அத்துடன் மழை நேரங்களில் ஒதுங்க இடமில்லாது தவிக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டுள்ளதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர். ஆகவே முல்லை மாவட்டத்தில் பேருந்து தரிப்பிடங்களை நிறுவித் தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-500)

# பூநகரி கலாசார பெருவிழாவில் மூத்த கலைஞர்கள் கௌரவிப்பு

பூநகரி, செப். 30

பூநகரி பிரதேச கலாசாரப் பேரவையால் நடத்தப்பட்ட கலாசாரப் பெருவிழாவில் பிரதேசத்தின் மூத்த கலை ஞர்கள் இருவர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இரணைதீவைச் சேர்ந்த கூத்துக் கலைஞர் சூசை சந்தியா, ஞானி மடத்தைச் சேர்ந்த நாடகக் கலைஞர் சின்னத்தம்பி இரத்தினம் ஆகியோரே அவர்களது நீண்ட கலைப்பங்களிப்புக்காகக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கிளிநொச்சி அரச அதிபர் திருமதி ரூபாவதி கேதீஸ்வரன் இவர்களுக்கான விருதுகளை வழங்கிக் கௌரவித்தார்.

பூநகரி பிரதேச செயலர் சு. வசந்தகுமாரின் தலைமையில் முழுங்காவில் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடக்கு மாகாண பொது நிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளர் தி.இராசநாயகம் கௌரவ விருந்தினராகக் கலந்துகொண்டார். மேலதிக அரச அதிபர் எஸ். ஸ்ரீநிவாசன், பூநகரி பிரதேசசபைத் தவிசாளர் பொ. ஸ்ரீஸ்கந்தராஜா, கோப்பாய் ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர் ச.லலீசன், கண்டாவளை உதவி அரச அதிபர் சி. சத்தியசீலன், கரைச்சி உதவி அரச அதிபர் எஸ்.நாகேஸ்வரன், பாதுகாப்புப் படைகளின் உயர் அதிகாரிகள் ஆகியோரும் இந்த நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வட்டக்களரி முறையில் கோவலன் கூத்து இடம்பெற்றதுடன், கோலாட்டம் முதலான நடனங்கள், இசை நிகழ்வுகள், பட்டிமன்றம் ஆகியன இடம்பெற்றன.

கலாசார நிகழ்வின் வரலாற்று ஆவணமாக ''புந்துணா'' என்ற சஞ்சிகையும் வெளியிட்டு வைக்கப்பட்டது. இச் சஞ்சிகை ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை வெளியிடப்படவுள்ளதாகவும் விழாவில் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் மீள்குடியமர்வு இடம்பெற்ற பின்னர் வன்னிப் பிரதேசத்தில் நடைபெற்ற முதலாவது கலாசாரப் பெருவிழா இதுவென்பது குறிப்பிடத்தக்கது. (எ-38)

# கண் சிகிச்சை முகாம் மன்னாரில் இடம் பெற்றுள்ளது

நாவற்குழி, செப். 30

மன்னார் நகர பிரதேச செயலர் பிரிவில் உள்ள பரப்பாங்கண்டல் கிராம அலுவலர் பிரிவில் கடந்த 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முதியோர்களுக்கான கண் சிகிச்சை முகாம் ஒன்று நடைபெற்றுள்ளது.

77 முதியோர் கலந்துகொண்ட இந்த கண் சிகிச்சை முகாமில் 4 முதியோருக்கு கண் சத்திரசிகிச்சை தேவையென இனம் காணப்பட்டது. அவர்களுக்கு கிளிநொச்சி அரச பொது வைத்தியசாலையில் வைத்து சிகிச்சை வழங்கப்படவுள்ளது. சமூக சேவைகள் அமைச்சின் அனுசரணையுடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஹெல்ப் ஏஜ் நிறுவனமும் கலந்து கொண்டது.

மன்னார் பிரதேச செயலரின் வழிகாட்டலில் சமூக சேவைகள் அதிகாரி திருமதி ஜே.மரியப்பிள்ளை, முதியோர் நலன்புரி உத்தியோகத்தர், கிராம அலுவலர் ஆகியோர் இந்த கண் சிகிச்சை முகாமில் கலந்துகொண்டனர்.(எ-121)

# தலை மன்னார் கிராமத்தில் சட்டவிரோத மணல் அகழ்வு

## தடுத்து நிறுத்தக் கோருகின்றனர் மக்கள்

தலைமன்னார் கிராமத்தில் தற்போது மண் அகழ்வு மற் றும் பனை மரம்வெட்டுதல் போன்ற செயற்பாடுகள் இரகசியமான முறையில் இடம் பெற்று வருவதாக அக்கிராம மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

மன்னார் மாவட்டத்தில் மணல் மண் அகழ்வு மற்றும் பனை மரம் வெட்டுதல் போன்றன வேலைத்திட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. இதன் காரணமாக மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த மக்கள் தமது கட்டுமானப் பணிகளுக்காக மன்னாருக்கு வெளியில் இருந்தே மணலைப் பெற்று தமது கட்டுமானப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். அதிகம் பணச்செலவுகளுக்கு மத்தியிலேயே பெரு நிலப் பரப்பில் இருந்து மணல்மண்ணைப் பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில் தலை மன்னாரில் பொலிஸாரின் ஆதரவுடன் அக்கிராமத்தைச் சேர்ந்த சிலரும் வேறு இடங்களைச் சேர்ந்தவர்களும் ட்ரக்டர் மற்றும் டிப்பர் ரக வாகனங்கள் மூலம் மணல் அள்ளிச் செல்லுகின்றனர்.

இதேவேளை தலைமன்னாரில் அதிகளவான பனைமரங்களும் காணப்படுவதால் பனை மரங்களையும் வெட்டிக் கொண்டு செல்லுகின்றார்கள்.

இவ்விடயம் தொடர்பில் தலைமன்னார் பொலிஸாருக்கு பல தடவைகள் கிராம மக்களால் தெரியப்படுத்தியுள்ளபோதும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என கிராம மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தலைமன்னார் பொலிஸார் சட்டவிரோத செயலில் ஈடுபடுவர்களுக்குத் துணை போகிறார்களா என்று மக்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர். (எ-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புற்றுநோய் வைத்தியசாலை வவுனியாவில் அமைக்க முடிவு

வவுனியா, செப். 30

வவுனியா மாவட்டத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்றினைமிக விரைவில் அமைப்பதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

வவுனியா அரச அதிபர் ஏச்.எம். சாள்ஸ் தலைமையில் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் போது இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

கமநெகும வேலைத் திட்டம், மீள் குடியமர்வு அமைச்சு வேலைத் திட்டம் என்ரைப் வேலைத் திட்டம், நிக்கோர்ட் வேலைத் திட்டம், நெல்சிப் வேலைத் திட்டம், கெயர் வேலைத் திட்டம், சீன பாரிய வீதி வேலைத் திட்டம், வரண்ட பகுதிக்கான நீர் வழங்கல் வேலைத் திட்டம் போன்ற வேலைத்திட்டங்கள் மிக விரைவில் பூர்த்தி செய்ய வேண்டும் என அனைவராலும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வவுனியா மாவட்டத்தில் புற்றுநோய் வைத்தியசாலை ஒன்று அமைப்பதற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இவ் வேலைத்திட்டம் மிகக் குறுகிய காலத்துக்குள் நிர்மாணிக்க வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டங்களில் மன்னார், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த ஆறு நாடாளுமன்ற உறுப்பினர் களின் 03 திட்டங்கள் முன் மொழியப்பட்டு ஆராயப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

அனைத்து வேலை திட்டங்களும் துரிதகதியில் பூர்த்தியாக்கப்பட்டு அதிகாரிகள் அறிக்கையினை உடன் வெளியிட வேண்டும் என அமைச்சால் அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் ரிஷாட் பதியுதீன், ஆளுநர் சந்திர சிறி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், உவைஸ் பாரூக், ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் முத்தலிப் பவபாறூக், திணைக்கள அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (எ-431)

# போரால் மனநிலை பாதிக்கப்பட்டவர்கள் கிளிநொச்சியில் இனங்காணப்பட்டுள்ளனர்

## ரொய்ட்டர் செய்தி வெளியிட்டுள்ளது

கிளிநொச்சி, செப்.30

கிளிநொச்சி மாவட்டத்தில் போரால் பாதிக்கப்பட்ட மக்களில் பலர் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர்கள் இனங்காணப்பட்டுள்ளதாகவும் ரொய்ட்டர் செய்திச் சேவை தெரிவித்துள்ளது.

ரொய்ட்டர் செய்திச் சேவை கிளிநொச்சியில் சேகரித்த தகவலின்படி இரண்டு வருடங்களுக்கு முன்னர் போரின்போது முகங்கொடுத்த கோரங்களில் இருந்து மக்கள் இன்னும் மீளத் மீளவில்லை எனத் தெரிவிக்கின்றது. ரஞ்சனி என்ற பெயரைக் கொண்ட பெண் ஒருவர், போரின் போது தனது தாயின் சடலம் எரியுண்டதையும், தமது சகோதரி இரத்தம் தோய்ந்த நிலையில் வீழ்ந்து கிடந்ததையும் உறவினர்கள் கண்முன்னே கொல்லப்பட்டதையும் நினைவு கூருவதை ரொய்ட்டர் சுட்டிக் காட்டியுள்ளது.

இத்தனை சம்பவங்களையும் நேரில் கண்ட தானும் இறந்திருக்க வேண்டும் என்று ரஞ் சனி கூறிய கருத்தை ரொய்ட்டர் கிளிநொச்சி மக்களின் எதிர்கால வாழ்வின் சந்தேகத்துக்கு உதாரணமாகச் சுட்டிக் காட்டியுள்ளது. ஐரோப்பிய ஒன்றிய நிதியின் கீழ் கிளி நொச்சியில் பணியாற்றும் தன்னார் வத் தொண்டர் ஒருவர் இலங்கை அரசு அபிவிருத்தித் திட்டங் களை முன்னெடுக்கின்ற போதும் மக்கள் வாழ்வியல் பிரச்சினை களை எதிர்கொள்கின்றனர். எனக் குறிப்பிட்டுள்ளார்.

மாவட்டத்தில் தற்கொலை சம்பவங்களும், துர்நடத்தைகளும் அதிகரித்து வருகின்றன என்றும் அவர் தெரிவித்துள்ளார். சிலர் தமது மன அழுத்தங்களில் இருந்து விடுபடுவதற்காக விலை குறைந்த மதுபானங்களை வாங்கி வீதியோரங்களில் வைத்தே அருந் துகின்றனர் என்றும் ரொய்ட்டர் குறிப்பிட்டுள்ளது.

# வடமாகாண தமிழ் இலக்கிய விழா ஏற்பாட்டு வேலைகள் துரிதம்

மன்னாரில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 7, 8 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள வடமாகாணத் தமிழ் இலக்கிய விழாவிற்கான முன்னாயத்த வேலைகள் அனைத்தும் பூர்த்தி செய்யப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மன்னார் அரச அதிபர் என்.வேதநாயகன் தலைமையில் நடைபெற்ற மூன்றாவது ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் விழா விற்கான சகல ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

வடமாகாணப் பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர் திருமதி என். சிறிதேவியின் பிரசன்னத்துடன் மன்னார் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற ஒழுங்கமைப்புக் கூட்டத்தில் திணைக்கள உயரதிகாரிகள், கல்விப் பணிப்பாளர்கள், கலாசார அலுவலகர், பாடசாலை அதிபர்கள், கலைஞர்கள், இலக்கிய வாதிகள், மன்றங்களின் பிரதிநிதிகள் உட்படப் பலரும் கலந்து கொண்டு தமது கருத்துக்களை வழங்கியிருக்கின்றனர்.

இதன்படி இரு நாள்களும் காலையில் ஆய்வரங்கம் மன். சித்தி விநாயகர் இந்துக்கல்லூரியிலும், மாலை கலை நிகழ்வுகள் மன்னார் நகரசபை மண்டபத்திலும் நடைபெறவிருக்கின்றன. இதன்போது தெரிவு செய்யப்பட்ட கலைஞர்களின் பெயர்களில் அரங்குகள் அமைக்கப்பட உள்ளன.

அரங்குகள் முறையே பேராசான் கார்த்திகேசு சிவத்தம்பி அரங்கு, வித்துவான் ரகுமான் அரங்கு, சவேரி யான் லெம்பட் அரங்கு மற்றும் பெஞ்ஞமின் செல்வம் அரங்கு எனப் பெயரிடப்பட்டுள்ளன.

விழா ஊர்வலம் மன்னார் - ஜப்பான் நட்புறவுப்பாலத்தில் இருந்து புறப்பட்டு புனித செபஸ்தியார் ஆலய வீதி, வைத்தியசாலை சந்தியூடாக பொது விளையாட்டு மைதான வீதி, பின் அங்கிருந்து மன்னார் - தலைமன்னார் பிரதான வீதி வழியாக நகர மண்டபத்தை அடையும் ஊர்வலத்தில் இன்னியம், மேளதாள வாத்தியங்கள் முழங்க பண்பாட்டு ஊர்திகள் வேடப் புனைவுகள் பவனி வர நகரம் முழுவதும் பிரமாண்ட வளைவுகளும் பதாகைகளும் காட்சிப்படுத்தப் படும்.

இரண்டு நாள்கள் இடம் பெறும் ஆய்வரங்கிலும் எட்டு ஆய்வாளர்கள் தமது ஆய்வுக் கட்டுரைகளை சமர்பித்து உரையாற்றுவர். இரண்டு நாள் கலை நிகழ்வுகளிலும் வட மாகாண பாடசாலைகளினதும், கலாமன்றங்களினதும், நாட்டியம், நாடகம், நாட்டுக் கூத்து என்பன அரங்கேற்றம் செய்யப்படும். விழாவிற்கு வந்து சேரும் ஆய்வாளர்கள், பேராளர்கள் அனைவருக்குமான தங்குமிட வசதிகள் மன்னார் ஞானோதயம், மன்னார் ஆங்கில பயிற்சிக் கல்லூரி என்பனவற்றில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

விழாவிற்கான அலங்கார வளைவுகள் அமைக்கும் பொறுப்பை மன்னார் வர்த்தக சங்கம், மன்னார் நகரசபை, மாந்தை மேற்கு மற்றும் மன்னார் பிரதேச சபைகள் ஏற்றுள்ளன.

ஒலி, ஒளி அமைப்பை வட மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும் விழாவிற்கான பாதுகாப்பை மாவட்ட செயலகமும், சாரணியத்தை மன்னார் புனித ஆனாள் மத்திய மகா வித்தியாலயமும், சின்னம் தயாரிப்பை மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரியும் ஏற்றிருக்கின்றன.

விழா அழைப்பிதழ் அச்சிடுதல், பதாகைகள் அமைத்தல், இலக்கிய ஆளுநர் விருது வழங்கும் பொறுப்புக்களை பண்பாட்டு திணைக்களம் ஏற்றுள்ளது.

இறுதிநாள் நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட சிறந்த இலக்கிய ஆக்கங்களின் ஆசிரியர்கள் மற்றும் ஆளுநர் விருது பெறுபவர்கள் கௌரவிக்கப்பட இருக்கின்றனர்.

இவர்களுக்கான பரிசில்கள், விருதுகள் என்பனவற்றை இந்த விழாவின் சிறப்பு அதிதியாக கலந்துகொள்ளும் வட மாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி வழங்கிக் கௌரவிப்பார்.



முல்லைத்தீவு மாவட்டம் துணுக்காய் உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் சூழ்நிலையில் அதற்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் புதன் கிழமை காலை துணுக்காய் உதவி அரச அதிபர் பணிமனையின் மாநாட்டு மண்டபத்தில், துணுக்காய் உதவி அரச அதிபர் எஸ்.குணபாலன் தலைமையில் இடம்பெற்றது. இதன்போது தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.வினோநோகராதலிங்கம், வவுனியா நகரசபை உப தலைவர் எம்.எம்.ரதன் மற்றும் கிராம சேவையாளர்கள் மற்றும் துணுக்காய் உதவி அரச அதிபர் எஸ்.குணபாலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புதுக்குடியிருப்பில் தேங்காயின் விலை வீழ்ச்சி

முல்லைத்தீவு,செப்.30

முல்லைத்தீவு புதுக்குடியிருப்புப் பகுதியில் தேங்காயின் விலை திடீரென சரிந்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெவிக்கின்றனர்.

புதுக்குடியிருப்புப் பகுதியில் சில கிராமங்கள் மீள் குடியமர்த் தப்பட்டமையால் 65 ரூபா விற்ற தேங்காய் விலை தற்போது 35 ரூபாவாக விற்கப்படுகிறது. மீள் குடியமர்ந்த பகுதிகளிலிருந்து தேங்காய் வரத் தொடங் கியமையே இந்த விலை வீழ்ச்சிக்குக் காரணம் எனத் தெரிவிக்கின்றனர். அதே நேரம் வன்னி மாவட் டத்தில் வாழைப்பழத்தின் விலை அதிகரித்துக் காணப்ப டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (எ-500)

# கிராமிய அபிவிருத்தி அமைப்புகளுக்கு மக்கள் வேண்டுகோள்

அக்கராயனில் இயங்கி வரும் மீள் எழுச்சித் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி அமைப்பு கிராமிய அபிவிருத்திச் சங்கங்களுடன் இணைந்து செயற்படுவதில்லை என்ற குற்றச்சாட்டு மக்களால் முன்வைக்கப்படுகிறது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி அமைப்பு பயனாளிகளை தெரிவு செய்யும் அதேவேளை கிராம அபிவிருத்திச் சங்கங்களும் பயனாளிகளை தெரிவு செய்து பொருள்களை வழங்குகின்றன இதனால் ஒரு குடும்பம் இரு தடவைகள் பொருள்களை பெற்ற நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

அக்கராயன் கிராமிய அபிவிருத்தி அமைப்பு அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்துடன் இணைந்து பணியாற்ற வேண்டும் என்பது மீளக்குடியமர்ந்துள்ள மக்களின் வேண்டுகையாக உள்ளது. (எ-410)

# இலங்கை திறந்த பல்கலைக்கழகத்துக்கு வன்னி மாணவர் விண்ணப்பிக்கலாம்

கிளிநொச்சி, செப்.30

வன்னி மாணவர்களின் நலன் கருதி கிளிநொச்சி புனித திரேசா மகளிர் கல்லூரியில் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் கற்கை நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பல்கலைக்கழகத்தின் சமூக கற்கைகள் துறையினரால் 2011/2012 ஆம் கல்வி ஆண்டுக்கான கற்கைநெறிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1.தொழிலுரிமைத்துவமும் சிறிய வியாபார முகாமைத்துவமும் சான்றிதழ் கற்கை நெறி- இந்தக் கற்கைநெறிக்கு ஏற்கனவே கோரப்பட்ட விண்ணப்ப முடிவுதிகதி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி ஆகும்.

2.சமூக விஞ்ஞானத்தில் சான்றிதழ் கற்கைநெறி- மொழியாற்றலுடன் 18 வயதினைப் பூர்த்தியடைந்தவர்கள் இந்தக் கற்கைநெறிக்கு தம்மைப் பதிவு செய்துகொள்ளலாம். இந்தக் கற்கைநெறியைப் பூர்த்திசெய்து கொள்ளும் யாவரும் கலைமாணி பட்டப்படிப்புக்கு நேரடியாக அனுமதிக்கப்படுவர். அத்துடன் முகாமைத்துவமாணி மற்றும் சட்டமாணி கற்கைநெறிகளுக்கான அனுமதிப் பரீட்சைகளுக்கும் தோற்ற முடியும்.

3.இளைஞர் அபிவிருத்தியில் டிப்ளோமா-இந்தப் பாடநெறிக்கு க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்களிலான சித்தி உடையோர் தம்மைப் பதிவு செய்துகொள்ளலாம்.

4.சமூக விஞ்ஞானத்தில் கலைமாணி- இந்தப் பாடநெறிக்கான அடிப்படைத் தகைமை க.பொ.த.உயர்தரத்தில் மூன்று பாடங்களில் சித்தியுடன், க.பொ.த.சாதாரணதரத்தில் ஆங்கிலப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.


விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 19ஆம் திகதி ஆகும் மேற்படி பயிற்சிநெறிகளுக்கான விண்ணப்பப் படிவங்களை கிளி/ புனித திரேசா மகளிர் கல்லூரியில் இயங்கும் கற்றல் நிலையத் தில் பெற்றுக்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்தவரின் உடலைத் திரவமாக்கும் புதிய தொழில்நுட்பம்



இறந்தவர் உடலை ஊர் முழுவதும் எடுத்துச்சென்று இடுகாட்டில் அடக்கம் செய்வது எமது பரம்பரையான மரபு. அல்லது சுடுகாட்டில் எரிப்போம். காலங்கள் மாறி தற்போது பரவலாக மின்னடுப்பு மூலம் உடலை எரித்து விடுகிறோம். இப்போது அதே போன்று அமைப்பை உடைய ஆனால் தொழில்நுட்பத்தில் வேறுபட்ட முறையொன்று உருவாகியிருக்கிறது. அதுதான் body liquefaction எனப்படும் உடலை நீர்மமாக்குதல். சுற்றுச் சூழலுக்கு தீங்கு விளைவிக்காத இந்த முறையானது மிகவும் எளிதானது. Glasgow&based company மூலம் நடைமுறைக்கு வரும் இந்த பொறி 180 C வெப்பத்தில் உடல் மூன்று மணி நேரத்திற்குள் தகனம் செய்யப்படும், பின்னர் நீரினால் நிரப்பப்பட்டு நீர் வெளியேற்றி மூலம் செறிவான திரவமாக மாற்றப்படும். பச்சை நிறமான இந்தத்திரவத்தை பூங்கா போன்ற இடங்களில் உரமாகவும் பயன்படுத்தலாம், இதன் ஆரம்பகட்டமாக சில இறந்த உடல்களை வைத்து பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



# புற்றுநோயை குணப்படுத்த ‘ஆல்பா கதிர்வீச்சு’

புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 100 ஆண்டு காலமாக ரேடியம் கதிர்வீச்சு மூலம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது புற்றுநோய்களை உருவாக்கும் ''செல்'களை அழிக்கிறது. இதனால் உடலில் பாதிப்புகள் ஏற்படுகின்றன. எனவே, கதிர்வீச்சு செலுத்தாமல் மருந்து மாத்திரைகள் மூலம் குணப்படுத்த டாக்டர்கள் தீவிர முயற்சி மேற்கொண்டனர்.

இந்த நிலையில் ஆல்பா கதிர்வீச்சு மருந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்தை லண்டனின் உள்ள ராயல் மார்ஸ்டன் ஆஸ்பத்திரி டாக்டர்கள் புற்றுநோய் பாதித்த நோயாளிகளுக்கு வழங்கி பரிசோதனை செய்தனர். இந்த மருந்து 922 பேருக்கு வழங்கப்பட்டது.

அதைச் சாப்பிட்டவர்கள் நோயின் தாக்கம் குறைந்து நீண்ட நாள்கள் உயிர் வாழ்ந்தனர். மேலும் இந்த மருந்தினால் பக்க விளைவுகள் எதுவும் ஏற்படவில்லை. எனவே, இந்த மருந்து புற்று நோய்க்கு சிறந்தது என்று இங்கிலாந்தின் புற்றுநோய் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இந்த மருந்து கண்டுபிடித்ததன் மூலம் புற்று நோயை முற்றிலும் குணப்படுத்த மருந்து கண்டுபிடிக்கும் முயற்சியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று முன்னணி ஆராய்ச்சியாளர் டாக்டர் கிறிஸ்பார்க்கர் தெரிவித்துள்ளார். இந்த மருந்து கண்டுபிடிப்பு ஆராய்ச்சி குறிப்புகள் ஐரோப்பிய புற்றுநோய் ஆராய்ச்சிக் கழகத்திடம் சமர்பிக்கப்பட்டுள்ளது.

# உங்கள் தளத்துக்கான மார்க்கை SEO ஒன்லைன் மூலம் தெரிந்து கொள்வதற்கு

ஒவ்வொருவரும் தங்களுக்குத் தெரிந்த வகையில் அல்லது பலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டு எமது தளத்துக்கு உருவாக்கும் Search Engine Optimization சிறப்பாக செயற்படுகிறதா என்பதை இணையத்தளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

இணையத்தளம் மூலம் நாம் பல தளங்களைப் பார்க்கிறோம். SEO இல் நாங்கள் திறமைசாலிகள் என்று சொல்லும் அனைத்து தளங்களையும் நாம் இணையத்தளம் மூலம் SEO Explorer மூலம் சோதித்துப் பார்க்கலாம். நமக்கு உதவுவதற்காக ஒரு தளம் உள்ளது.

இந்தத் தளத்துக்குச் சென்று Enter Url என்று கொடுத்திருக்கும் கட்டத்துக்குள் எந்த வலைப்பூவைச் சோதித்துப்பார்க்க வேண்டுமோ அதன் தள முகவரியைக் கொடுத்து Go என்ற பொத்தானை சொடுக்கினால் போதும்.

அடுத்து வரும் திரையில் எமக்கு Overview என்ற Tab-இல் எமது தளத்தின் ‘ஸ்கோர்’ என்ன என்று தெரிந்து கொள்ளலாம். Title and Meta மற்றும் Kewords என்னவெல்லாம் கொடுத்திருக்கிறோம் என்பதைப் பற்றியும் தெரிந்து கொள்ளலாம்.




எந்தவிதமான பயனாளர் கணக்கும் தேவையில்லை. துல்லியமான SEO முடிவுகளை உடனுக்கூடன் தெரிந்து கொள்ளலாம்.

**http://www.seopageexplorer.com/**

# ஜேர்மன் தலைநகர் சுற்றி சாரதி இன்றி ஓடும் கார்கள்!!



வாகனச் சாரதி இல்லாமல் வாகனம் செலுத்த முடியுமென்று பிறீ பல்கலைக் கழகம் நிரூபித்துள்ளது.பேச்சு, பார்வை, இயக்கம் மூலம் கட்டுப் படுத்தி வாகனம் செலுத்த முடியும். எதிர்காலத்தில் வீதிகள் முழுவதும் கணினி மயப்படுத்தப்பட்டுவிடும். அப்போது இதன் உதவி சேவை நமக்குத் தேவைப்படும் என்கின்றனர். பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் ஜேர் மன் தலைநகர் சுற்றி இந்த வாகனத்தைப் பரிசோதனை செய்தனர். இதன் சுயமான போக்குவரத்தை ஒரு கணினி, மின்னணு மற்றும் பெட்டி, முன் னால் ஒரு கமரா, கூரை முன் மற்றும் பின்பக்க பம்பர்களைச் சுற்றி லேசர் ஸ்கேனர்கள், ஒரு துல்லியமான செயற்கைக்கோள் ஊடுருவல் முறையானது உள்ளிட்ட சாதனங்கள் ஒரு சிக்கலான கோர்வைகள் ஆள்கின்றன.

வாகனத்தைச் சுற்றி 70 மீற்றருக்கு வீதியில் பாதசாரிகள், கட்டடங்கள், மரங்கள், கார்கள் கவனித்து இந்த வாகனம் செல்லும். அத்துடன் போக்குவரத்து விளக்குகள் மேலே சிவப்பு அல்லது பச்சை மற்றும் அதற்கேற்ப போக்குவரத்து விதிகளைப் பேணியும் செல்லும். விஞ்ஞானிகள் அயராத 4 ஆண்டுகளின் பயனாக இச்சிறப்பு தொழில்நுட்பத்தைக் கண்டுபிடிக்க 551,800 டொலர்கள் செலவாகியது. இவ்வகையான கார்கள் எதிர்காலத்தில் எமது சந்தைக்கு வந்தால் வீதி விபத்துக்களைக் குறைக்க ஏதுவாக அமையும். இன்னொரு காலத்தி மனிதன் வாழத்தேவையில். ஒரு காட்சிப் பொருளாக மட்டும் இருந் தால் போதும். மற்ற எல்லா விடயங்கள்ளயும் இயந்திரங்கள் பார்த்துக் கொள்ளும். அக்காலமும் வெகு தொலைவில் இல்லை.

# உங்கள் கணினியின் கமெராவை பாதுகாப்பு கமெராவாக மாற்றுவதற்கு

உங்கள் கணினியில் உள்ள கமராவைப் பயன்படுத்தி நண்பர்களுடனோ அல்லது உறவினர்களுடனோ உரையாடலுக்குப் பயன் படித்தியிருப்பீர்கள் மற்றும் புகைப்படம் எடுப்பதற்குப் பயன்படுத்தியிருக்கலாம்.

உங்கள் கணினியில் உள்ள கமராவைப் பாதுகாப்பு (secruity) கமராவாக எந்த உபகரணமோ அல்லது மென் பொருளோ இன்றி இணைய இணைப்பின் மூலம் மாற்றியமைக்க முடியும்.


இந்த மாற்றத்தினைச் செய்ய CAMMSTER .COM என்ற இணையம் உதவுகிறது. இந்தத் தளத்துக்குச் சென்று PROTECT என்பதை கிளிக் செய்தால் உங்கள் பதிவு கோரப்படும்.

அதிலே உங்கள் மின்னஞ்சல் மற்றும் கடவுச்சீட்டைக் கொடுத்து பதிவு செய்து கொண்டால் உங்களுக்கு உங்கள் மின்னஞ்சல் கணக்குக்குச் செய்தி அனுப்பப்படும்.

அந்த சரிபார்ப்பு கோட்டின் மூலம் திறந்து கொண்டால் தற்போது தோன்றும் விண்டோவில் Cammster, Run Cammster Now பட்டன்களை முறையே கிளிக் செய்தல் வேண்டும்.

இப்போது உங்கள் இணைய விளையாட்டைச் செயற்படுத்துவதற்கான அனுமதி கோரப்படும். அதை ALLOW செய்தால் உங்கள் கணினியில் உள்ள கமரா பாதுகாப்பு கமராவாக செயற் பட்டும்.

எந்தவொரு அசைவு மாற்றங்களையும் படம்பிடித்து உங்கள் மின்னஞ்சல் முகவரிக்கு படங்களாக அனுப்பி வைக்கும். அத்துடன் ஒலியையும் ஏற்படுத்துவதுடன் பாதுகாப்பு வசதியையும் கொண்டுள்ளது. **http://cammster.com/**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முதலில் மக்கள் ஆதரவை நிரூபிக்கட்டும்

## சேகுதாவூத்தின் உரைக்கு சுபைர் பதிலடி

கொழும்பு, செப்.30

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் செல் வாக்கை இழந்துள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் முதலமைச்சரைக்கோருவது மிகவும்வேடிக்கையாகவுள்ளது என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச் சரும், அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸின் கொள்கை பரப்புச் செயலாளருமான எம்.எஸ். சுபைர் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தங்களது கட்சிக்குள்ள மக்கள் ஆதரவை முதலில் நிரூபித்துக் காட்டுமாறும் அவர் சவால் விடுத்துள்ளார்.

'அடுத்து வருகின்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸைச் சேர்ந்தவர்தான் முதலமைச்சராக நியமிக்கப்படுவார் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரகடனப் படுத்தினால் மாத்திரம்தான் எமது கட்சி அரசுடன் இணைந்து போட்டியிடும். அவ்வாறு இடம் பெறவில்லை யென்றால் நிச்சயமாக அரசிலிருந்து பிரிந்து சென்று தனித்தும் போட்டியிட்டு ஆட்சியமைப்போம்'' - என்று மு.காவின் தவிசாளரும், வர்த்தக கூட்டுறவு பிரதியமைச்சருமான பஷீர் சேகுதாவூத் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாய்ந்த மருதில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்திருந்தார்.

பிரதியமைச்சர் பஷீர் சேகு தாவூத்தின் இந்தக் கருத்திற்குப் பதிலளிக்கும் வகையில் கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். கல்முனை மாநகர சபைத் தேர்தலில் போட்டியிடும் அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களை ஆதரித்து கடந்த திங்கட்கிழமை சாய்ந்தமருதில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றும்போதே மாகாண சபை அமைச்சர் சுபைர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய கிழக்கு மாகாண அமைச்சர் சுபைர் மேலும் தெரிவிக்கையில்:

நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பின்னர் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அடைந்த படுதோல்வி உலகறிந்த பேருண்மை.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நினைத்துப்பார்க்கவே முடியாத அளவில் தோல்வியடைந்தது. காத்தான்குடி, ஏறாவூர், ஓட்ட மாவடி ஆகிய மூன்று முஸ்லிம் பகுதிகளும் எமது கட்டுப்பாட்டிலுள்ளன. எமது கட்சியே அமோக வெற்றி பெற்று ஆட்சியமைத்தது.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று மக்கள் அமைச்சர் அதாவுல்லாவின் தலைமையில் ஒன்று திரண்டுள்ளனர். சம்மாந்துறையில் நௌஷாத் தலைமை தாங்குகிறார். அடுத்த மாதம் 8ஆம் திகதியுடன் கல்முனை மாநக ரமும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை விட்டுப் பறிபோய்விடும்.இவ்வாறு மு.காவின் நிலை பரிதாபமாக இருக்கும்போது மு.காவுக்கு எப்படி முதலமைச்சர் பதவி கிடைக்கும்? எவ்வாறுதான் வழங்க முடியும்?

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் அதிக செல்வாக்கைப் பெற்றகட்சியாக அமைச்சர்றிஷாட் தலைமையிலான அகில இலங்கை முஸ்லிம் காங்கிரஸே காணப்படுகின்றது. இது ஜனாதிபதி தொடக்கம் அரச உயர்மட்டத்தினர் வரை நன்கு தெரிந்த விடயம். அப் படியானால் முஸ்லிம் முதலமைச்சர் பதவி எக்கட்சிக்குக் கிடைக்கும் என்பதை நான் கூறவேண்டிய அவசியமேயில்லை. கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டி யிடுவதையே நாமும் விரும்புகிறோம். அப்போதுதான் அக்கட் சிக்குள்ள செல்வாக்கை உலகமே மீண்டுமொரு தடவை அறியச் சந்தர்ப்பம் கிட்டும். என்றார் அவர். (வ)

# போலி ஆவணத்துடன் சேவையாற்றிய ஆசிரியைக்கு விளக்கமறியல்

கண்டி, செப்.30

போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி20வருடங்கள்சேவையில் ஈடுபட்டிருந்த ஆசிரியை ஒருவரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி மேலதிக நீதிவான் சாலிய அபேரத்ன உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இவ்வாறு விளக்கமறியல் உத்தரவுக்கு உட்பட்ட ஆசிரியை, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், பிரபல நடிகருமான ரஞ்சன் ராமநாயக்காவுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தவர் என்பது பொலிஸ் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

மேற்படி ஆசிரியை போலிச் சான்றிதழ்களைப் பயன்படுத்தி 20 வருடங்கள் ஆசிரியையாக கடமையாற்றிவுள்ளார். அவரிடமிருந்து போலி அடையாள அட்டைகள் மற்றும் சான்றிதழ்கள் சிலவும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். (வ)

# தீபாவளிப் பண்டிகைக் காலங்களில் பொருள்களின் விலை குறைக்க வேண்டும்

## ம.ம.முன்னணியின் தலைவி கோரிக்கை

கொழும்பு, செப். 30

எதிர்வரும் தீபாவளியை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் குறைக்கப்படவேண்டும் என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவியும், ஜனாதிபதி ஆலோசகருமான திருமதி.சாந்தினி தேவி சந்திரசேகரன் தெரிவித்துள்ளார்.

இது சம்பந்தமாக அவர் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பிட்டுள்ளதாவது:

தோட்டத் தொழிலாளர்கள் ஏற்கனவே பொருளாதார ரீதியில் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கின்றார்கள். ஒவ்வொரு பண்டிகையின் போதும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும்.

கடுமையான மழையிலும், வாட்டும் குளிரிலும், சுட்டெறிக்கும் வெயிலிலும் தனது அரைவயிற்று உணவுக்காகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் தம்மையே அர்ப்பணித்து உழைக்கும் இம்மக்கள் தீபாவளிப் பண்டிகையின் போதாவது நிம்மதியாகவும், திருப்தியாகவும் இருப்பதற்கு ஏதுவாக புடைவை வகைகளும், உணவு வகைகளும் நியாயமான விலையில் விற்கப்படுவதை சம்பந்தப்பட்ட அமைச்சர் உறுதி செய்யவேண்டும்.

அதேநேரம், கூட்டுறவுச் சங்கங்களும் சதொச போன்ற நிறுவனங்களும் மலையகப் பகுதிகளில் அதிகளவில் தமது கிளைகளை ஆரம்பித்து குறைந்த விலையில் தரமான பொருள்கள் விற்பனை செய்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

அத்தோடு, தோட்டத் தொழிலாளர்களுக்கான முற்பணமும், மாதாந்த சம்பளமும் நேரத்தோடு வழங்கப்பட வேண்டும்.

அத்தோடு இவர்களுக்கான தீபாவளி முற்பணத்தை இரண்டு மடங்காக அதிகரித்து வழங்குவதற்கு இப்போதிருந்தே சகல தொழிற் சங்கங்களும் அழுத்தம் கொடுக்க வேண்டும் - என அவர் குறிப்பிட்டுள்ளார். (வ)



கல்முனை மாநகர சபைத்தேர்தல் பிரசார நடவடிக்கைகள் சூடு பிடித்துள்ள நிலையில் விருப்பு வாக்கு வேட்டையிலும் வேட்பாளர்கள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தேர்தலில் போட்டியிடும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் முதன்மை வேட்பாளர் சட்டத்தரணி முகம்மட் நிஸாம் காரியப்பர், தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வாக்காளர் ஒருவருக்கு வழங்கி ஆதரவு திரட்டுகிறார். (வ-30)

# சம்பூர் மக்களை மீள்குடியமர்த்துமாறு ஏகமனதாக பிரேரணை நிறைவேற்றம்

சம்பூர், செப்.30

கடந்த 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்தத்தைத் தொடர்ந்து சம்பூர் பிரதேச கிராமங்களிலிருந்து இடம்பெயர்ந்து தற்போது நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை தமது சொந்த இடங்களில் மீளக்குடியேற்ற நடவடிக்கை எடுக்குமாறு கோரும் பிரேரணை நேற்று முன்தினம் நடைபெற்ற மூதூர் பிரதேச சபைக்கூட்டத்தில் ஏகமனதாக நிறை வேற்றப்பட்டது.

இதுதொடர்பானபிரேரணையை எதிர்க் கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவருமான க.திருச்செல்வம் முன்மொழிந்தார். ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த பிரதேச சபையின் தவிசாளர் ஏ. எம்.ஹாரிஸ் வழிமொழிந்தார். சபையின் பதினொரு உறுப்பினர்களும் கூட்டத்தில்கலந்து கொண்டனர்.

இதனையடுத்து அங்கு கருத்துத் தெரிவித்த திருச்செல்வம்:

சம்பூரில் 500 ஏக்கரில் அனல் மின் நிலையம் அமைப்பதில் ஆட்சேபனை யில்லை. ஏராளமாகக் கிடக்கும் தரிசு நிலங்களில் அனல் மின் நிலையத்தை அமைக் கலாம். அதற்காக தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்து வந்துள்ள சம்பூர், சூடைக்குடா, நவரத்தினபுரம் ஆகிய கிராமங்களை உயர்பாதுகாப்பு வலயம் என்று கூறி அங்கு மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு அனுமதி மறுப்பது சரியானதல்ல என்று தெரிவித்தார்.

மீளக்குடியமர அனுமதி மறுக்கப்பட்ட நிலையில் ஆயிரக் கணக்கான தமிழ்க் குடும்பங்கள் இன்று கட்டை பறிச்சான், கிளிவெட்டி, பட்டித்திடல் மற்றும் மணற்சேனை ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நலன்புரி நிலையங்களில் சொல்லொணா துயரங்களின் மத்தியில் எதிர்காலத்தை இழந்த நிலையில் வாழ்ந்து வருகின்றார்கள். இதற்கு ஒரு தீர்வு மனிதாபிமான முறையில் காணவேண்டும். ஆகவே இடம் பெயர்ந்த மக்கள் குடியிருந்த கிராமங்களில் மீளக்குடியமர்த்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வேண்டுகோள் விடுத்தார். (வ)

# கிராமப்புற மின் உற்பத்தி நிலையங்கள் எதிர்காலத்தில் மின்சார சபையிடம்

## அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவிப்பு

மஸ்கெலியா, செப்.30

கிராமியப் பகுதிகளில் உள்ள நீர்மின் உற்பத்தி நிலையங்களை இனிவரும் காலங்களில் அரச மின்சார சபையே மேற்கொள்ளவுள்ளது என்று எரிசக்தி மின்சக்தி அமைச்சர் சம்பிக ரணவக்க தெரிவித்தார்.

இதனடிப்படையில் கிராமியப் பகுதிகளில் உள்ள மின் உற்பத்தி நிலையங்கள் பற்றிய விவரங்களையும், அவற்றுக்கான செலவினங்களையும் மின் சக்தி எரிசக்தி அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறும் அமைச்சர் கேட்டுள்ளார்.

மாத்தளை மாவட்டச் செயலாளர் காரியாலயத்தின் கேட்போர்கூடத்தில் நடைபெற்ற செயலமர்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இனிமேல் இலங்கையில் உள்ள அனைத்து மின் உற்பத்தித் திட்டங்களும் மின்சார சபை யினூடாகவே நிர்வகிக்கப்படும் எனக் குறிப்பிட்ட அவர், பிரதேசசபைத் தலைவர்கள் மின்திட் டங்கள் முன்வைக்கும்போது அவை முறையாக மின்சார சபையின் மூலம் உறுதிசெய்யப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
30 செப்ரெம்பர் 2011

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
பாவம், புண்ணியம் பார்த்து சில காரியங் களைச் செய்வீர்கள். குடும்ப உறுப்பினர்கள் தடுத் தும் கேட்காமல், சில வேலைகளைச் செய்வீர்கள். சேமித்த பணம் ஒன்றுக்கு, திடீரெனச் செலவு ஏற்படும். சக ஊழியர்கள் அனுசரணையாக நடந்து கொள்வர். பல நாள்களாகத் தடைப்பட்ட பணவரவு கிடைக்கலாம். பிரியமான உறவினர் சந்திப்பு நிகழும்.

**இடபம்:**
ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் உதவிகளைப் பெறலாம். குடும்ப உறுப்பினர்கள் செய்ய முற்படும் காரியங்களுக்கு, நீங்கள் உதவிகரமாக இருப்பீர்கள். அவசரமாக முடிக்க வேண்டிய வேலை ஒன்றால், அலைச்சல்க ளுக்கு ஆள்படலாம். சிலர் உங்களை ஏமாற்ற முற்பட்டாலும், நீங் கள் தந்திரமாகத் தப்பித்துக் கொள்வீர்கள். எதிர்பாராத பணவர வைப் பெறலாம்.

**மிதுனம்:**
கடன் பிரச்சினைகளை சாக்குப் போக்குச் சொல்லி சமாளிப்பீர்கள். கலைஞர்கள் புதிய வாய்ப்புகளைப் பெறலாம். பெரிய மனிதர்கள் சிலரின் நட்புக் கிடைக்கலாம். எதிர்ப்பே இருக்காது என நினைத்த வேலை ஒன்றில், திடீரென போட்டிகள் உருவாகும். இரண்டு நாள்களாக இழுபறியாக இருந்த வேலை ஒன்று, இன்று முடிவுக்கு வரும்.

**கடகம்:**
மதிப்பு, கௌரவம் மேம்படும். பெரிய அளவில் ஆதாயத்தை எதிர்பார்த்துச் செய்த காரியம் ஒன்றில், எதுவும் கிடைக்காமல் போகலாம். உணவருந்தக் கூட நேரமில்லாமல் சில வேலைகளுக்காக அலையலாம். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். சக ஊழியர்கள் விடுமுறையால் கூடுதல் வேலைப்பளுவைச் சந்திக்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும்.

**சிங்கம்:**
சிலர் மீது கோபம் இருந்தாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நயமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள். மாமன், மைத்துனர்கள் அனுசரணையாக இருப்பர். பெண்கள் வழியில் சிறு உதவிகள் கிடைக்கலாம். நண்பர்கள் சிலருடன் சேர்ந்து, நல்ல காரியங்களைச் செய்ய முற் படுவீர்கள். பலர்பங்கேற்கும் நிகழ்ச்சி ஒன்றில், நீங்களும் கலந்து கொள்ளலாம்.

**கன்னி:**
நல்ல சிந்தனைகள் மனதில் குடிகொள்ளும் நாள். தொழில் ரீதியாக சிலருடன் போட்டி போட்டு செயல்படுவீர்கள். வியாபாரிகள் கடன் மிகுதிகளை வசூலித்து திருப்தி காண்பர். கணவன், மனைவி இடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். சிலர் உங்களிடம் பணம் கடன் கேட்கலாம் கேட்கூலாம். வீண் பேச்சைத் தவிர்க்கவும்.

**துலாம்:**
முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும் நாள். பெரிய அளவில் திட்டமிட்ட காரியம் ஒன்றை, கடைசி நேரத்தில் எளிமையாகச் செய்து முடிக்கலாம். தொழில் ரீதியான கூட்டங்கள் அல்லது நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம். எதிர்பாராத வரவுகள் அல்லது தண்டச் செலவுகளைச் சந்திக்கலாம். உடல் ஆரோக்கிய விஷயங்களில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:**
எதிர்பாராத செலவுகளைச் சந்திக்கலாம். குறுகிய தூர பயணங்கள் செல்லலாம். அயலார் சிலர் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். சுய தொழில் புரிவோர் கூடுதல் முற்பதிவுகளைப் பெற்று கடுமையாகப் பணியாற்ற நேரிடலாம். சொந்தபந்தங்கள் சிலரின் வீடுகளுக்கு செல்லும் வாய்ப்பு உருவாகும்.

**தனுசு:**
வாகன யோகத்திற்கு வாய்ப்பு உண்டு. உத்தியோகத்தர்கள் புதிய பொறுப்புகளை ஏற்றுச் செய்ய நேரிடலாம். பெண்கள் விருந்து, விசேட நிகழ்ச்சிகளில் பங்கேற்பதால், மகிழ்ச்சி, உற்சாகமாக இருப்பர். புதிய விடயங்களை அறிந்து கொள்வதில் அக்கறை காட்டுவீர்கள். பிரியமான சிலருடன் முக்கிய பிரச்சினைகள் தொடர்பாக ஆலோசனை செய்வீர்கள்.

**மகரம்:**
குழப்பங்கள் தீர்ந்து, எதிலும் தெளிவான முடிவு எடுக்கும் நாள். சிலரிடம் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்ற வேண்டும் என்ற துடிப்போடு செயற்படுவீர்கள். எதிர்கால ஆதாயத்தை கருத்தில் கொண்டு, சில காரியங்களைச் செய்வீர்கள். விருந்தினர்கள் வருகையை எதிர்பார்த்து சில முன்னேற்பாடுகளைச் செய்வீர்கள். உதிரி வரவுகளைப் பெறலாம்.

**கும்பம்:**
சில வேலைகளுக்காக சீக்கிரமே எழுந்து செயற்படலாம். மருத்துவச் செலவுகளை சந்திக்கலாம். நண்பர்கள் சிலரைப் பாராட்டிப் பேசி அவர்கள் மூலம் காரியம் சாதிப்பீர்கள். பெண்கள் கடும் வேலைப்பளுவை எதிர்கொள்ளலாம். நாலு பேர் மத்தியில் உங்களின் மதிப்பு, கௌரவம் அதிகரிக்கும். எதிர்பாராத சில வாய்ப்புகளைப் பெறலாம்.

**மீனம்:**
தடை, தாமதங்களால் எரிச்சல் அடையலாம். நீங்களே பணப்பிரச்சினைகளைச் சந்திக்கும் போது, உங்களிடம் நண்பர் ஒருவர் உதவி கேட்கலாம். பணிபுரிவோர் மற்றவர்களை நம்பி எந்த வேலையையும் ஒப்படைக்க வேண்டாம். வெளியூர்களில் இருந்து வரும் சிலருக்காக காத்திருக்கலாம். வழக்கத்திற்கு மாறாக வேலைப்பளு அதிகரிக்கும்.

# அதிகரித்த சர்வதேச நெருக்கடி

ராவய சிங்களப் பத்திரிகை

எழுதியுள்ள கட்டுரை

■ தமிழில்: வீயெஸ்ரீ

நீரோடை ஒன்றைக் கடக்க வசதியாகக் குறுக்கே போடப்பட்டிருக்கும் கடப்பு மரத்தின் நடுவில் நின்று கொண்டு முன்னே செல்வதா அல்லது பின்னால் திரும்பி விடுவதா என்று தீர்மானிக்க இயலாத குழப்ப நிலையில் இன்றைய அரசு தடுமாறுகின்றது.

இந்த நிலையில் அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு குறித்தொதுக்கப்பட்ட அதிகாரங்கள் அளவுக்கு அதிகமானதா அல்லது குறைவானதா என்பது குறித்து விமல் வீரவன்ஸ ஒரு புறம் மாநாடு கூட்டி ஆராய்கிறார்.

நாட்டின் தென்பகுதி பெரும்பான்மையின மக்களுக்கென அரச ஆதரவு ஊடகங்களைப் பயன்படுத்தி காலைமுதல் மாலைவரை மேற்கொள்ளும் பரப்புரைகள் ஒருபுறம், ஜனாதிபதி ஐ.நா. பொதுச் சபையில் சந்தர்ப்ப சூழ்நிலையைக் கொள்ளாது ஜனாதிபதி வெளியிட்ட கருத்து வெளிப்பாடுகள் ஒரு புறம், இவற்றின் மத்தியில் அல்லாடுகிறது அரசு. மஹிந்த தலைமையிலான நிர்வாகத்தினால் தூண்டப்பட்ட சர்வதேச விரோதப் போக்கால் உருவாகியுள்ள இறுக்க நிலை காரணமாக இந்த நாட்டின் தமிழ் மக்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் அரசியல் தீர்வொன்றை வழங்கியாக வேண்டிய நிர்பந்தம் உருவாகியுள்ளதை ஏனைய ராஜபக்ஷமார் உணர்கின்றார்களோ என்னவோ, நிச்சயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உணரவேண்டிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

சர்வதேச ரீதயில் உருவாகத்தக்க இத்தகைய எதிர்ப்பு நிலை குறித்து இந்த நாட்டில் ஆட்சியாளர்களோ, பேரினவாதச் சிந்தனை கொண்ட சிங்கள மக்களோ ஒருபோதும் பெரிதாக அலட்டிக் கொள்வதில்லை.

இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இனக்கலவரங்களுக்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் சமூக உணர்வு பேரினவாதத் தரப்புக்கள் மத்தியில் ஒரு போதும் இருந்ததில்லை. 1958 ஆம் ஆண்டின் இனக்கலவரத்தின் போது ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ்ப் பொது மக்கள் படுகொலையுண்ட போதிலும், அவர்களது சொத்துக்கள் சூரையாடப்பட்ட போதிலும், அதற்கான பொறுப்பை ஏற்றுக்கொள்ளவோ, குற்றமிழைத்தவர்களுக்குத் தண்டனை வழங்கவோ அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென எவரும் வற்புறுத்தவில்லை.

1971ஆம் ஆண்டின் ஜே.வி.பி. கிளர்ச்சியின் பின்னரும் அத்தகைய போக்கே சிங்கள சமூகத்தில் காணப்பட்டது. அழகுராணி மன்னம்பேரி படுகொலைச் சம்பவத்தில் மட்டுமல்ல அதற்குப் பின்னர் இடம்பெற்ற சட்டவிரோத குற்றச்செயல்கள் மற்றும் கொலைகள் குறித்தும் நாட்டின் குடிசார் சிங்கள சமூகங்கள் விசாரணை நடத்தக் கோரவோ, எதிர்ப்பை வெளிப்படுத்தவோ ஆர்வம் காட்டியதில்லை.

அதன் பின்னர் 1983 ஆம் ஆண்டின் கறுப்பு ஜூலை கலவரங்கள் குறித்தோ 1988-1990 ஆண்டுகள் கால இடைவெளியில் இடம்பெற்ற படுகொலைச் சம்பவங்கள் குறித்தோ, திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட சொத்துச் சூறையாடல் குறித்தோ ஆகக்குறைந்தது வெளிப்படையான விசாரணைகள் மேற்கொள்ளுமாறு கூட அரசை வற்புறுத்தவோ அழுத்தம் கொடுக்கவோ இந்த நாட்டின் குடிசார் சமூகங்கள் தவறின. அத்தகைய அழுத்தங்களை ஆட்சியில் இருந்த அரசுக்கு விடுக்க நாட்டுக்கு வெளியே வெளிநாடுகளில் வாழ்ந்து வந்த இலங்கையர் சமூகம்கூட அந்தக் காலகட்டத்தில் அக்கறை காட்டியதில்லை.

எனவே மனச்சாட்சியற்ற இந்த நாட்டின் சமூகங்கள் மத்தியில், சாட்சிக்காரர்கள் எவருமே இல்லாது போரை முன்னெடுக்கலாம் என்றும், போர் இழப்புக்கள் குறித்த தகவல்களை மூடிமறைத்துவிடலாம் என்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அரசு எண்ணியதில், நம்பியதில் புதுமையேதும் கிடையாது. ஆனால் யதார்த்தம் அவ்வாறு அமைந்து விடவில்லை.

தற்போது போரின்போது ஏற்பட்ட இழப்புகளுக்கும் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புகளுக்கும் நிறையவே சாட்சிகள் கிட்டியுள்ளன. போர் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் கழிந்த நிலையில் இறுதிப் போரில் இடம்பெற்ற குற்றங்கள் குறித்து சர்வதேச அமைப்புக்கள் பலவும் வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் இலங்கையர் சமூகமும் அரசுக்கு எதிராக வலுவான சாட்சியங்களை முன்வைத்துக் குற்றம் சுமத்தியுள்ளன.

இவற்றின் மத்தியில் தற்போது பல வெளிநாட்டு அரசுகளும் சர்வதேச மற்றும் வட்டகை அமைப்புகளும் இலங்கை தொடர்பான தமது மதிப்பீடுகள் மற்றும் நிலைப்பாடுகளை வெளிப்படையாக முன்வைத்து வருகின்றன; விமர்சித்து வருகின்றன.



சனல் - 4 வெளியிட்ட 'சிறிலங்காவின் கொலைக்களம்' ஆவணப்படத்தில் காட்டப்படுபவை குறித்து இலங்கை அரசும், இந்த நாட்டின் சிங்கள சமூகமும் என்னதான் மறுப்பையும் ஆட்சேபனையும் முன்வைத்தாலும், சர்வதேச சமூகத்தின் குற்றச்சாட்டுக்களை அலட்சியப்படுத்தினாலும், போரின் இறுதி நாள்களில் மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலை தொடர்பாக, அது குறித்த குற்றச்சாட்டுத் தொடர்பாக சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேசத்தின் குரல்கள் வலுத்து வருகின்றன. இது இலங்கை அரசுக்கு நன்மை பயப்பதாக அமையப் போவதில்லை.

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் இறுதிப் போரின் கடைசி நாள்களில் இடம்பெற்ற மனிதப்பேரவலம் தொடர்பாக விசாரிக்கவென நியமித்த குழுவின் அறிக்கையை ஜெனீவாவில் நடைபெறும் மனிதஉரிமை பாதுகாப்புச்சபையின் 18ஆவது கூட்டத் தொடரில் உத்தியோகபூர்வமாக செப்ரெம்பர் 12ஆம் திகதியன்று சமர்ப்பித்துள்ளனர்.

இறுதிப் போரின்போது இடம்பெற்ற மனிதப் பேரவலம் தொடர்பாகப் பொறுப்புக்கூறுதல் தொடர்பான அறிக்கையொன்றை எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் பாதுகாப்புச் சபையின் 19ஆவது கூட்டத்தொடரில் சமர்ப்பிக்க வேண்டும் என்ற பிரேரணையை நிறைவேற்றுமாறுகோரும் கோரிக்கை ஆபிரிக்க, ஐரோப்பிய, ஜேர்மனி மற்றும் சர்வதேச நாடுகளைச் சேர்ந்த 16 சர்வதேச அமைப்புக்களால் செப்ரெம்பர் 16 ஆம் திகதியன்று மனித உரிமைகள் பாதுகாப்புக்குழுவின் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

அதேவேளை 2013ஆம் ஆண்டு பொதுநலவாய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ந்துவரும்
# ...ச
# ...டிகள்

...த்திரிகையில் குசல் பெரேரா
...ட்டுரையின் தமிழாக்கம்

"தமிழ்நாடு மாநில அரசு, இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ராஜபக்ஷ அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசைக் கோரும் தீர்மானமொன்றைத் தமிழக சட்ட சபையில் கடந்த ஜூன் மாதத்தில் ஏகமனதாக நிறைவேற்றியிருந்தது. இத்தகைய பின்னணிகள் காரணமாக அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள ஐ.நா.மனித உரிமை சபையின் கூட்டத் தொடர் இலங்கை அரசுக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தும்."





நாடுகளின் தலைவர்களது மாநாட்டை இலங்கையில் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கனேடியப் பிரதமர் ஸ்ரீவன்ஹாபர் கருத்து வெளியிட்டுள்ளார். திட்டமிடப்பட்டபடி அந்த மாநாடு இலங்கையில் நடத்தப்படுமானால் அதனை ஏனைய நாடுகள் பகிஷ்கரிக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அதுமட்டுமன்றிப் பொதுநலவாய நாடுகளின் உறுப்புரிமையிலிருந்து இலங்கையை இடைநிறுத்த வேண்டுமெனக்கோரி ஆஸ்திரேலியாவின் கிறீன் கட்சியினர் செப்ரெம்பர் மாதம் 20ஆம் திகதி எதிர்ப்பு நடவடிக்கையொன்றை ஆரம்பித்துள்ளனர். அத்தகைய இடைநிறுத்தல் 2007ஆம் ஆண்டில் பாகிஸ்தானுக்கு எதிராகவும் பிஜி அரசுக்கு எதிராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டதை அவர்கள் உதாரணமாகச் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அதேசமயம் சுவிற்சர்லாந்துக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படவிருந்த மேஜர் ஜெனரல் ஜகத் டயஸ், வன்னியில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது 57ஆவது படைப் பிரிவின் கட்டளையிடும் அதிகாரியாகச் செயற்பட்டதன் மூலம் போர்க்குற்றச்சாட்டுக்கு உள்ளாகி உள்ளார். யுத்தத்தில் தமிழ்ப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டமைக்கு பொறுப்பேற்றாக வேண்டும் எனக் குற்றம்சாட்டி அந்த நாட்டின் இரு பிரபல அமைப்புகள் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தன. இதனால் அவரது தூதுவர் நியமனத்தை ஏற்க சுவிற்சர்லாந்து அரசின் வெளியுறவு அமைச்சு மறுப்புத் தெரிவித்தது. இதனால் மேஜர் ஜெனரல் ஜகத் டயசைத் திருப்பி அழைக்க வேண்டிய நிலை இலங்கை அரசுக்கு ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவை யாவற்றுக்கும் மேலாக, கடந்த சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்க சமஷ்டி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குத் தொடர்பாக அவரை நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நீதிமன்றத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

வன்னிப் போரின் கடைசி நாள்களில் வெள்ளைக் கொடியுடன் சரணடைய வந்த விடுதலைப் புலிகள் உறுப்பினர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாகக் குற்றம்சாட்டப்பட்டவர்களில் ஒருவரான, அப்போது வெளியுறவுச் செயலராக இருந்த பாலித கோஹன்னவுக்கு எதிராக 'ஹேக்' சர்வதேச யுத்தக் குற்றங்களை விசாரிக்கும் நீதிமன்றத்தில் ஆஸ்திரேலியாவின் சிவில் அமைப்பொன்றினால் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

அதேசமயம் தமிழ்நாடு மாநில அரசு, இலங்கையின் போர்க் குற்றங்கள் தொடர்பாக ராஜபக்ஷ அரசுக்கு எதிராக நடவடிக்கை எடுக்குமாறு இந்திய மத்திய அரசைக் கோரும் தீர்மானமொன்றைத் தமிழக சட்ட சபையில் கடந்த ஜூன் மாதத்தில் ஏகமனதாக நிறைவேற்றியிருந்தது.

இத்தகைய பின்னணிகள் காரணமாக அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் இடம்பெறவுள்ள ஐ.நா. மனித உரிமை சபையின் கூட்டத்தொடர் இலங்கை அரசுக்குப் பெரும் தலைவலியை ஏற்படுத்தும்.

## சனியின் சங்கடம்



ஒருத்தருக்கு சோதிடத்தில் நம்பிக்கை அதிகம். அடிக்கடி பார்த்துக் கொண்டிருப்பார். இப்போது எனக்கு நேரம் சரியாக இல்லை "சனி மாறினால் எல்லாம் சரியாகப் போய்விடும்" என்பார்.

சனியைக் கண்டு பயப்பிடாதீர்கள் என்றால், "எப்படிப் பயப்படாமல் இருக்க முடியும்" என்பார்.

சனியால் ஏற்படுகின்ற இடைஞ்சலை விட, சனி பற்றிய பயத்தினால் எற்படுகின்ற இடைஞ்சல்தான் அதிகம்.

அது சம்பந்தமாகக் கேள்விப்பட்ட கதையொன்று உள்ளது.

கைலாயத்தில் இருக்கின்ற பரமசிவனைப் பார்ப்பதற்கு பக்தகோடிகள் பெருமளவானோர் வர ஆரம்பித்தார்களாம். அவர்கள் அங்கே வசதியாகத் தங்குவதற்கு ஒரு மண்டபம் கூட இல்லை. காற்று, மழை, வெயிலில் கஷ்டப்பட்டார்கள். பார்ப்பதற்கு பாவமாக இருந்தது. உடனே பார்வதி பரமேஸ்வரன் இதைக் கவனித்தார்கள்.

சரி அவரைத் தேடி வருபவர்களுக்கு நிழலாக, பாதுகாப்பான ஒரு மண்டபம் கட்டலாம் என்று கட்டி முடித்தார்கள்.

அதன்பின் அங்கே ஒரு சோதிடர் வந்தார். அவர் மண்டபத்தைப் பார்த்து கூறினார் "அம்மா நீங்கள் மண்டபம் கட்டிய நேரம் சரியில்லை, சீக்கிரமே சனிவந்து உட்காரப் போகிறார். உடனே இந்த மண்டபம் இடிந்து விழப்போகிறது என்றார்.

இதைக் கேட்டதும் பார்வதிக்கு கோபம் வந்துவிட்டது. நேராகப் பரமசிவனிடம் போய் "நான் கட்டியிருக்கிற மண்டபம் இடிந்து விழப்போகிறதாம். ஜோசியர் கூறுகிறார். எனக்குப் பயமாக இருக்கிறது" என்றார்.

"நான் கட்டிய மண்டபத்தை சனி வந்து இடிக்கிறதா? எமது கௌரவம் என்னாவது. என்னை விட சனி பெரிய ஆளா? அதன்பின் என்னால் தலைநிமிர்ந்து நடக்க முடியுமா?" என்றார்.

"இதற்கு என்ன செய்யலாம்?" என்றார் பரமசிவன் "நீங்கள் இப்போதே சனீஸ்வரனிடம் போய் இங்கே வரக்கூடாது என்று கூறுங்கள்" என்றார்.

பரமசிவன் "தேவி! சனிக்கு சகல சக்திகளையும் நாமே கொடுத்துவிட்டு இங்கே வரக்கூடாது என்று கூறுவது நியாயமில்லை. அதே நேரத்தில் மண்டபம் இடிந்து விழுந்தால் உன் கௌரவம் பாதிக்கப்படுமே" என்று ஒரு யோசனை கூறினார்.

"நான் சனியிடம் போய் மண்டபத்துக்கு வர வேண்டாம்" என்று சொல்லிப்பார்க்கிறேன். சரியென்று ஏற்றக்கொண்டால் பரவாயில்லை. முடியாது என்று சொல்லிவிட்டால் நான் இங்கே இருந்தபடியே என் உடுக்கையை ஆட்டி சத்தம் கொடுக்கிறேன். அந்தச் சத்தத்தை வைத்து விசயத்தைப் புரிந்துகொண்டு, சனி இங்கே வருவதற்குள் மண்டபத்தை நீயே இடித்துவிடு; யாராவது கேட்டால் ஏற்கனவே கட்டியிருக்கிற அமைப்பு பிடிக்கவில்லை. புதுப்பித்துக் கட்டப்போகிறோம் என்று சொல்லிவிடு. சனி வந்து இடித்தால் தானே கௌரவக் குறைச்சல் அதற்கு முன்னால் நீயே இடித்து உன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்" என்றார். தேவியும் அதற்குச் சம்மதித்தார்.

பரமசிவன் புறப்பட்டுப் போனார். சனீஸ்வரனைப் பார்த்து விவரத்தைக் கூறினார். சனீஸ்வரன் அதைக் கேட்டவுடன் "இவ்வளவு தூரம் நீங்கள் வந்து கேட்டபின் நான் மீறி இங்கே வருவேனா? மண்டபத்தை இடிப்பதில் எனக்கு விருப் பமில்லை. இதற்குப் பிரதிபலனாக நீங்கள் ஒரு காரியம் செய்யவேண்டும்" என்று கேட்டார். "என்ன செய்யவேண்டும்?" சொல் என்றார் ஈஸ்வரன்.

"ஒரே ஒரு தடவை உங்கள் ஆனந்தத் தாண்டவத்தை நான் பார்க்கவேண்டும்; அதுதான் என் ஆசை" என்றார்.

"அவ்வளவுதானே இதோ ஆடுகிறேன்" என்று ஆட ஆரம்பித்தார் அப்போது அவர் கையில் இருந்த உடுக்கை இயல் பாகவே அசைய ஆரம்பித்தது . அந்தச் சத்தம் பார்வதி காதில் விழுந்தது. அவ்வளவுதான் "சனி சம்மதிக்கவில்லை போலிருக்கிறது என்று முடிவு செய்து அவன் வந்து இடிப்பதற்கு முன்னர் நாமே இடித்து விடுவோம்" என நினைத்து மண்டபத்தை இடித்துவிட்டு உட்கார்ந்து இருந்தார். பரமசிவன் வந்தபின்புதான் நடந்த விவரம் புரிந்ததாம். பார்வதிக்கு யாராக இருந்தாலும் எச்சரிக்கை அவசியம் என்பதை இதிலிருந்து நாம் புரிந்து கொள்ளலாம்.

ஒருத்தர் வீடுகட்டினார். பின் ஜோசியம் பார்த்தார். ஜோசியர் சொன்னார் "நீ வீடுகட்டிய நேரம் சரியில்லை. கிரகப்படி பார்த்தால் இந்த மாதம் 10ஆம் திகதி சனி வந்து உட்காரப் போகிறார் அந்த வீட்டில்", என்றார்.

பத்தாம் திகதிதானே நான் அங்கே குடியிருக்கப் போகலாம் என்று இருக்கிறேன் என்றார் வீட்டுக்காரர்.

"இதைத் தான் சொன்னேன் "என்றார் ஜோசியர்.

சுகி. சிவம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் சித்தியடைந்த மாணவர்கள் பாடசாலை அதிபர் எம்.எஸ்.பத்மநாதன் ஆரம்பக் கல்வி அதிபர் என்.எஸ் செல்வரத்தினம் தரம் ஒன்று, இரண்டு, மூன்று இணைப்பாளர் திருமதி மாலதி மாதவன் தரம் 5 ஆசிரியர்களான எஸ்.ரூபன், ஜி.ஐங்கரன், கே.செல்வகுமார், திருமதி மஞ்சுளா இரவீந்திரன், திருமதி ராஜினி மன்றுளாடி ஆகியோருடன் உள்ளனர். (ம)

# மீண்டும் துளிர்விட்டு வளர்ந்து வரும் காரைநகரின் கல்விப் பாரம்பரியம்

## காரைநகர் உதவி அரச அதிபர் தெரிவிப்பு

காரைநகர், செப்.30

தனக்கெனத் தனியிடத்தைக் கொண்டிருந்த காரைநகர் கல்விப் பாரம்பரியம் யுத்த சூழ்நிலைகளின் போது ஒரு தளர்வு நிலையை எட்டியிருந்தது.

எனினும் தற்போது மீண்டும் துளிர்விட்டு வளரத் தொடங்கியுள்ளது.

இவ்வாறு காரைநகர் உதவி அரச அதிபர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.

தரம் 5 பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் கௌரவிப்பு விழா காரைநகர் கலாநிதி ஆதியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்ததாவது:

கடந்த ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் ஐந்து மாணவர்களே காரைநகர் பிரதேசத்தில் சித்தியடைந்திருந்தனர் ஆனால், இந்த முறை 16 மாணவர்கள் சித்தியடைந்திருந்திருக்கின்றமை காரைநகரின் கல்வி வளர்ச்சியைக் காட்டுகின்றது. இது அடுத்த ஆண்டு இரு மடங்காக அதிகரிக்க வேண்டும்.

மிகவும் பின் தங்கிய பிரதேசமாக காணப்பட்ட ஊரி பிரதேசத்திலுள்ள ஊரி அ.மி.த.க பாடசாலை மாணவன் தீவக வலயத்தில் முதன் நிலை மாணவனாக சித்தியடைந்திருப்பது காரைநகர் பிரதேச கல்விப் பாரம்பரியம் மீண்டும் தழைத்தோங்குவதைக் காணமுடிகின்றது.

மட்டுப்படுத்தப்பட்ட வசதிகளைக் கொண்டுள்ள போதிலும் காரைநகர் பிரதேச மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளார்கள். தீவக வலயத்தில் சித்தியடைந்த 36 மாணவர்களில் 16 மாணவர்கள் காரைநகர் கோட்டத்தில் சித்தியடைந்திருப்பது பாராட்டப்பட வேண்டியதாகும்.

இந்த மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த கல்விமான்களாக வந்து காரை மண்ணின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

எதிர்கால சமுதாயத்தில் சிறந்த நற்பிரஜைகளாக அவர்கள் உருவாகுவதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் வழிகாட்ட வேண்டும். - என்றார்.

காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் க.சோமசேகரம் உரையாற்றுகையில்:

இன்னும் இரு மாதங்களில் எமது பொறுப்புக்களைப் புதிய நிர்வாகத்திடம் கையளிக்க உள்ளோம். அடுத்த இரு மாதத்தில் இதற்கான பொதுக் கூட்டம் இடம்பெறவுள்ளது. காரைநகரின் அபிவிருத்தியில் ஆர்வம் உள்ளவர்கள் இதில் பங்குபற்ற வேண்டும்.

புலம் பெயர்ந்து வாழும் எமது ஊரைச் சேர்ந்தோர் காரைநகரின் கல்வி வளர்ச்சியில் அதிக அக்கறையுடன் உள்ளனர்.

கல்வி வளர்ச்சிக்காக அனைத்து உதவிகளையும் வழங்கத் தயாராக உள்ளனர். அதனை எமது சமூகம் சரிவரப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். - என்றார்.

(ம-250)

# சமூகத்தின் சிறந்த தூண்களாக மாணவர் வளர்க்கப்பட வேண்டும்

## கரைச்சி பிரதேச செயலர் உரை

கிளிநொச்சி, செப்.30

சமூகத்தின் சிறந்த தூண்களாக மாணவர்கள் வளர்த்தெடுக்கப்பட வேண்டும்.

இதற்கு ஏற்ற வகையில் ஒழுக்கக் கல்வியையும் ஆன்மிகக் கல்வியும் புகட்டப்பட வேண்டும்.

ஒழுக்கக் கல்வியும் ஆன்மிக நெறிமுறைகளும் ஒருங்கே கிடைப்பதால் மகாதேவா மாணவர்கள் சமூகத்துக்கு சிறந்த தூணாக விளங்குவார்கள்.

இவர்கள் ஒவ்வொருவரின் திறனையும் செயற்பாட்டையும் அறிவார்ந்த விடயங்களையும் பார்க்கும் போது தெளிவாக தெரிகின்றது.

இவ்வாறு கரைச்சிப் பிரதேச செயலாளர் ஜி.நாகேஷ்வரன் தெரிவித்தார்.

மகாதேவா ஆச்சிரம சிறுவர்களின் பிள்ளைகள் விழாவும் பிறந்தநாள் விழாவும் தலைவர் தி.இராசநாயகம் தலைமையில் இடம் பெற்றன.

இதில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:

கிளிநொச்சி மாவட்டத்தில் கொடிவாரம் ஒன்றை அறிமுகப்படுத்தி அதன் ஊடாக கிடைக்கும் நிதியை மகாதேவா ஆச்சிரம சிறுவர்களின் அபிவிருத்திக்கு முழுமையாக பயன்படுத்தலாம்.

இந்தத் தேவையை- இதற்கான ஏற்பாட்டை நான் முழுமையாக மேற்கொள்ளவுள்ளேன். கிளிநொச்சி மாவட்ட மக்களும், அரச, அரசார்பற்ற நிறுவன மக்களும் முழுமையாக உதவுவார்கள்.

வடக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய அரச, அரசார்பற்ற மற்றும் வர்த்தக பொது மக்களும் இந்த கொடிவார அபிவிருத்திக்கு முழுமையாக ஒத்துழைக்க வேண்டும்.- என்றார்.

மகாதேவா ஆச்சிரம இல்லத் தலைவரும் வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளருமான தி.இராசநாயகம் உரையாற்றுகையில்:

சிறார்களின் அபிவிருத்திக்கு நவீன கலாசார மண்டபம், சிறுவர் பூங்கா, பாலர் பாடசாலை, கழிப்பறைகள், கிணறுகள் போன்றன உடன் தேவையாக உள்ளன.

இதனை விட புதுமுறிப்பில் உள்ள கட்டடங்களை புனரமைப்பதற்கு மூன்று மாணவர் விடுதி அலுவலகக் கட்டடம், சமையலறைக்கட்டடம், 15கழிப்பறைகள், 5 கிணறுகள், ஒரு பாலர் பாடசாலை என்பன முழுமையாக தேவையாக உள்ளன. - என்றார். (ம-302)

# கணிதத்திறன் விருத்தி போட்டி வெற்றியாளர்

பருத்தித்துறை, செப்.30

பருத்தித்துறை கோட்டப் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட விரைவு கணித கணிதத்திறன் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களின் விவரங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இந்த மாணவர்கள் வலய மட்ட விரைவு கணித கணித்தற்றிறன் விருத்திப் போட்டியில் பங்குபற்றுவதற்கான தகுதியைப் பெற்றுள்ளனர்.

தரம் 2 - இ.யசோதா (துன்னாலை மேற்கு மெதடிஸ் மிசன் தமிழ் கலவன் பாடசாலை), மு.வைஸ்ணவி (தும்பளை சிவப்பிரகாச மகா வித்தி), டெ.துஷ்யந்தன் (தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை), இ.சாயி சந்தோஷ் (மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி), தி.தீபத் (மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி).

தரம் 3- நி.நிருபா (வட இந்து மகளிர் கல்லூரி), க.அம்சாயினி (வட இந்து மகளிர் கல்லூரி), பா.சாகித்தியா (வட இந்து மகளிர் கல்லூரி), த.கீர்த்தனா (மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி), இ.விதுஷன் (தும்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை).

தரம் 4- கோ.தர்ஷிகா (மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி), த.அபிராமி (மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தி), ஜெ.சயானந் (தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை), ந.அனுசியா (வல்லை அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை), தி.மலக்சியா (துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிசன் தமிழ கலவன் பாடசாலை), சி.சாத்வீகா (துன்னாலை மேற்கு மெதடிஸ்த மிசன் தமிழ் கலவன் பாடசாலை).

தரம் 5 - இ.துஷாதகன் (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி), செ.ஹம்சாயினி (வட இந்து மகளிர் கல்லூரி), த.சலோமியா (மேலைப் புலோலி சைவப்பிரகாச வித்தி), சி.சயந்தன் (வல்வை அமெரிக்க மிசன் தமிழ் கலவன் பாடசாலை), கி.றஜிதா (வட இந்து மகளிர் கல்லூரி), இ.கம்ஷிகா மேலைப் புலோலி சைவப் பிரகாச வித்தி). (ம-190)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையின் பெறுபேறுகள் சில

புலோலி கிழக்கு அ.த.க. பாடசாலை - றெ.கிருஜன்-170, ஸ்ரீ.பவித்திரன்-166, து.அபிசாந்-163.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தி - வஹர்சன்-191, மு.கிசோத்தமன்-184, பி.அர்ஜின்-182, பா.கிருஷாந் -180, ந.அக்சயன்-175, த.சாஸ்வதா -174, லோ.விஷ்ணுகாந்- 174, ச.கேதாரன்-170, த.ஜிருக்ஷன் -170, ஜீ.கிருஷாந்தன்-165, கி.வருணன்-165, சி.தேமதுஷன்-165, த.அக்ஷித்-164, உ.அட்சயன் -164, சி.சாருஜன் -162, சு.டினுசாந்-162, பா.பிறேமமயூரேசன்-162, ப.தினோஜன்- 162, பு.லிபிஷன்-160, ப.சசிவர் னன்-160, இ.சுகிர்ராம்-160, அ.டிஜிந்தன்-158, ஜெ.கெனத் -158, இ.கரித்கேசன்-158, அ.தேவகீதன்-157, அ.சாமிக்கா தர்சினி- 157, யு.வசீகரன்-157, மு.தர்சிகன்-155, கோ.வித்தியாதரன் -155, சி.கோகுலன் -154, பே.கஜன் -154, வி.சதுர்ஷின்-154, ர.அனோஜன்-153 , சி.கஜீபன்-153, நா.கிருதார்த்தன்-152, கி.சபரீசன்-152, சு.விதுசன்-152, வி.கிருஷாந்- 152, பி.பிரவீன்-151, குபோவாஸ் -151, செ.வரலக்ஷன்-151, தா.லோகிதன்-150, ரா.கிருபாஜினி-150.

புற்றளை மகா வித்தி - சு.துவாரகன்-174, பூநிருஷா-163 வி.கோகுலமாதவன் -159, த.வாசிகன்-158, பா.ஜிந்துகா-154.

மருதங்கேணி இ.த.க.வித்தி - சி.சிறிமிதிலா- 165, நி.அருள்நிலா-154, பா.திவா -154.

சங்கானை சிவப்பிரகாச மகா வித்தி- இ.சசி- 159, அறம்மியா-158, செ.தரணிஜன்-151.

சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலை-ப.சஜிகா-188.

கச்சாய் அரசினர் பாடசாலை - சு.கேரன் சர்மா-187.

கச்சாய் அ.த.க.பாடசாலை




சு.கேரன் ஷாமா-187 த.குபேரன்-163




யோ.சைந்தவி-158 பா.கபியரசன்-152

# நிர்வாகிகள் தெரிவு

தென்மராட்சி, செப்.30

தென்மராட்சிப் பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாச புனரமைப்புக் கூட்டம் அண்மையில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் நடப்பு வருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - வே.விநாயகமூர்த்தி, உபதலைவர் - தங்கராசா, செயலாளர்- செ.மகேஸ்வரன், உத விச் செயலாளர்- திருமதி த.மங்கயற்கரசி, பொருளாளர் - திருமதி ம.கீர்த்திநாதன்.

மேலும் 10 நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ம-207)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதநேயம் தெரியாதோரின் சேவைகளால் என்னதான் பயன்?

**தாய்**- பிள்ளை உறவு என்றால் என்ன தெரியுமா. எந்த உறவு முறையிலும் இல்லாத தார்ப்பரியமான உறவு முறைக்குள் இது அடங்கும். அப்படிப்பட்ட இந்த உறவு முறைக்குள் எந்தப் பிரச்சினை வந்தாலும் எந்தப் பாதிப்பும் இல்லாமல் ஒன்று சேரக் கூடிய வரப் பிரசாதம் இதற்கு இருப்பது சிறப்பானதாகும்.

விடுதலைப் புலிகளின் போர் இடம் பெற்ற காலப் பகுதியில் போரில் ஈடுபட்டு 30 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிள்ளைகளை இழந்த தாய்மார்களின் மனநிலை எப்படி இருக்கும் என்று வார்த்தைகளால் சொல்ல முடியாது.

போர் முடிவடைந்த நிலையில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் போராளிகள் தடுப்பு முகாம்களில் அடைபட்டுக் கிடக்கின்றார்கள். இவர்களின் தாய்மார்களின் மனநிலை எப்படி இருக்கும்? தமது பிள்ளைகள் விடுதலை செய்யப்படுவார்களா? என்ற ஏக்கத்தில் எல்லா கோயில்களுக்கும் நேர்க்கிக்கடன் வைத்துள்ளனர். தடுப்பு முகாம்களில் இருக்கும் தமது பிள்ளைகளைப் பார்க்கச் செல்வதற்குக் கூடப் பண வசதி இல்லாமல் பல தாய்மார்கள் கஷ்டப்படுகின்றார்கள். இவை எல்லாம் யாருக்குத் தெரியும், தெரிந்தும் எவரால் என்ன செய்ய முடியும்.

இந்த சோகக் கதையை கேட்கக் கூட நேரமில்லாமல் எமது சமூகம் ஓடிக் கொண்டிருக்கிறது. ஒரு பிள்ளையாவது தன்னைப் பார்ப்பதற்கு இல்லையே என்று நினைக்கும் போது அந்தத் தாயின் மனதில் இருக்கும் கவலையை யாராலும் ஆற்றி விட முடியாது? இப்படிப்பட்டவர் களின் குடும்பங்களை இன்றைய சமூகம் கைவிட்டதுதான் வேதனையாக இருக்கிறது.

விடுதலைப் புலிகளின் போர் இடம் பெற்ற காலப்பகுதியில் போரில் இறந்த விடுதலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவரின் உடலை அவனது தாய் வீட்டுக் குக் கொண்டு வந்தவேளை, அவனது தாய், தனது மகன் இறந்துவிட்டான் என்ற துக்கம் தாங்காமல் என்ன செய்வது, ஏது செய்வது என்று தெரியாமல் தனது மகனின் உடலைக் கொண்டு வந்த புலி உறுப்பினர் ஒருவரின் சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழித்து அவனை அடித்த தாய் பின்பு அவனையே கட்டிப்பிடித்து அழுதார்.

இப்படியான தாய்மாரை எமது மண்ணில் பார்க்கின்றோம். தமிழ் தாய்மார்களின் வீரம், பண்பாடு இந்த உலகில் எந்த மூலையிலும் இருக்க வாய்ப் பில்லை. இதை ஏன் சண்முகம் சொல்லுது என்று பார்க்கிறியளா அப்படிப்பட்ட ஒரு தாய் தனது பிள்ளை முகாம் ஒன்றில் அடைபட்டுக் கிடப்பதால் அவனை மீட்பதற்காகப் படும்பாடு இருக்கே அதை வார்த்தைகளால் சொல்ல முடியாது. அப்படி இருக்கும் போது தனது கணவரும் இறந்து விட துடியாய் துடித்திருக்கிறார் இந்தத் தாய்.

வலிகாமப் பகுதி ஒன்றில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த 13 ஆம் திகதி யாழ். நகருக்கு இன்னொருவருடைய மோட்டார் சைக்கிளின் பின் சீற்றில் இருந்து இந்தத் தாயின் கணவர் தவறி வீழ்ந்து தலையில் அடிபட்டுச் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். ஒரு வாரம் கழித்துக் கடந்த 20 ஆம் திகதி இறந்துள்ளார்.

கணவன் இறந்த நிலையில் தடுப்பு முகாமில் இருக்கும் மகனை கூட்டி வர இந்தத் தாய் பட்டபாட்டை பார்க்கும் போது இந்த மண்ணில் ஏன் நாங்கள் வாழ்கின்றோம் என்று எண்ணத் தூண்டுகிறது பாருங்கோ.

ஆஸ்பத்திரியில் கணவன் இறந்து கிடக்க தடுப்பு முகாமில் இருக்கும் மகனைக் கூட்டி வருவதற்காக முதலில் கிராம சேவகரிடம் சென்றிருக்கின்றார். அன்று புதன்கிழமை. கிராமசேவகர் பிரதேச செயலகத்தில் நிற்பார் என்று அங்கு சென்றுள்ளார். அந்தப் பிரதேச செயலகத்தில் இந்தத் தாயை யார்தான் கவனித்தார்கள். ஏன் நிற்கின்றீர்கள் என்று ஒருவரும் கேட்கவில்லை. கணவன் இறந்த துக்கம் தாழாமல் எப்படியாவது மகனைக் கூட்டி வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பில் அந்தப் பிரதேச செயலகத்தில் கிராம சேவகரைப் பார்த்துக் கொண்டு நிற்கிறார். 8.30 மணிக்கு அந்தப் பிரதேச செயலகத்துக்கு வந்து கிராமசேவகர் கையெழுத்துப் போட்டுவிட்டு தனது தனிப்பட்ட வேலைக்காக வெளியே சென்றுவிட்டார்.

இந்தத் தாய் முதல்நாள் கிராம சேவகரைப் பார்த்த போது அடுத்தநாள் பிரதேச செயலகத்துக்கு வருமாறு கூறியிருந்தார் கிராமசேவகர். அவர் சொன்னதை நம்பி அந்தத் தாய் பிரதேச செயலகத்தில் கிராம சேவகரைப் பார்த்து காத்துக் கொண்டு நிற்கிறார். 3 மணித்தியாலம் கழித்து கிராமசேவகர் வந்தார். அந்தத் தாய் நிற்பதைக் கண்டும் காணாமல் வேறு வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டார். இதற்கிடையில் பிரதேச செயலரும் இந்தத் தாய் பல மணி நேரமாக காத்துக் கொண்டு நிற்கிறாரே ஏன்? எதற்கு? என்று கேட்காமல் தனது வேலையில் மும்முரமாக ஈடுபட்டிக்கொண்டிருந்தார். தனது வேலையை முடித்து ஆறுதலாக வந்த கிராமசேவகர் அந்தத் தாயின் பக்கம் வந்து தடுப்பு முகாமில் இருக்கும் மகனைக் கூட்டி வர நான் வரமாட்டேன் என்று சொல்லி இருக்கிறார்.

கிராமசேவகரைக் கூட்டி வந்தால் தான் மகனை கணவனின் இறுதிக் கிரியைக்காக அனுமதிப்பதாக அந்தத் தடுப்பு முகாம் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர் என்று அந்தத் தாய் கூறினார். இதனைப் பொருட்படுத்தாத அந்தக் கிராமசேவகர் தான் வரமாட்டேன் என்று திட்டவட்டமாக சொல்லிவிட்டார்.

மூன்று மணித்தியாலங்களுக்கு மேல் பிரதேச செயலகத்தில் நின்றும் எந்த விதப் பயனும் ஏற்படாமல் ஏமாற்றத்துடன் நின்ற தாய்க்கு வேறு பகுதி கிராம சேவகர் முன்வந்து தான் வருவதாகக் கூறியமை மனதுக்குஓர் ஆறுதலைக் கொடுத்தது. அந்த கிராமசேவகருடன் தடுப்பு முகாமுக்குச் சென்று மகனைக் கூட்டிக் கொண்டு வந்து கணவனின் இறுதிக் கிரியைகளை முடித்துவிட்டு மீண்டும் மகனைக் கூட்டிக் கொண்டு சென்று

**கோப்பாய் சண்முகம்**
கதையோடு செய்தி

தடுப்பு முகாமில் விட்டுள்ளார்.

தடுப்பு முகாம் அதிகாரிகளே மனித நேய அடிப்படையில் செயற்பட அந்தப் பிரிவு கிராமசேவகர் மனித நேயமற்ற முறையில் நடந்துள்ளார் என்றால் பாருங்களேன். இது தான் எமக்கு எழுதி வைத்துள்ள விதி. பிரதேச செயலகத்தில் கையெழுத்துப் போட்டுவிட்டு தனது தனிப்பட்ட வேலைக்காக வெளியே சென்று வந்த கிராமசேவகரை பிரதேச செயலர் கூட தட்டிக் கேட்க முடியாத அளவுக்கு உள்ளது.

இப்படிப்பட்ட கிராம சேவகரும் பிரதேச செயலரும் அந்தப் பகுதியில் கடமையில் இருந்தால் எப்படிப் பாருங்கோ அந்தப் பகுதி முன்னேறும். மனிதநேய அடிப்படை தெரியாதவர்களிடம் அந்தப் பகுதி மக்கள் எப்படித்தான் இனிமேலும் தமது கடமைகளை நிறைவேற்றப் போகிறார்களோ? *


## கண்ணீர் அஞ்சலி



மண்டைதீவு, 6 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட

செல்வன்

**கண்ணதாசன் கிருஸ்ணரூபன்**

**(கிருஷ்ணா)**

நட்பு எனும் நந்தவனத் தோட்டத்தில் நாமெல்லாம்
வாடாத பூக்கள் என வாழ்ந்திருந்தோமே - ஆனால்
வாழ்வின் பாதி வழியில் நீ மட்டும் வாடி விட்டு
எம்மை வாட்டம் கொள்ளச் செய்ய
நாட்டம் கொண்டதேனோ...? நண்பா
உயிர் உறங்கிய செய்திகேட்டு
மனமுடைந்து உருக்குலைந்து நின்றோம்
இது உண்மையாய் இருக்கக்கூடாது
என ஏங்கித் தவித்தோம்
ஏமாற்றமே எஞ்சியது வீதி விபத்து எனும் பெயரில்
விதி வந்து சதி செய்து விட்டதே
உலகைப் பிரிந்தாலும் உள்ளத்தால்
நாம் இணைந்திருப்போம்
உன்பாத மலர் மீது கண்ணீரைச் சொரிகின்றோம்

மண்டைதீவு வான்மதி விளையாட்டுக்கழக நண்பர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தப் பல்லவி வேண்டாமே!

**பா.அரியநேத்திரன்**

இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வை கண்டுவிடலாம் என்ற பல்லவியை 62 வருடங்களாக அரசியல் தலைமைகள் பாடிக்கொண்டிருக்கின்றன. ஆனால், இதுவரை தீர்வு கண்டபாடில்லை.

இதன் காரணமாகவே தமிழர் பிரச்சினைகள் இன்று சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இனப் பிரச்சினைத் தீர்வுக்கு சர்வதேசத்தின் தலையீடு அவசியமாகும் என்பதே எமது கருத்தாகும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைந்த சுயநிர்ணய உரிமையுடன் கூடிய ஆட்சி கிடைப்பதற்கான சாத்தியம் உள்நாட்டில் இல்லை என்பதையே கடந்தகால வரலாறுகளும் உணர்த்துகின்றன.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்கப்படும் விடயத்தில் இலங்கை அரசு காலத்தை இழுத்தடிப்பதனாலேயே சர்வதேசம் இன்று தீர்வுத்திட்ட விடயத்தில் தலையிடவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழர்களுக்கு நியாயமானதொரு தீர்வுப் பொதியைப் பெற்றுக்கொடுப்பதற்கு வழி சமைத்துக் கொடுக்கவேண்டியது சர்வதேச சமூகத்தின் கடப்பாடாகும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.- என்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன்.

# உலக நாடுகளை வெறுக்கவும் கூடாது

**ஹசன் அலி**

வெளிநாட்டு ஊடுருவல்களின்றி வெளிநாட்டு உதவியுடன் நிறைவேற்றப்படும் தீர்வானது நிலையானதொரு அரசியல் தீர்வுக்கு வழிசமைக்கும் என்பதே எமது கருத்தாகும்.

நாட்டிலுள்ள 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் கூட இந்திய அரசின் விருப்பத்துடனேயே கொண்டுவரப்பட்டது என்பதையும் எவராலும் மறந்துவிட முடியாது.

பிராந்திய நாடுகளுடன் ஒன்றிணைந்து செயற்பட்டு அவர்களின் ஊடுருவல்களின்றி அனுசரணையுடன் நிறைவேற்றப்படும் தீர்வானது எல்லோருக்கும் ஏற்புடையதாக அமையும் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

உலக நாடுகளைப் பூரணமாக வெறுக்கக்கூடாது. பூகோள அமைப்புடன் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமானால், சர்வதேசத்தின் அனுசரணையுடன் தீர்வுத் திட்டமொன்றை முன்வைப்பதே நல்லது என நான் கருதுகின்றேன்.- என்றார் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி எம்.பி.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்நாட்டிலேயே வகுக்கப்பட வேண்டும் என 'இந்து' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் என்.ராம் கருத்து வெளியிட்டுள்ளார்.**

**இதுதொடர்பாக அரசியல் கட்சிகளின் முக்கியஸ்தர்கள் தெரிவித்த கருத்துக்கள்.**

# சர்வதேச தலையீடு அவசியம்

**சுவாமிநாதன்**

இனப்பிரச்சினைக்குத் தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுத் திட்டமொன்று கிடைக் கப்பெற வேண்டுமானால் சர்வதேசத்தின் தலையீடு அவசியம் என்பதே எமது நிலைப்பாடாகும்.

அண்மையில் நடைபெற்ற முதலமைச்சர் மாநாட்டின்போது மாகாண சபைகளுக்கு காணி, பொலிஸ் அதிகாரங்கள் தேவையில்லை என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.

காணி, பொலிஸ் அதிகாரங்கள் உள்ளடக்கப் படாத தீர்வுப் பொதியானது தமிழர்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வாக அமையாது. அவ்வாறான தீர்வுப் பொதியொன்று கிடைத்தாலும் அதில் எந்தவிதப் பயனுமில்லை.

தமிழர் தாயகப் பிரதேசங்களுக்குக் காணி அதிகாரமானது இன்றியமையாதது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். 'இந்து' பத்திரிகையின் ஆசிரியர் ராம் ஒரு வெளிநாட்டவர். இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வு காணப்படவேண்டும் என அவர் கூறுவதே சர்வதேசத்தின் பரிகாரம் எனக் கருதப்படும்.

சர்வதேசத்தின் தலையீடின்றி தமிழர்களுக்கு நிலையானதொரு தீர்வு கிடைக் காது என்பதை மீண்டும் வலியுறுத்தி கூறிக்கொள்ள விரும்புகின்றேன். - என்றார் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.சுவாமிநாதன்.

# யாரைத்தான் திருப்திப்படுத்த ராம் முயல்கிறார்

**மனோ கணேசன்**

இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய தீர்வொன்று உள்நாட்டிலேயே காணப்படும் பட்சத்தில் நிச்சயம் நாம் மகிழ்வடைவோம்.

இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே தீர்வுகாணும் அரசியல் நேர்மையும், வலிமையும் ஆட்சியாளர்களிடையே இல்லாததன் காரணமாகத்தான் இந்தப் பிரச்சினை இன்று சர்வதேசம் வரை சென்றுள்ளது என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

யுத்தத்தின்போது தமிழ் மக்கள் பட்ட சொல்லொணாத் துன்பங்களை மூடி மறைத்து இலங்கை அரசை திருப்திப் படுத்தும் நோக்குடன் செயற்பட்ட 'இந்து' ராம் இப்பொழுது யாரை திருப்திப்படுத்துவதற்கு இவ்வாறு கூறுகின்றார் என்பதே எமது கேள்வி?

எது எப்படியிருப்பினும் இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வுத் திட்ட மொன்று உள்நாட்டில் காணப்படும் பட்சத்தில் அதை நாம் வரவேற்போம். மாறாக தீர்வுத் திட்டத்தை திணிக்க முயன்றால் அதை நாம் எதிர்ப்போம். - என்றார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்.

# இதெல்லாம் வெறும் நீலிக்கண்ணீர்தான்

**தம்பையா**

தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளக்கூடிய அரசி யல் தீர்வொன்றை வழங்குவதற்கான அனைத்து அதிகாரங்களும் இந்த அரசிடம் உள்ளன. ஆனாலும், தீர்வை வழங்குவதற்கு அரசுக்கு மனமில்லை. எல்லோரும் ஏற்றுக் கொள்ளக்கூடிய தீர்வுப் பொதியொன்று வழங்கப்படும் என அரசு கூறுகின்றது. எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் தீர்வு எமக்கு அவசியம் அல்ல. தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வே எமக்கு அவசியம். 13ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தைக்கூட நடைமுறைப்படுத்தக்கூடாது என சிங்கள இனவாத அமைப்புகள் அரசை வலியுறுத்தி வருகின்றன.

இலங்கை அரசுக்கு இன்று நாலாபுறத்திலிருந்தும் சர்வதேச அழுத்தங்கள் அதிகரித்தவண்ணமுள்ளன. பொருளாதார தடைவிதிக்கப்படும் என உலக நாடுகள் எச்சரிக்கை விடுக்கும் அளவுக்கு பிரச்சினைகள் முற்றிப்போயுள்ளன.

இனப்பிரச்சினைக்கு உள்நாட்டிலேயே சுமுகமாகத் தீர்வு காண்பதற்கான அனைத்து அம்சங்களும் உள்ளன. ஆனாலும், அரசுக்கு மனமில்லை. இதன் காரணமாகவே தமிழர் பிரச்சினை இன்று ஐ.நா. வரை சென்றுள்ளது. ராம் என்பவர் யார்? தமிழருக்கு எதிராகப் பேனை என்ற ஆயுதத்தைப் பயன்படுத்தி தாக்குதல் நடத்தியவர். இவர் இப்போது நீலிக்கண்ணீர் வடிக்கின்றார். இதை நம்ப நாம் தயாரில்லை. யார் சொன்னாலும், சொல்லாவிட்டாலும் தமிழ் மக்கள் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வே உடன் தேவை. - என்றார் புதிய ஜனநாயக மாக்ஷிச லெனினிஷக் கட்சியின் சர்வதேச அமைப்பாளர் தம்பையா.

**வேலம்பராய் கண்ணகி அம்மன் கோயில் தொடர்பான 28.09.2011 உதயனில் பிரசுரமாகிய அறிவித்தலின் திருத்தம்**

28.09.2011 உதயனில் பக்கம் 22இல் பிரசுரமாகிய மேற்படி ஆலய அறிவித்தலில் சாவகச்சேரி மாவட்ட நீதிமன்ற D.C.5008 வழக்குத் தீர்வை என வெளியானது தவறானது. D.C.5003 வழக்குத் தீர்வை என்பதே சரியானது என அறியத்தருகின்றோம்.

சுந்தரமூர்த்தி சிவானந்தன்
பரிபாலன சபைச் செயலாளர்.

இராமலிங்கம் பரராஜசேகரம்
பரிபாலன சபைத் தலைவர்.

# அலரி மாளிகையில் சர்வதேச சிறுவர்தின நிகழ்வு ஆயிரம் மாணவருக்கு ஜனாதிபதியின் பரிசில்கள்

கொழும்பு, செப்.30

சர்வதேச சிறுவர் தினமான ஒக்ரோபர் முதலாம்திகதி அலரிமாளிகையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் விசேட நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் அரச தகவல் திணைக்களத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சர்வதேச சிறுவர் தினத்தை முன் னிட்டு நாடளாவிய ரீதியில் பிரதேச செயலாளர் மட்டத்தில் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சர்வதேச சிறுவர் தினமான அடுத்த மாதம் முதலாம்திகதி அலரி மாளிகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட நிகழ்வில் வைத்து பரிசில்களும், சான்றி தழ்களும் வழங்குவதற்கு தீர்மானிக் கப் பட்டுள்ளது. இந்நிகழ்வில் சுமார் ஆயிரம் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதன்போது சிறு வர்கள் தொடர்பான தேசிய பாடல், தேசிய சிறுவர் கொடி மற்றும் முத்திரை என்ப னவும் வெளியிடப்படும். இதே வேளை, எமது நாட்டு சிறுவர்கள் தொடர்பாக வெளிநாட் டவர்கள் கொண்டுள்ள தவறான அபிப்பிராயங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் சிறார்களின் ஆக்கங்களுடன் கூடிய கையேடு களும், 52 சிறார்களின் புகைப்படங்களும் தூரகங்களுக்கு அனுப்பிவைக்கப்படும் - என்று உள்ளது.

COMPUTER EXPRESS
Institute of Information Technology
No 15, Sirampiyadi Lane, (off Stanly Road) Jaffna. 0212228250

7ம் ஆண்டின் நிறைவை முன்னிட்டு
மாபெரும் புலமைப் பரிசில்
80% OFFER

| | | |
|---|---|---|
| Diploma in Microsoft office, 3 Months, ~~10000~~ 2000 | Diploma in Desktop Publishing, 3 Months, ~~10000~~ 2000 | Diploma in Web page Designing, 3 Months, ~~10000~~ 2000 |
| Diploma in Graphic Designing, 3 Months, ~~10000~~ 2000 | Diploma in Hardware Engineering, 3 Months, ~~10000~~ 2000 | Diploma in Computerized Accounting, 3 Months, ~~15000~~ 3000 |
| Diploma in Computer Science, 4 Months, ~~12500~~ 2500 | Hon. Diploma in Computer Science, 4 Months, ~~12500~~ 2500 | Hon. Diploma in Programming, 3 Months, ~~10000~~ 2000 |
| AUTO CAD, 3 Months, 2000 | | |

Advanced Diploma Courses
Advanced Dip. in Multimedia
Advanced Dip. in Video Editing
Advanced Dip. in Networking
3000/=

A/L பரீட்சையில் தோற்றிய மாணவர்களுக்கான
Quick Book, Acc Pac, MYOB, Tally
புதிய பிரிவுகள் ஆரம்பம் - Ashok
T.P:021 222 8250
0774907444

Batch Time:
I) 30.09.2011
II) 01.10.2011
III) 02.10.2011
IV) 05.10.2011
9AM OR 3PM




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணவர்களின் மொழிசார் திறன்களை வெளிக்கொணரும் மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை முத்தமிழ் மன்றம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

மானிப்பாய் மெமேறியல் ஆங்கில பாடசாலையின் ஒழுங்காற்று மன்றத்தின் ஊடாக ஒவ்வொரு வருடமும் 10 ஆம் திகதி மாணவத் தலைவர் தினமாகப் பிரகடனம் செய்து மாணவத் தலைவர் தெரிவுசெய்யப்பட்டு சின்னம் சூட்டும் விழா கொண்டாடப்படும். 2003 ஆம் ஆண்டு ஆண் மாணவர்கள் கழுத்துப்பட்டி அணிதல், சகல மாணவர்களும் பாடசாலைச் சின்னம் அணிதல் போன்ற நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. விழாக்களை ஒழுங்கு செய்தல், சிரமதானப் பணிகளை மேற்கொள்ளல் போன்ற செயற்பாடுகளையும் இந்த மன்றத்தின் ஊடாகச்செய்து வருகின்றது.

மாணவர்கள் மத்தியில் இலை மறை காயாக மறைந்திருக்கும் பல வகையான மொழிசார் திறன்களை வெளிக்கொணரும் நோக்குடன் பாடசாலையின் முத்தமிழ் மன்றம் செயற்பட்டு வருகின்றது.

இந்த மன்றத்தினூடாகப் பெரியார்களின் தினம், பேரறிஞர்களுக்கான. விழாக்கள் போன்றவற்றை சிறப்பாக நடத்துவதுடன் மாணவர்கள் மத்தியில் கவிதை, கட்டுரை, பேச்சு, இலக் கணம், தனிநடிப்பு, திறனாய்வு, இசை போன்ற போட்டிகளை நடத்திவெற்றி பெற்ற மாணவர்களுக்கு முத்தமிழ் விழாத்தினத்தன்று பரிசில்களை வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் மாணவர்களிடம் சிறந்த தேர்ச்சியை உண்டு பண்ணி வருகின்றது.

அத்துடன் தமிழ் மொழித்தினப் போட்டிகளைப் பாடசாலை ரீதியாக நடத்தி



மாணவர்களுக்கு பயிற்சியளித்து வருகிறது. இந்த வகையில் முத்தமிழ் மன்றப் பெருவிழாவில் கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகப்பிரதியாக்கம் போன்ற பல்வேறு வகையான போட்டிகளை பாடசாலையில் வகுப்பு ரீதியாக நடத்தி மாணவர்களின் திறன்களை விருத்தியடையச் செய்து வருகின்றார்கள்.

இந்தப் பாடசாலையின் இந்து மாமன்றத்தின் செயற்பாடுகளாக பாடசாலையில் உள்ள நடேசர் ஆலயத்திலும், மானிப்பாய் மருதடிப்பிள்ளையார் கோயிலிலும் மாணவர்கள் தொண்டுப்பணிகளைச் செய்வதற்கு. ஒழுங்கமைப்புச் செய்து வருகின்றது. அத்துடன் பிரசித்திபெற்ற ஆலயங்களில் மாணவர்களை அழைத்துச் சென்று பிரார்த்தனைகளில் பங்கு பெறச் செய்து வரு கின்றார்கள். இணுவில் இளந்தொண்டர்சபை, இணுவில் திருநெறி தமிழ் மறைக்கழகம், பொதுநூலகம், சைவபரிபாலனசபை, யாழ். மாநகர சபை, சமய அறிவுப் போட்டி, சாந்தையர் மடம் விநாயகர் ஆலயப் பரிபாலன சபையினால் நடத்தப்படும் பண்ணிசை, கலைப் போட்டிகளில் பங்குபற்றி மாணவர்கள் வெற்றியடைவதற்கு இந்த மன்றம் ஒழுங்கமைப்புச் செய்கின்றது.

கோட்டம், வலயம், மாவட்டம், தேசிய மட்டங்களில் பங்குபற்றி அகில உலக இந்து மகா நாட்டுப் பண்ணிசைப் போட்டியில் மாணவர்கள் பங்கு பற்றி தங்கப் பதக்கங்களையும் பெற்றுள்ளார்கள்.

கணித, விஞ்ஞான மன்றமானது தனது செயற்பாடுகள் ஊடாக மாணவர்களின் உடல், உள ஆற்றல்களை வளர்ப்பதில் முன்னணி வகிப்பதுடன் பாடசாலை மட்டத்தில் வினாடி வினாப் போட்டிகளை நடத்தி மாணவர்களின் கணித, விஞ்ஞான செயற்பாடுகளுக்கு பங்களிப்பை வழங்கிவருகிறது.

சமூகவியல் மன்றமானது மாணவர்கள் கோட்ட, வலய மட்டங்களில் சமூகக் கல்வி, பொது அறிவு, ஆக்கப் போட்டிகளில் பங்குபற்றுவதற்கு, வழிகாட்டியாக உள்ளது. இதன் மூலம் மாணவர்கள் சமூகக் கல்வி ஊடான வாண்மை விருத்திக்கு பல்வேறு ஆக்கச் செயற்பாடுகளையும் வழங்கி வருகின்றனர்.

1977 ஆம் ஆண்டு தொடக்கம் 7 அங்கத்தவர்களுடன் ஆரம்பிக்கப்பட்டது உயர்தர மாணவர் மன்றம். இந்த மன்றத்தில் அங்கத்துவம் வகித்த மாணவர்கள் பலர் பல்கலைக்கழக அனுமதிகள் பெற்று இன்று சமுதாயத்தில் உயர்ந்த பணிகளில் சேவையாற்றுவது மன்றத்துக்கும் பாடசாலைக்கும் பெருமை தரக்கூடிய விடயமாகும்.

**சோபனா**

மாணவர்களின் பாடரீதியான கருத்தரங்குகளை நடத்துவதுடன் பொதுவான நடை முறை விடயங்களிலும் மாணவர்கள் பங்குபற்றுவதற்கும் இந்த மன்றம் தனது சேவையை வழங்கி வருகின்றமை. குறிப்பிடத்தக்கது. அத்துடன் ''மாற்றம்'' எனும் சஞ்சிகையை 2001 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் வெளியிட்டு மாணவர்களின் திறமைகள் வெளிக்கொணர்ந்தது.

*(தொடரும்)*

**விசேட சேவை**



புலமைப் பரிசில்
பரீட்சையில்
சித்திபெற்ற மாணவச்செல்வங்களுக்கு அவர்களின் புகைப்படம் பதித்த விருதுப் பொருள்களையோ, தங்க மெடலையோ பரிசாக வழங்கி ஊக்குவியுங்கள்.
**எஸ்.எஸ்.யசோதரன் ஆட்ஸ்**
இல.381, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்.

**காணி விற்பனைக்கு**

திருநெல்வேலிச் சந்திக்கு அண்மையில் வடக்குப் பக்கமாக பலாலி வீதியில் ஆனை விழுந்தான் குறிச்சியில் இரண்டு பரப்பும் ஆறுதசம் எட்டுக்குளியும் (நில.பர.2 குளி 6.8 குளி ) விற்பனைக்குண்டு.
தொடர்பு 0779936083, 0779975242

**புலமைச்சுடர் பிரதியை சந்தாமூலம் பெற விரும்பும் பெற்றோர்களே..........**




இக் கையேட்டைப் பெறுவதில் இடர்பாடுகள் அல்லது நீங்கள் வசிக்கும் இடங்களிலுள்ள விற்பனை முகவர்களிடம் இருந்து பிரதிகளைப் பெறுவதில் சிரமங்கள் உள்ள தரம் 3, 4 மாணவர்களின் பெற்றோர்களே! உங்கள் பிள்ளைகளுக்கு பிரதியைப் பெற்றுக்கொடுக்க விரும்பின் கீழுள்ள முறைகளின் ஊடாக பெறக்கூடிய வாய்ப்பினை புலமைச்சுடர் விநியோகப்பிரிவு ஏற்பாடு செய்துள்ளது.

எல்லாமாக 40 பிரதிகள் வெளிவரவுள்ளன. ஒரு பிரதி 15 ரூபாப்படி 40 பிரதிகளுக்கும் 600 ரூபாவும், தபால் கட்டணமாக 400 ரூபாவும் மொத்தமாக ரூபா 1000 ஐ காசுக்கட்டளை மூலமாகவோ அல்லது வங்கிக் கணக்கில் வைப்பு செய்வதனூடாகவோ உங்கள் இல்லங்களில் இருந்தே கையேடுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கட்டணம் செலுத்தப்பட வேண்டிய முறை**

| காசுக்கட்டளையாயின்- | வங்கி வைப்பாயின் - |
|---|---|
| (கிராண்ட்பாஸ் அஞ்சல் அலுவலகத்தில் மட்டும் மாற்றக் கூடியவாறு) | (126- 1- 001-0-3452799) என்ற மக்கள் வங்கி இலக்கக் கணக்கில் Landmark Enterprises, கிராண்ட்பாஸ்) |

மேற்கூறிய முறைகளினூடாக அனுப்பிய காசுக்கட்டளை அல்லது பணவைப்பு பற்றுச்சீட்டை கீழுள்ள சந்தாப்படிவத்துடன் இணைத்து ''விநியோக முகாமையாளர், புலமைச்சுடர், 85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு- 14.,'' என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

*புலமைச்சுடர் சந்தாப்படிவம்*

1. பெயர் : ..........................................
2. விலாசம் : ..........................................
..........................................
3. தொ.பேசி இலக்கம் : ..........................................
4. பிரதிகளின் எண்ணிக்கை: ..........................................
5. செலுத்தப்பட்ட பணம் : .............................. ரூபா
6. வைப்புச் செய்த முறை : வங்கி / காசுக்கட்டளை

(இவ்விண்ணப்பப் படிவத்தைப் பூரணப்படுத்தி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக்கொள்ளப்படும்)

மேலதிக தொடர்புகளுக்கு - கல்விச்சுடர் : 0716850065/0115738855

**ஏழு ஆண்டுகள் ஏகாந்தமாய் ஏங்கித் தவிக்கும் நினைவுகளுடன்**



ஏற்றமாய்: 17.04.1953
ஏமாற்றமாய்: 18.09.2004

திதி: சதுர்த்தி (30.09.2011)

*ஏற்றமுடன் நாம் வாழ*
*ஏணியாய் நின்ற நீங்கள் -எமை*
*ஏகாந்தமாய் தவிக்கவிட்டு*
*ஏழாண்டுகள் ஆனதுவோ?*
*எமதுயிர் அன்னையின்*
*ஏங்கித் தவிக்கும்*
*ஏகாந்த நினைவுகளுடன்...*

குடும்பத்தினர்,

'திருவேரகம்'
முத்துக்கிருஸ்ணர் வீதி, சுன்னாகம்.

**திருமதி திலகவதி குமரவேல்**
(முன்னாள் பொது முகாமையாளர், ப.நோ.கூ.சங்கம், சுன்னாகம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைய பூங்காவை அழிக்கும் நடவடிக்கை உடன் நிறுத்தவேண்டும்

## திருமதி விஜயகலா மகேஸ்வரன் ஜனாதிபதியிடம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்ப்பாணம்,பழைய பூங்காவை இடித்து அழிக்கும் முயற்சியை உடனடியாகக் கைவிட வேண்டும். தொல்பொருள் திணைக்களத்தால் பாதுகாக்கப்படவேண்டிய இந்தப் பூங்கா இடிக்கப்படுகின்றமை தமிழ் மக்களின் வரலாற்றுச்சான்றுகளை அழிப்பதற்கு சமமான நடவடிக்கையாகும்.

இந்த விடயத்தை உடனடியாகக் கவனத்தில் எடுத்து அதனைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.தே.க.வின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஜனாதிபதிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பி வைத்துள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யாழ்ப்பாணம் பழைய பூங்காவானது தமிழ்மக்களின் வரலாற்றை, கலாசார விழுமியங்களைப் பறைசாற்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடமாகும். இந்த இடத்தை இடித்து அழிப்பதற்கு அரசு அனுமதி வழங்கக்கூடாது. இந்த இடத்தில் மக்களின் பாவனைக்காக புதிய பூங்காவை அமைக்கப் போவதாகக்கூறி உயர் மட்டத்தின் உத்தரவுக்கமைய யாழ்.மாநகரசபையினரால் பூங்காவைச் சூழ உள்ள சுற்று மதில்கள் உடைக்கப்பட்டுள்ளன. பூங்காவில் காணப்படும் கேணிகள் மற்றும் சிறிய கட்டடங்களை உடைப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

பழைய பூங்காவை இடித்து அழிப்பது குறித்து யாழ். அரச அதிபருக்கும் உரிய வகையில் அறிவிக்கப்படவில்லை என்று தெரிகின்றது. முறையற்ற விதத்தில் இதனை இடிப்பது தவறான நடவடிக்கையாகும். எனவே தமிழ் மக்களின் வரலாற்றைப் பறைசாற்றும் இந்தப் பூங்காவைப் பாதுகாக்க வேண்டியது எமது கடமையாகும். இந்தப் பழைய பூங்காவை பாதுகாத்துக் கொண்டு புதிய பூங்காக்களை அரசு அமைக்க வேண்டும்.இதுவே சாலச்சிறந்ததாகும்.

மேலும் தொல்பொருள் திணைக்களத்தால் பழைமை வாய்ந்த இடமாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கும் இந்தப் பூங்காவை அழிக்காது அதனைப் பாதுகாக்குமாறு சம்பந்தப்பட தரப்பினருக்கு தாங்கள் உத்தர விடவேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

# கொழும்பு-யாழ்.பயணிகள் சேவை வெள்ளவத்தையிலிருந்து இடம்பெறும்

கொழும்பு-யாழ். பயணிகள் பஸ் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் அருகில் உள்ள உணவுக் களஞ்சிய சாலை வளவிலிருந்து புறப்படுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் இ.அங்கஜன் அதுவரையில் வழமை போலவே வெள்ளவத்தைப் பகுதியிலிருந்து பயணிகள் பயணத்தைத் தொடர முடியுமெனவும் கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது:

கொழும்பு- யாழ். பயணிகள் பஸ்கள் வெள்ளைவத்தைப் பகுதியில் இருந்து புறப்படுவதற்கு நாளை சனிக்கிழமைக்குப் பின்னர் அனுமதி வழங்கப்படாதென வெள்ளவத்தைப் பொலிஸ் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளதாக பஸ் உரிமையாளர்கள் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளர் மிலிந்த மொரகொடவின் கவனத்துக்கு கொண்டு வந்தனர். வெள்ளவத்தையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின் போதே மிலிந்த மொரகொடவின் கவனத்துக்கு பஸ் உரிமையாளர்கள் இந்தப் பிரச்சினையைக் கொண்டு வந்த போது இதனைத் தீர்த்து வைக்கும் பொறுப்பை மிலிந்த மொரகொட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட பிரதான அமைப்பாளர் இ.அங்கஜனிடம் ஒப்படைத்தார். இதனையடுத்து பஸ் சேவைகளின் உரிமையாளர்களை அழைத்துச் சென்று கொழும்பு பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் அநுர சேனநாயக்காவைச் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார். இதன் போது வெள்ளவத்தை தவிர்ந்த ஏனைய பகுதிகளிலிருந்து கொழும்பு- யாழ். பயணிகள் பஸ்கள் புறப்படுவதில் உள்ள பிரச்சினை கள், பயணிகள் எதிர் கொள்ளும் அசௌகரியங்கள் தொடர் பில் விளக்கமளித்த அங்கஜன் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் அருகில் உள்ள கூட்டுறவு அமைச்சுக்குச் சொந்தமான உணவுக் களஞ்சியசாலை வளவிலிருந்து பஸ்கள் புறப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யுமாறு கோரியுள்ளார்.

அங்கஜனின் இந்தக் கோரிக்கையை கவனத்தில் எடுத்த பிரதி பொலிஸ்மா அதிபர் குறித்த இடம் தொடர்பிலான வீடியோ படத்தை பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு அனுப்புமாறு கூறினார்.

இதனையடுத்து வெள்ளவத்தைப் பொலிஸாருடன் டிப்டொப்,எஸ்.பி.எஸ்,கருணா ஆகிய பஸ் சேவைகளின் உரிமையாளர்களை அழைத்துச் சென்று உணவுக் களஞ்சியசாலை வளவினை வீடியோ படம் பிடித்து பாதுகாப்பு அமைச்சின் செயலருக்கு பிரதிப் பொலிஸ்மா அதிபர் அநுரசேன நாயக்க மூலம் நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

# சர்வதேச கூட்டுறவு தின விழா

யாழ்ப்பாணம், செப்.30

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் நடத்தும் 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழாவும் கௌரவிப்பு விழாவும் நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு சமாசக் கூட்டுறவு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமாகாண பனை, தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் த.சிவலிங்கம் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந் தினராக கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்துகொள்வார்.

கடந்த 2009ஆம், 2010 ஆம் ஆண்டு களில் தரம்-5 புலமைப் பரிசில் பரீட்சை யில் சித்தியடைந்த மாணவர்கள் கௌர விப்பு, சிறந்த அங்கத்தவர்கள் கௌர விப்பு, 89 ஆவது சர்வதேச கூட்டுறவு தின விழா போட்டி களில் வெற்றியீட் டிய மாணவர்கள் கௌரவிப்பு என்பன இடம் பெறும்.

(வ-313)

## கண்ணீர் அஞ்சலி



யாழ்ப்பாண வீதி, அபிவிருத்தி அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர் அலுவலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு.ந.சூரியகுமாரன் அவர்களின் அன்புத் தந்தை அம்பலவாணர் நடராசா அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவித்து கொள்கிறோம்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை, பருத்தித்துறை.

நிறைவேற்றுப் பொறியியலாளரும் உத்தியோகத்தர்களும் ஊழியர்களும்.

## 15 ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 07 ★ 02 ★ 1973

மறைவு 30 ★ 09 ★ 1996

செல்வன் **சண்முகநாதன் சிவகுமார்** (வெள்ளை)

அன்னைக்கோர் அன்பு மகனாய்
ஆசைக்கோர் வெள்ளை அண்ணாவாய்
ஆனந்தமாய் - எம் வீடு இருக்க
ஆணவம் கொண்டுவந்த காலன்
ஆண்டாண்டு வாழ வேண்டிய
அருமையான உந்தன் ஜீவனை
ஆசை கொண்டு கவர்ந்தானே!
ஆற்றிடினும் ஆறாத - உந்தன்
பிரிவால் வந்த காயத்துக்கு - என்ன?
காலமே மருந்தாகிடுமோ?

சபாபதிப்பிள்ளை வீதி.
உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.

உன் பிரிவால் வாடும் **குடும்பத்தினர்**

(8740) (45)

# பரிசளிப்பு விழா

தென்மராட்சி,செப்.30

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் பரிசில் நாள் நிகழ்வு கடந்த செவ்வாய்கிழமை கல்லூரி அருணாசலம் மண்டபத்தில் இடம் பெற்றுள்ளது.

கல்லூரி அதிபர் அ.கயிலாயபிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளரும், மாகாணகல்வி பண்பாட்டலு வல் கள் அமைச்சின் உதவிச் செயலாளருமாகிய இ.இளங்கோவன் முதன்மை விருந்தினராக கலந்து கொண்டார்.

நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேம காந்தன், சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் கு.சிவாணந்தம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

(வ-207)

**காணி தேவை**
**வீடு வாடகைக்கு தேவை**

பிரதான சாலைகளுக்கு அருகில் நகரத்தை அண்டிய பகுதியில் 1½-2 பரப்பு காணி தேவை.சகல வசதிகளும் கொண்ட வீடும் வாடகைக்கு தேவை. தரகர் தேவையில்லை. தொடர்பு-0755512104

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

தலை நகரில் இருந்து தருவிக்கப்பட்ட உயர் ரக பொக்சர், டெல்மேசன், கிறேடேன், கொக்கஸ் பெனியர், ஜேர்மன் செப்பேட் நாய்க் குட்டிகள் பூச்சி நீக்கப்பட்டு தடுப்பூசி போடப்பட்டது .விற்பனைக்கு உண்டு. V.S சற்குணன்,25, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
T.P.021 222 7535, 0777158476

**வேலையாள்கள் தேவை**

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல புடைவை நிறுவனத்துக்கு பழகிய, பழக ஆர்வம் உள்ள ஆண்கள் தேவை
Mob: 077 - 6334467, 077-2528957

**தவறிவிட்டது**

பொன்னையா குபேந்திரநாதன் என்பவரது தேசிய அடையாள அட்டை (இல -702022410V) அத்துடன் மோட்டார் சைக்கிள் ஆவணங்கள் உரும்பிராய்ச் சந்தியில் தவறிவிட்டது. கண்டெடுத் தவருக்கு சன்மானம் வழங்கப்படும்.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சதா காட்வெயர், உரும்பிராய் சந்தி,உரும்பிராய். T.P.0750395255

**INVITATION EXPRESSIONS OF INTERESTS FOR DESIGN AND CONSTRUCTION SUPERVISION CONSULTANCY SERVICES FOR THE PROPOSED WHOLESALE MARKET AT MARUTHANARMADAM FOR VALIKAMAM SOUTH PRADESHIYA SABHA**

1. Chairman, Valikamam South Pradeshiya Sabha invites Expressions of Interest (EOI) from National Consulting Firms having prior experience of similar nature.

   EOIs should be sent to the address indicated below **on or before 18th October 2011 at 15.00 Hrs.**
2. The firm(s) must include in the EOI proposal, (i) summary details of the similar projects carried out by the firm; (ii) one page summary of each project executed in the past three years showing nature and magnitude of projects, extent of responsibility and name of employer,etc;
   (iii) details of technical personnel available with the firm, especially to be given separately for the design and construction supervision services;
   (iv) any other relevant information.
3. Chairman, Valikamam South Pradeshiya Sabha reserves the right to shortlist or not to shortlist any or all of the applicant(s) or to cancel the entire process without assigning any reason. No liability will be accepted in such a case.


The EOI should be addressed to: **Chairman,**
**Valikamam South Pradeshiya Sabha,**
**Chunnakam.**

**Mr.T Piragash**
**Chairman**
**Valikamam South Pradeshiya Sabha,**
**Chunnakam.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘2ஜி’ ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு வித்திட்டது தயாநிதிமாறனே!

## மன்மோகன் திடீர் குற்றச்சாட்டு



டில்லி, செப். 30

2 - ஜி ஸ்பெக்ட்ரம் அலைக் கற்றைக்கு விலையைநிர்ணயிக்க அமைக்கப்பட்ட அமைச்சர் குழுவுக்கு, அந்த அதிகாரத்தை வழங்க மறுத்து நெருக்கடி தந்த முன் னாள் தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் தயாநிதி மாறனே ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு வித் திட்டார் - என்று பிரதமர் மன் மோகன் சிங் குற்றம் சாட்டியுள் ளார்.

அமெரிக்காவிலிருந்து டில் லிக்குத் திரும்பும் வழியில் விமானத்தில் செய்தியாளர் களிடம் பேசிய மன்மோகன் சிங் தெரிவித்ததாவது:-

2 ஜி ஸ்பெக்ட்ரத்துக்கு விலையை நிர்ணயிக்க அமைச் சரவைக் குழு அமைக்கப்பட் டது. ஆனால், அந்தக் குழுவுக்கு தயாநிதி மாறன் எதிர்ப்புத் தெரி வித்தார். ஸ்பெரக்ட்ரம் விலை நிர்ணயம் என்பது தொலைத் தொடர்புத்துறையின் அடிப்படை யான உரிமை என்றும், அதில் ஏராளமான தொழில்நுட்ப - பொருளாதார விடயங்கள் அடங்கியுள்ளதால் அமைச்சர வைக் குழுவால் அதில் முடிவை எடுக்க முடியாது என்றும், அதைத் தொலைத் தொடர்புத் துறையால்தான் சிறப்பாகக் கையாள முடியும் என்றும் வாதிட்டார்.

ஒரு கட்டத்தில் அவரது வாதத்தை நானும் ஏற்றுக் கொண்டேன். ஸ்பெக்ட்ரம் விற்பனையில் தேவையில் லாத பிரச்சினைகள் வரக்கூடாது என்று நினைத்துத்தான் தயா நிதியின் கருத்தை ஒப்புக் கொண்டேன் என்றார் பிரதமர்.

ஆனால், அமைச்சரவைக் குழுவின் தலையீடு இல்லாத தால் பின்னர் தொலைத் தொடர் புத்துறை நினைத்தபடியெல் லாம் ஸ்பெக்ட்ரத்தை ஒதுக்கி பெரும் ஊழலில் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

# சிதம்பரத்தை பாதுகாத்து வரும் மன்மோகன் மீது பா.ஜ.க. பாய்ச்சல்

டில்லி, செப். 30

2 ஜி ஸ்பெக்ட்ரம் விவகாரத் தில் உள்துறை அமைச்சர் ப.சிதம் பரத்தை பிரதமர் மன்மோகன் சிங் பாதுகாத்து வருவதற்கு பா.ஜ.க. கண்டனம் தெரித்துள்ளது.

இது குறித்து செய்தியாளர் களிடம் பேசிய நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ்:

ஊழலுக்கு எதிராக எனது அரசு போராடும் என மன் மோகன் சிங் சில மாதங்களுக்கு முன்பு தெரிவித்திருந்தார். ஆனால் இப்போது சிதம்பரத்தை பாது காப்பதன் மூலம் அந்த உறுதி மொழியை அவர் மீறுகிறார் எனத் தெரிவித்தார்.

சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஆ.ராசா செய்த அதே குற்றத்தை சிதம்பரமும் செய்துள்ளார். சி.பி.ஐ யும் சிதம்பரத்தைக் காப்பாற்ற முயற்சிக்கிறது. பா.ஜ.க. தலை வர்கள் அருண் ஷௌரி, ஜஸ் வந்த் சிங் ஆகி யோரின் வாக்கு மூலங்களைப் பதிவுசெய்த



சி.பி.ஐ. சிதம்பரத்தை மட்டும் விசாரிக்க மறுக்கிறது என்றும் சுஷ்மா தெரிவித்தார். அரசைச் சீர்குலைக்கச் செய்ய எதிர்க்கட் சிகள் முயற்சிக்கின்றன எனப் பிரதமர் தெரிவித்த குற்றச் சாட் டையும் சுஷ்மா நிராகரித்தார்.

2 ஜி தொடர்பான குறிப்பை நிதி அமைச்சகம்தான் எழுதியுள் ளது. பா.ஜ.க. எழுதவில்லை. மேலும் 2 ஜி ஊழலை வெளிப் படுத்தியது கணக்கு தணிக் கைத்துறை என்றும் சுஷ்மா தெரிவித்தார். பா.ஜ.கவின் அருண் ஜேட்லி கூறுகையில், பிரதமர் உண்மை யைத்தான் பாதுகாக்க வேண் டுமே தவிர அமைச்சரை அல்ல - என்றார்.



சென்னை எம்.ஜி.ஆர். நகரில் தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தை ஆரம்பித்தார். சென்னை மேயர் வேட்பாளர் வேல் முருகனுக்கு ஆதரவாக அவர் பிரசாரம் செய்தார்.

# 2 ஜி விவகாரம்: தயாநிதிக்கு எதிராக விரைவில் முதல் தகவல் அறிக்கை!

## நீதிமன்றில் சி.பி.ஐ. தெரிவிப்பு

2 ஜி அலைக்கற்றை ஒதுக் கீடு தொடர்பான குற்றச்சாட் டில், முன்னாள் தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் தயாநிதி மாறன் மீது விரைவில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படும் என்று உச்ச நீதிமன்றத்தில் சி.பி.ஐ. தெரி வித்துள்ளது.

ஏர்செல் நிறுவனத்தின் பங்கு களை மலேசியாவைச் சேர்ந்த மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு விற்க தொலைத்தொடர்புத் துறை அமைச்சராக இருந்த போது தயாநிதிமாறன், நிர்ப்பந் தப்படுத்தினார் எனக் கூறப் பட்ட முறைப்பாடு தொடர் பாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

2ஜி செல்லிடத் தொலை பேசி அலைக்கற்றை ஒதுக்கீடு விவகாரம் தொடர்பாக நேற்று முன்தினம் புதன்கிழமை உச்ச நீதி மன்றத்தில் விசாரணை தொடர்ந்தது. பொதுநல வழக் குகளுக்கான மையத்தின் சார் பில் ஆஜரான சட்டத்தரணி பிர ஷாந்த் பூஷண், தயாநிதி மாற னுக்கு எதிராக குற்றச்சாட்டு கள் கூறப்பட்ட நிலையில் அது தொடர்பாக விசாரணை நடக் கிறது என்று சி.பி.ஐ. கூறினா லும், இதுவரை முதல் தகவல்



அறிக்கை கூட பதிவு செய்யப் படவில்லை என்று முறைப் பாடு கூறினார்.

ஏர்செல் நிறுவனத்தின் பங்கு களை தனது மலேசிய நண்ப ருக்குச் சொந்தமான மேக்ஸிஸ் நிறுவனத்துக்கு விற்க அப் போதைய ஏர்செல் நிறுவன உரி மையாளர் சிவசங்கரனை தயா நிதி நிர்பந்தப்படுத்தினார் என் றும், அதனால், ஏர்செல் நிறு வனம் கோரிய விரிவாக்க உரி மத்தை வழங்காமல் தாமதப் படுத்தினார் என்றும் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது என பிர ஷாந்த் பூஷண் குறிப்பிட்டார்.

அவ்வாறு ஏர்செல் நிறுவனத் தின் பங்குகள் விற்கப்பட்ட பின்னர், மலேசிய நிறுவனம் சன் குழுமத்தில் பெருமளவு முதலீடு செய்திருக்கிறது என வும் அவர் தெரிவித்தார். அப் போது, சி. பி.ஐ. சார்பில் ஆஜ ரான மூத்த சட்டத்தரணி கே.கே. வேணு கோபால், அதுதொடர் பாக விசாரணை நிலைவர அறிக்கையை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். விசாரணை நட வடிக்கைகளை நிறைவு செய்ய இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்கள் தேவைப்படு கின்றது எனக் கூறிய வேணு கோபால், தயாநிதி மாறனுக்கு எதிராக விரைவில் முதல் தக வல் அறிக்கை பதிவு செய்யப் படும் என்று தெரிவித்தார்.

பிரஷாந்த் பூஷண் மேலும் வாதிடும்போது, தற்போதைய உள்துறை அமைச்சரும், முன் னாள் நிதியமைச்சருமான ப.சிதம் பரமும், முன்னாள் தொலைத் தொடர்பு அமைச்சர் ராசாவுடன் இணைந்து, முதலில் வருவோ ருக்கு முன்னுரிமை அடிப்படை யில், அலைக்கற்றை உரிமக் கட்டணங்களை நிர்ணயித் திருப்பதால் அவரது தொடர்பு குறித்தும் விசாரிக்க வேண் டும் என்று வலியுறுத்தினர்.

# கணவருடன் சேர்ந்து வாழ வீரப்பன் மகளுக்கு அனுமதி

## உயர்நீதிமன்று வழங்கியது



சென்னை, செப். 30

சந்தனக் கடத்தல் வீரப்பனின் மகள் வித்தியாராணியை அவரது கணவருடன் சேர்ந்து வாழ சென்னை உயர்நீதிமன்றம் அனுமதி அளித் துள்ளது.

வித்தியாராணியை தான் காதல் திருமணம் செய்திருந்த நிலையில் அவரது தாயார் முத்து லட்சுமி தங்களைப் பிரித்து விட்டார் எனக் குற்றம் சாட்டி சென்னை பெரம்பூரைச் சேர்ந்த மரிய தீபக் என்பவர் சென்னை உயர்நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்திருந்தார்.

எனது மனைவியைக் கண்டு பிடித்து என்னிடம் ஒப்படைக்க பொலிஸாருக்கு உத்தரவிட வேண்டும் என்று அவர் தனது மனுவில் கோரிக்கை விடுத் திருந்தார்.

இந்த மனு மீது சென்னை உயர்நீதிமன்றத்தில் நேற்று முன் தினம் விசாரணை நடை பெற் றது. விசாரணையின்போது வித் தியாராணியை பொலிஸார் நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

அவரிடம் நீ யாருடன் வாழ ஆசைப்படுகிறாய் என நீதிபதி கள் கேட்டனர். அதற்கு கணவர் தீபக்குடன் சேர்ந்து வாழ ஆசைப் படுகிறேன் என வித்தியா பதில ளித்தார். இதையடுத்து நீதிபதி கள் வித்யாராணி ‘மேஜரான’ பெண். அவரது திருமணம் சட் டப்படி செல்லும். எனவே கண வர் தீபக்குடன் சேர்ந்து வாழ அனுமதி அளிக்கிறோம் என தங் களது தீர்ப்பில் தெரிவித்தனர்.

இதையடுத்து நீதிமன்றத் தில் இருந்து வெளியே வந்த வித்யா கணவர் தீபக்குடன் அவர் வீட்டுக்கு புறப்பட்டுச் சென்றார்.

# அப்சல் குருவுக்கு ஆதரவாகத் தீர்மானம்: அமளியால் காஷ்மீர் சட்டசபை ஒத்திவைப்பு



ஸ்ரீநகர், செப். 30

டில்லி நாடாளுமன்றத் தாக்குதல் குற்றவாளி அப்சல் குருவின் தண்டனையைக் குறைக்க வலியுறுத் தும் தீர்மானம் ஜம்மு காஷ்மீர் சட்டசபையில் நேற்றுமுன்தினம் தாக்கலாகவிருந்த நிலையில், அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பா.ஜ.கவினர் அமளியில் ஈடு பட்டதால் அவை ஒத்தி வைக்கப் பட்டது. கடந்த 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி இந்திய நாடாளுமன்றம் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்துக்கு மூளையாக செயற் பட்டதாக கைது செய்யப்பட்ட அப்சல் குருவுக்கு கடந்த 2004 ஆம் ஆண்டு மரணதண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் உத் தரவிட்டது. தனது மரண தண்ட னையை ரத்துச் செய்யக் கோரி, அப்சல் குருவால் அனுப்பப் பட்ட கருணை மனு ஜனாதிபதி யால் நிராகரிக்கப்பட்டது.

இந்த நிலையில், சமீபத்தில் ராஜிவ் கொலை வழக்குக் குற்ற வாளிகளின் தண்டனையை குறைக்க வலியுறுத்தி தமிழக சட்டசபையில் தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றப்பட்டது.

இந்நிலையில், இந்தத் தீர் மானம் நேற்றுமுன்தினம் சட்ட சபையில் கொண்டுவரப்படுவ தாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களிக்கப்போவதாக மக்கள் ஜனநாயக கட்சியும், எதிர்க்கப் போவதாக பா.ஜ.கவும்கூறிவந்தன. தீர்மானத்தின் மீது மனசாட்சிப் படி வாக்களிக்குமாறு தனது உறுப் பினர்களை தேசிய மாநாட்டு கட்சிகேட்டுக்கொண்டது. (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA

**MEDIA RESOURCE AND TRAINING CENTRE (MRTC)**

The Media Resource and Training Centre is a **joint venture** of the University of Jaffna and the Institute of Further Education (FOJO), Sweden.

Applications are invited from suitable candidates for the following posts in the Media Resource and Training Centre, University of Jaffna upto **14th October 2011**

**1. Post of Administrative and Financial Assistant (On Contract)**

**Qualifications:**

i. A Degree from a recognized University in **Commerce or Management Studies**
ii. Should have good secretarial and inter personal skills
iii. Should have Computer Skills in MS Office, particularly spreadsheets
iv. Should have good written and spoken English
v. Possesses minimum of one year experience in Administrative/ Financial Management

**Note:**

1. Preference will be given to those who have postgraduate qualification in Management and have experience at senior managerial level at recognized Educational/ Services organization
2. Administrative and Financial Assistant will assist the Director of MRTC in all matters relating to financial and Office administration

Salary: **Rs.27,325/- (All inclusive and fixed per month)**
Selection by **interview**

**2. Post of Trainer in Journalism (On Contract)**

**Qualifications:**

i. A Degree from a recognized University
ii. Should have completed a course in Training of Trainers in Journalism
iii. Possesses minimum of **one year** experience in electronic media/Web Media

**Salary: Rs.26,600/- (All inclusive and fixed per month)**
Selection by **interview**

**3. Post of Technical Officer (On Contract)**

**Qualifications**

1. Three (3) G.C.E (Advance Level) passes in one sitting
2. At least two years experience in Printing Electronic Media, related to Audio, Video recording and editing
3. The age limit is 18-35 years

Salary: **Rs.22,370/- (All inclusive and fixed per month)**

Selection by **Practical Test and Interview**

**General Conditions:**

This is a **full-time assignment** and initially it is for a period of **one year** from the date of commencement of the assignment. However, the assignment is renewable if the services rendered and work performance during the tenure of assignment is satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund.

Application forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/ Academic Establishments**, University of Jaffna, Sri-Lanka, either in person or by post, on a payment of **Rs.100/-** per application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order drawn in favour of the Bursar, University of Jaffna together with a self –addressed stamped envelope 23x10 cm. in size.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/Government Departments / Corporations and Statutory Board should channel their applications through the Head of the respective Institutions. Incomplete, illegible applications and applications received after the closing date will be rejected without intimation.

**Registrar**
**2011.09.28**


# விலங்கு விசர் நோய் தின நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ்ப்பாணம் சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் உலக விலங்கு விசர் நோய் தினத்தை முன்னிட்டு விசேட விழிப்புணர்வுக் கருத்தரங்கு நேற்று முன்தினம் புதன்கிழமை நவாலர் வீதியிலுள்ள தியாகிகள் அறக்கொடை நிலையத்தின் சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ்.சுகாதார சேவைகள் திணைக் களப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் மங்கள விளக்கேற்றத்துடன் ஆரம்பமானது.

விலங்கு விசர் நோய்த் தாக்கத்தினால் இறந்தவர்களின் ஆத்ம சாந்திக்காக மெழுகுவர்த்தி ஏற்றி மௌனப் பிரார்த்தனையும் இதில் இடம்பெற்றது.

அதனைத் தொடர்ந்து வரவேற்புரையை யாழ்.பிராந்திய பயிற்சி நிலைய பொதுச் சுகாதாரப் போதனாசிரியர் கணேசன் சதீஸும், தலைமையுரையை யாழ்.சுகாதார சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆர்.கேதீஸ்வரனும்,சிறப்புரைகளை யாழ். சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதிகே.சிவராணி,வடமாகாணபொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.சிவபாலன், வட மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன் ஆகியோர் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து சுகாதார வைத்திய அதிகாரிகள்,பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள்,விலங்கு விசர் நோய் தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் சிறப்பு நிகழ்வாக ''யாழ்ப்பாணத்தில் விலங்கு விசர் நோய் ஓர் கண்ணோட்டம்'' என்னும் தலைப்பில் தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி வைத்திய கலாநிதி எஸ்.சிவகணேசன் விளக்கவுரையை வழங்கினார்.

அதனைத்தொடர்ந்து மார்பு நோய் சிகிச்சைப் பிரிவின் பொறுப்பதிகாரி டாக்டர் சி.யமுனாநந்தா எழுதிய பாடலின் இறுவட்டு வெளியீடும் இடம்பெற்றது. அத்துடன் விலங்கு விசர் நோய் தினத்தை முன்னிட்டு பாடசாலை ரீதியாக நடத்தப் பட்ட கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும், பணப் பரிசில்களும் வழங்கப்பட் டன.

இந்த நிழ்வின் இறுதி நிகழ்வாக பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி மாணவர்களின் நாடகம் இடம்பெற்றது. (த-313-4)

# கூரை பிரித்து பொருள்கள் திருட்டு

சண்டிலிப்பாய், செப்.30

இரவு நேரம் கூரையைப் பிரித்துக் கடைக்குள் இறங்கிய திருடன் லாச்சியில் இருந்த பணம், சோடா, சிகரெட், பிஸ்கட், கிற்காட் உட்படப் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளார். இந்தத் திருட்டு தாவடி, மானிப்பாய் வீதியில் சுதுமலை தெற்கில் இடம்பெற்றுள்ளது.

இரவு நேரம் கூரை மீது ஏறிய திருடர் ஓட்டைப் பிரித்து உள்ளே இறங்கி மேசை லாச்சியிலிருந்த பணம் மற்றும் பிஸ்கட், சோடா, சிகரெட், கிற்காட் உட்படப் பத்தாயிரம் ரூபா பெறுமதியான பொருள்களைச் சுருட்டிக் கொண்டு பின் கதவைத் திறந்து வெளியே சென்றுள்ளார்.

இத்திருட்டுத் தொடர்பாக மானிப்பாய் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. பொலிஸார் குறித்த இடத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-115)

# கப்பம் பெற்ற பொலிஸ் சார்ஜன் சிக்கிக் கொண்டார் பொலிஸாரிடம்

கொழும்பு, செப்.30

கொழும்பு, வெல்லம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த ஓட்டோ சாரதி ஒருவரிடமிருந்து ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவைக் கப்பமாகப் பெற்றவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்ற பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த பொலிஸ் சார்ஜன் ஒருவர் கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸ் குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறிப்பிட்ட ஓட்டோ சாரதி மைத்துனர் ஒருவரின் ஆலோசனைக்கு அமைய குறிப்பிட்ட பொலிஸ் சார்ஜனும் இன்னும் இருவரும் பொலிஸ் அதிகாரிகள் போல் ஓட்டோ சாரதியின் வீட்டினுள் சென்றனர்.

தடை செய்யப்பட்ட ''அல்ராவைற்'' மின் விளக்கொன்றை ஓட்டோச் சாரதி சட்டபூர்வமற்ற வகையில் வைத்திருப்பதாகக் குற்றம்சாட்டி ஐந்து லட்சம் ரூபாவைக் கப்பமாகக் கோரியிருந்தனர்.

அப்பெரிய தொகையைச் செலுத்தத் தமக்கு வசதியில்லை எனக் கூறி ஒன்றரை லட்சம் ரூபாவைக் கப்பமாகச் செலுத்தினார் சாரதி.

பின்னர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்ததையடுத்து குறிப்பிட்ட பொலிஸ் சார்ஜனும் ஏனையோரும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ம)

## சமய சந்நிதிகளில்

யாழ்.றக்கா வீதியில் புனித திரேசாள் ஆலய வருடாந்த நவநாள்கள் பூசைகள் தினமும் மாலை 5 மணிக்கு ஆரம்பமாகின்றன. இதில் திவ்விய நற்கருணைப் பெருவிழாநாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கும் புனிதையில் பெருவிழாத் திருப்பலியும், திருச்சொரூபப் பவனியும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 6.30 மணிக்கும் இடம்பெறவுள்ளன. (ம)

* * *

பண்டத்தரிப்பு,செப்.30

சண்டிலிப்பாய் புனித தெரேசா ஆலய வருடாந்த பெருவிழா நேற்று பிற்பகல் 4.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நற்கருணை வழிபாடு இடம்பெறும்.

திருநாள் திருப்பலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு, மாதா சுற்றுப் பிரகாரமும், பண்டத்தரிப்பு பங்குத் தந்தை யூயின் அடிகளார் தலைமையில் இடம் பெறவுள்ளது. (ம-130)

* * *

வடமராட்சி,செப்.30

அல்வாய், கிளானை மேல் மருவத்தூர் ஆதி பராசக்தி பீடத்தில் கடந்த புதன்கிழமை காலை 8 மணிக்கு சக்தி கொடியேற்றத்துடன் சிறப்பு அபிஷேகம் ஆரம்பமானது.

எதிர்வரும் 5 ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் காலை 9 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் முற்பகல் 10 மணிக்கு பூசையும் நண்பகல் 12 மணிக்கு இலட்சார்ச்சனையும் நடைபெறும். (ம-236)

* * *

அனலைதீவு ஆரோக்கிய அன்னையின் வருடாந்த திருப்பலித்திருவிழா நேற்று வியாழக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. நவநாள்கள் விழா நடைபெற்றுவருகிறது.

எதிர்வரும் வியாழக்கிழமை மாலை 6 மணிக்கு நற்கருணை ஆராதனையும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு திருப்பலிப் பூசையும் சுற்றுப்பிரகாரமும் இடம்பெறும். (ம-7)

* * *

பூநகரி பிரதேசத்தின் ஆலயங்களில் நவராத்திரி பூசைகள் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன.

பூநகரியின் சோலை சிறி நாகபூசணி அம்மன் ஆலயம், செல்லையா தீவு சிறி கண்ணகை அம்மன் ஆலயம், எரியாரை தான் தோன்றி கண்ணகை ஆலயம், மேளாய் சிறி கண்ணகை அம்மன் ஆலயம், முழங்காவில் பிள்ளையார் ஆலயம், கட்டுக்கரை பிள்ளையார் ஆலயம், விடத்தல் பிள்ளையார் ஆலயம்,திகிரி விநாயகர் ஆலயம், கறுக்காய் தீவு முருகன் ஆலயம்,சோலை முருகன் ஆலயம் ஆகியவற்றில் நவராத்திரி பூசைகள் இடம் பெற்று வருகின்றன. (ம-406)

# ஒரே நாளில் பல நிகழ்வுகள் தடுமாறும் ஆசிரியர் சமூகம்

நாவற்குழி, செப்.30

சர்வதேச ஆசிரியர் தினம், விஜய தசமி, யாழ்.பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழா ஆகியன எதிர்வரும் 6 ஆம் திகதி ஒரே நாளில் வருவதால் பாடசாலை ஆசிரியர்கள் சிலர் தடுமாற்றமடைந்துள்ளனர்.

கல்விமாணி, கல்வி முதுமாணி, முதுகலைமாணி, முதுமெய்யியல்மாணி போன்றபட்டநெறிகளைப் பூர்த்தி செய்த ஆசிரியர்கள் வட மாகாணப் பாடசாலைகளில் உள்ளனர்.

கடந்த வருடம் சில பாடசாலைகளின் அதிபர், ஆசிரியர்கள் ஒன்று கூடி ஆசிரியர் தினத்தை 05 ஆம் திகதி நடத்தி ஒத்துழைப்புக் கொடுத்தனர். சில பாடசாலைகள் விடாப்பிடியாக ஒக்ரோபர் 06 ஆம் திகதியன்று சர்வதேச ஆசிரியர் தினத்தைக் கடைப்பிடித்தன.

இந்த நிலையில் தமது ஆசிரியர்கள் பட்டம் பெறுவதனையும், ஆசிரியர்கள் தினக் கௌரவம் பெறுவதையும் கல்விச் சமூகம் உறுதி செய்ய வேண்டுமெனவும் ஆசிரியர்கள் கூறுகின்றனர்.

விஜயதசமி தினமும் அதே தினத்தில் வருவதால் தமது பிள்ளைகளுக்கு ஏடு தொடக்க வேண்டியுள்ள ஆசிரியர்களும் மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளனர். (ம-121)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடாபி பிறந்த நகரையும் கைப்பற்ற களமிறங்கியது லிபியப் படைகள்

## இன்னும் ஓரிரு நாளில் இறுதிச் சண்டை

திரிபோலி, செப்.30

லிபியாவில் மும்மர் கடாபி ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் கடைசி நகரான சிர்தேவுக்குள் தேசிய இடைக்கால அரசின் படை நுழைந்ததுடன் அந்த நகரின் கிழக்குப் பகுதியில் இருக்கும் துறைமுகத்தையும் கைப்பற்றிவிட்டது.

கடாபியின் பிறந்த நகரமான சிர்தே மட்டும் இன்னும் அவரது ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. இந்த நகரையும் இப்போது அவரது எதிர்ப்பாளர்கள் முற்றுகையிட்டிருக்கின்றனர். இன்னும் ஓரிரு நாளில் இறுதிச் சண்டை நடக்கும் என்று கூறப்படுகிறது.

சிர்தேவுக்கு கிழக்கே மத்தியத் தரைக் கடலை ஒட்டி அமைந்த துறைமுகத்தை கடாபி எதிர்ப்புப் படையினர் கைப்பற்றி விட்டதாக அந்தப் படையின் தளபதி ஒருவர் தெரிவித்தார். நகருக்கு வெளியே கடாபிக்குச் சொந்தமான பெரிய ஆயுதக் கிடங்கு ஒன்றையும் அவர்கள் கைப்பற்றியிருக்கின்றனர். அங்கு ஏராளமான ஆயுதங்கள் இருந்ததாகக் கூறப்படுகிறது.

இந்தப் படையினருக்கு ஆதரவாக நேட்டோ விமானங்களும் குண்டுகளை வீசி வருகின்றன. தூரத்திலிருந்து ரொக்கெட் தாக்குதலும் நடத்தப்படுகிறது.

இருப்பினும் கடாபியின் ஆதரவாளர்கள்தொடர்ந்து போரிட்டு வருவதால் சண்டை கடுமையாக இருப்பதாகவும், இரு தரப்பினருக்கும் இடையே ஆயிரக் கணக்கான பொது மக்கள் சிக்கியிருப்பதாகவும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சண்டை தீவிரமடைந்திருப்பதால், நகரத்திலிருந்த மக்கள் பீதியுடன் வெளியேறிக் கொண்டிருக்கின்றனர். கடாபியின் எதிர்ப்பாளர்கள் சிர்தேவைக் கைப்பற்றிவிட்டால் தங்களைக் கழுத்தை அறுத்துக் கொன்றுவிடுவார்கள் என்று பொதுமக்கள் அச்சத்துடன் கூறியதாக பிபிசி தெரிவித்துள்ளது.

கிட்டத்தட்ட லிபியா முழுவதையும் இடைக்கால அரசின் படைகள் கைப்பற்றிவிட்ட நிலையிலும், கடாபி எங்கிருக்கிறார் என்கிற விவரம் இன்னும் தெரியவில்லை. அவர் சிர்தே நகரில் பதுங்கியிருக்கலாம் என்று ஒரு தரப்பினர் கூறி வருகின்றனர்.

அல்ஜீரியாவுக்குத் தப்பிச் சென்ற அவரது மகள் ஐசா, ''எனது தந்தை இறுதி வரை போராடுவார்'' என்று கூறியிருந்தார். இதனால் கடாபி லிபியாவில்தான் இருக்கிறார் என்றும் நம்பப்படுகிறது.



மலேசியத் தலைநகர் கோலாலம்பூரில் வியட்நாம் அதிபர் வருகைக்காக அந்தநாட்டு பிரதமர் ரஜிப்ரசாக் மற்றும் அவரது மனைவி ரோஸ்மாமன்சோர் காத்திருந்தனர்.

# பாகிஸ்தானுடன் சுமுக உறவு சாத்தியமில்லை

## என்கிறார் அமெரிக்க முப்படைத் தலைமைத் தளபதி



இஸ்லாமாபாத்,செப்.30

பாகிஸ்தானுடனான அமெரிக்காவின் உறவு எதிர்வரும் காலங்களில் சுமுகமாக இருக்க வாய்ப்பில்லை; கடினமானதாகவே இருக்கும். இனிமேல் பாகிஸ்தானில் தளம் அமைத்துச் செயற்படும் தீவிரவாதிகளை கட்டுப்படுத்தும் விவகாரங்களில் கடுமை காட்டப்படும் என்று அமெரிக்க முப்படைகளின் தலைமைத் தளபதி அட்மிரல் மைக் முல்லன் தெரிவித்துள்ளார்.

இந்தமாதம் இறுதியில் ஓய்வு பெற உள்ள முல்லன், அமெரிக்கப் பத்திரிகையான வோல் ஸ்டீரிட் ஜெர்னலுக்கு அளித்த பேட்டியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இரு நாடுகளுக்கும் இடையேயான உறவு எப்படி இருந்த போதிலும், பாகிஸ்தான் படைத் தளபதிகளுடன் அதிகம் நெருக்கம் காட்டிய முல்லன் இவ்வாறு கூறியிருப்பது கவனிக்கத்தக்க ஒன்றே.கடந்த வாரம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் பேசிய முல்லன், பாகிஸ்தான் உளவுத் துறையும் தீவிரவாதிகளும் கைகோத்துச் செயற்படுவதாகக் கூறினார். இது இரு நாடுகளுக்கும் இடையேயான உறவில் விரிசலை ஏற்படுத்தியுள்ளது. முல்லனின் இந்தக் கருத்து பாகிஸ்தான் உயரதிகாரிகளை எரிச்சலடையச் செய்துள்ளது.


# செம்மஞ்சள் நிறத்துக்கு மாறிய ஆஸ்திரேலிய முதலை

ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் உள்ள பாதுகாக்கப்பட்ட பெரிய ஏரியில் 8 அடி நீளம் உடைய ஸ்நாப்பி என்ற முதலை உள்ளது. தற்போது இந்த முதலை திடீரென செம்மஞ்சள் நிறமாக மாறத் தொடங்கியுள்ளது. இந்த அதிசயத்தைக் காண பார்வையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது.

முதலை நிறம் மாறியது வியப்பாக உள்ளது என அதிகாரிகள் தெரிவித்தனர். இதற்கிடையில் முதலையின் நிறமாற்றத்துக்கான காரணங்கள் குறித்து ஆராய மருத்துவர் குழு நியமிக்கப்பட்டுள்ளது.

# பூமியில் வீழ்ந்த அமெரிக்க செயற்கைக்கோள் எங்கே?

## தேடும் பணி தீவிரம்



அமெரிக்கா விண்ணுக்கு அனுப்பிய 6தொன் எடையுள்ள செயல் இழந்த செயற்கைக் கோளின் உடைந்த உதிரிப் பாகங்கள் எங்கு வீழ்ந்தது எனச் சரியாகக் கண்டுபிடிக்க முடியாமல் நாசா விஞ்ஞானிகள் திணறி வருகின்றனர். எனவே அவற்றை தேடும் பணியில் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

தொடக்கத்தில் அந்தச் செயற்கை கோளின் உடைந்து சிதறிய துண்டுகள் கனடாவில் வீழ்ந்ததாகக் கூறப்பட்டது. ஆனால் அந்தச் சிதறல்கள் அங்கு விழவில்லை. எனவே, நாசா விஞ்ஞானிகள் உடைந்த செயற்கைக் கோள் சிதறல் விழுந்த இடத்தைத் தற்போது கணித்துள்ளனர். அதன்படி அவை அமெரிக்கக் கண்டத்தில் பசிபிக் கடல் பகுதியில் வீழ்ந்திருக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளனர்.

உடைந்து சிதறிய சில துண்டுகள் கிறிஸ்துமஸ் தீவில் இருந்து தென்மேற்கில் 420 கி.மீற்றர் தூரத்தில் வீழ்ந்திருக்கலாம். மேலும் உடைந்த 25 துண்டுகள் அதில் இருந்து 800 கி.மீற்றர் சுற்றளவில் சிதறிக் கிடக்கலாம் என்றும் தெரிவித்துள்ளனர். எனவே செயற்கைக் கோளின் உடைந்த உதிரிப் பாகங்களைத் தேடும் பணியில் விஞ்ஞானிகள் தீவிரமாக இறங்கியுள்ளனர்.

# எகிப்து தேர்தல் விவரம் அறிவிப்பு

கெய்ரோ,செப்.30

எகிப்து நாடாளுமன்றத் தேர்தல் விபரத்தை ஆளும் இராணுவக் கவுன்ஸில் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இதில் முதல் கட்டத் தேர்தல் நவம்பர் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக் ஆட்சி இருந்து கவிழ்க்கப்பட்டதன் பின் அங்கு தேர்தல் நடைபெறவுள்ளது. இதுவே முதல் முறையாகும். இதில், மஜ்லிஸ் அல்ஷாப் எனும் கீழ்ச் சபைக்கான தேர்தல் மூன்று கட்டமாக நடைபெறவுள்ளது.

நவம்பர் 28ஆம் திகதி ஆரம்பமாகும் தேர்தல் தொடர்ந்து டிசெம்பர் 14 மற்றும் ஜனவரி 3 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. கீழ் சபைக்கான முதல் அவைக் கூட்டம் மார்ச் 17ஆம் திகதி நடைபெறவுள்ளது.

அதேபோன்று ஷஆரா எனும் மேல் சபைக்கான தேர்தல் ஜனவரி 29ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அத்துடன் மேல் சபையின் முதல் அவைக் கூட்டம் மார்ச் 24ஆம் திகதி நடைபெறும் என இராணுவக் கவுன்ஸில் அறிவித்ததாக அந் நாட்டு அரசு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜெருஸலத்தில் மேலும் 1,100யூத குடியிருப்புகள்

## அமெரிக்கா உட்பட சர்வதேச நாடுகள் கண்டனம்

சட்ட விரோத ஆக்கிரமிப்புப் பகுதியான கிழக்கு ஜெருஸலத்தில் மேலும் 1100 யூத குடியிருப்புக்களை அமைக்க இஸ்ரேல் அரசு அனுமதி அளித்துள்ளது.இஸ்ரேலின் இந்தச் செயற்பாட்டுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்படப் பல சர்வதேச நாடுகளும் கண்டனத்தை வெளியிட்டுள்ளன.

பலஸ்தீனிடமிருந்து ஆக்கிரமித்த கிழக்கு ஜெருஸலத்தின் ஜைலோ பகுதியிலேயே இந்தக் குடியிருப்பு அமைக்கப்படவுள்ளது. பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் ஐ.நா முழு அங்கத்துவத்திற்கான கோரிக்கையை விடுத்து ஒரு வார காலத்துக்குள் இஸ்ரேல் இந்த நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் உள்துறை அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில், தென்கிழக்கு ஜெருசலத்தை சுற்றிலும் அந்நிய எல்லைப் பகுதி அமைந்துள்ள நிலையில் ஜைலோவில் குடியிருப்புகள் அமைக்கப்படும். 60 நாள்கள் மக்கள் கருத்துக் கணிப்பு நடத்தப்பட்டதன் பின்னரே இந்தக் கட்டுமானப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமைக்கப்படவுள்ள 1100 யூதக் குடியேற்றங்களும் சிறிய குடியிருப்பு திட்டமாக அமையவுள்ளது. இந்தக் குடியிருப்புத் திட்டம் யூத புதுவருடத்தின் சிறந்த பரிசாக அமையும் என்று ஜெருசலம் குடியிருப்புத்திட்டக் குழுவின் உறுப்பினர் பெயித் கபய் குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் அரசின் இந்த செயற்பாடு கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக அமெரிக்கா தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளது.

அதேபோன்று தனது அதிருப்தியை வெளியிட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவு கொள்கைகளுக்கான தலைவர் கதரின் அஷ்டன் இஸ்ரேலின் இந்தச் செயற்பாடு மத்திய கிழக்கு சமாதானத்தை குலைத்துவிடும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இஸ்ரேல் தனது திட்டத்தை உடனடியாக மீள் பரிசீலனை செய்யவேண்டும் எனப் பிரிட்டன் வெளிவிவகார செயலாளர் வில்லியம் ஹக் அழுத்தம் கொடுத்துள்ளார். இஸ்ரேலின் குடியிருப்புத் திட்டம் சர்வதேச சட்டத்தின்படி சட்டவிரோதமானதாகும். சமாதானச் செயற்பாட்டை குலைக்கும் செயலாகும் என மேலும் தெரிவித்தார்.

# பாவாடைக்குள் மறைத்ததை காட்டிக் கொடுத்த கமெரா



கடையொன்றில் நகைகளைத் திருடிப் பாவாடைக்குள் உள்ள இரகசிய பொக்கெற்றுக்களில் மறைத்து வைத்த ரோமானியா நாட்டைச் சேர்ந்த பெண்ணொருவர் வசமாக மாட்டிக் கொண்டார்.

திருடிய தங்க நகைகளின் பெறுமதி 54,000 ஸ்டேர்லிங் பவுண்கள். நகைகள் காட்சிக்குவைக்கப்பட்டிருக்கும் பெட்டியுடன் சேர்த்தே அவற்றைத் திருடிப் பாவடையில் இருந்த நீண்ட பொக் கெற்றுக்குள் இவர் மறைத்து வைத்துள்ளார்.

கண்காணிப்புக் கமெரா காட்டிக் கொடுத்தமையால் குறித்த பெண் வசமாக மாட்டிக் கொண்டார்.

அவர் தற்போது நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டு 16 மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வைரவிழா வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது நெல்லியடி ம.வி. அணி

யாழ்ப்பாணம், செப்.30

வைரவிழா வெற்றிக்கிண்ணத்தை தன் வசமாக்கியது நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி.

வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தின் வைர விழாவை முன்னிட்டு நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழகம் வடமராட்சிப் பாடசாலைகளுக்கு இடையே நடத்திய 20-20 கிரிக்கெட் போட்டியின் இறுதியாட்டம் நேற்று முன்தினம் புதன்கிழமை வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



இறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியை எதிர்த்து கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி அணி மோதிக் கொண்டது.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 138 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் அமிர்தன் 37 ஓட்டங்களையும் உமாசுதன் 33 ஓட்டங்களையும் பிரியதர்சன் 13 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி அணி சார்பாக அனோசன் 4 விக்கெட்டுகளையும் றஜீவன், அனுகாந்த ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

139 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியெனப் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 100 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் அனுசாந் 33 ஓட்டங்களையும் றஜீவன் 12 ஓட்டங்களையும் அனுரதன் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சார்பாக பிரசாந், உமாசுதன், பிரகாஸ் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

சிறந்த ஆட்ட நாயகனாக நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி வீரன் உமாசுதன் தெரிவு செய்யப்பட்டார். சிறந்த தொடர் ஆட்ட நாயகனாக கரவெட்டி விக்கினேஸ்வரக் கல்லூரி அணி வீரன் அனுரதன் தெரிவு செய்யப்பட்டார். (ம-23)

# இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்ற அணிகள்

வலி.வடக்கு, செப்.30

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 13 வயதுப் பிரிவினருக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் விளையாட அளவெட்டி அருணோதயக் கல்லூரியும் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் தகுதி பெற்றுள்ளன.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம் பெற்ற அரையிறுதிப் போட்டியில் இந்த இரண்டு அணிகளும் தெரிவு செய்யப்பட்டன.

அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் இரு அணிகளும் கோல்கள் பெறாத நிலையில் ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது.

வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலைத் தவிர்ப்பு உதைகளை அளவெட்டி அருணோதயக் கல்லூரி உரிய முறையில் பயன்படுத்திக் கொண்டதைத் தொடர்ந்து அருணோதயக் கல்லூரி 4:2 கோல்கள் என்ற அடிப்படையில் மகாஜனக் கல்லூரியை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதிப் போட்டியில் கட் டுவன் புலம் மகாவித்தியாலயமும் வயாவிளான் மத்திய மகா வித் தியாலயமும் மோதிக் கொண்டன.

இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பெற்று ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. வெற்றி தோல்வியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சம நிலை தவிர்ப்பு உதைகளைத் தொடர்ந்து வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 4:3 கோல்கள் என்ற அடிப்படையில் கட்டுவன்புலம் மகாவித்தியாலயத்தை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றது. (ம- 86)



மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் றுமேஸ் சந்தியேடு வடமாகாண பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற தடகளப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் 100, 200, 400 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் சாதனை நிலைநாட்டியுள்ளார். இதனை முன்னிட்டு மன்னார் சின்னக்கடை கிறீன்பீல்ட் விளையாட்டுக்கழகத்தினரால் இவர் கௌரவிக்கப்பட்டார். இவருக்கான நினைவுப் பரிசை மன்னார் நகரசபை உறுப்பினர் நவுசின் வழங்குகிறார். அருகில் கீறின்பீல்ட் கழகத் தலைவர் காந்தன் உள்ளார். (ம-23)

# யாழ்.மாவட்ட ரீதியில் உதைபந்தாட்டப் போட்டி

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ். உதைப்பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் குருநகர் சென். றோக்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ். மாவட்ட ரீதியாக உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இந்தப் போட்டிகள் குருநகர் சென்.றோக்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளன. போட்டிகளுக்கான அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் போட்டிகள் ஒக்ரோபர் மாதம் இரண்டாம் வாரத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (ம-23)

# பிறிமியர் லீக் உதைபந்தாட்டம்

இலங்கை உதைப்பந்தாட்டச் சம்மேளனம் நடத்தும் பிறிமியர் லீக் பிரிவுIII இற்கான உதைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று நாளை சனிக்கிழமை வவுனியா நகர சபை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்தப் போட்டியில் யாழ்ப்பாணம் குருநகர் பாடும் மீன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

யாழ். உதைபந்தாட்ட லீக்கால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே நடத்தப்பட்ட லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் குருநகர் பாடும் மீன் வி.க. இரண்டாம் இடத்தைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (ம- 23)

# அங்கத்துவ கழகங்களின் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.30

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையே 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

போட்டிக்கான ஏற்பாடுகள் யாவும் உதைபந்தாட்ட போட்டிக் குழுவால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

போட்டிகள் யாவும் ஒக்ரோபர் இரண்டாம் வாரத்தில் ஆரம்பமாகவுள்ளதாகப் போட்டி ஏற்பாட்டாளர் தெரிவித்துள்ளார். (ம-23)

# இன்றைய தாச்சிப் போட்டி

யாழ்ப்பாணம், செப்.30

கைதடி மத்தி குமரநகர் விளையாட்டுக் கழகம் தென்மராட்சி பகுதிக்கு உட்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கு இடையில் மின்ஒளியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம்:

இரவு 7 மணி- வளர்மதி விளையாட்டுக்கழகம் எதிர் நாவற்குழி சரஸ்வதி விளையாட் டுக்கழகம். (ம-23-86)





யாழ். பல்கலைக்கழக விளையாட்டு அவை உதயன் ஊடக அனுசரணையுடன் யாழ்.மாவட்ட பளுதூக்கும் கழகங்களுக்கு இடையே நடத்திய பளுதூக்கும் போட்டியில் 105 கிலோ பிரி[illegible] இடங்களைப் பெற்ற வீரர்களான ரி.[illegible] (135 கிலோ), தே.[illegible] ஆகியோர் முன்னாள் பளுதூக்கு வீரர் மகாதேவாவிடம் பரிசில்களைப் பெறுகின்றனர். (ம-86)

# படையினர் பொதுமக்களிடையே நல்லுறவுக் கிண்ண கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,செப்.30

படையினர்-பொதுமக்கள் நல்லுறவு வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் நாளை சனிக்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களின் பங்குகொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

**யாழ்.மத்தியகல்லூரி மைதானம்**

*காலை 8.30 மணி- யாழ் சென்ரல் விளையாட்டுக் கழகம் எதிர் சென்றலைட்ஸ் விளையாட்டுக்கழகம்,

* பிற்பகல் ஒரு மணி- ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் யூனியன் விளையாட்டுக் கழகம்.

**வட்டுக் கோட்டை யாழ்ப் பாணக்கல்லூரி மைதானம்**

*காலை8 மணி- பற்றீசியன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் கடற்படை அணி. பிற்பகல் 1 மணி ஓல்ட்கோல்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம். (ம- 23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சொந்த மண்ணில்நடப்புச் சம்பியன் வெற்றி

சென்னை சூப்ப கிங்ஸ் அணி 4 இலக்குகள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவின் கேப் ஹோப்பிராஸ் அணியை நேற்று முன்தினம் வெற்றி கொண்டது. சென்னையின் டுவைன் பிராவோ சகல துறைகளிலும் கலக்க சென்னை இந்த வெற்றியைப் பெற்றது.

சம்பியன் லீக் தொடரின் குழு 'ஏ' ஆட்டத்தில் சென்னை சூப்ப கிங்ஸ் அணியும், தென்னாபிரிக்காவின் கேப் ஹோப்பிராஸ் அணியும் சென்னையில் நேற்றுமுன்தினம் மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கேப் ஹோப்பிராஸ் அணித் தலைவர் கெம்ப் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

லெவி, கிப்ஸ் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இவர்களது இணைப்பாட்டத்தை இரண்டாவது பந்து பரிமாற்றத்திலேயே அஸ்வின் முடித்து வைத்தார். லெவி 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து இணைந்த கிப்ஸ், விலஸ் ஜோடி சிறப்பாக ஆடியது. இருந்தும் அணி 35 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இரண்டாவது இலக்கு சரிக்கப்பட்டது. அதிரடி வீரர் கிப்ஸ் 14 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 18 ஓட்டங்களுடன் பொல்சரின் பந்து வீச்சில் வெளியேற்றப்பட்டார். விலஸுடன், ஒயிஸ் ஷா ஜோடி சேர்ந்தார். விலஸ் மெதுவாக ஓட்டக் குவிப்பில் ஈடுபட்டார். மறுமுனையில் ஷா வேகமாக துடுப்பெடுத்தாடினார். 3 ஆவது இலக்குக்காக 32 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில், விலஸ் 18 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார்.

அதன் பின்னர் இணைந்த ஷா, டுமினி ஜோடி கேப் ஹோப்பிராஸ் அணிக்கு சிறந்த இணைப்பாட்டத்தை வழங்கியது. மத்தியவரிசையில் மிக பலமான வேகமான இணைப்பாட்டம் பகிரப்பட்டது. சென்னையின் பந்து வீச்சை சிறப்பாக சிதறடித்தது. 4 ஆவது இலக்குக்காக 57 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிரப்பட்டது. மோர்கல் வீசிய 17 ஆவது பந்து பரிமாற்றத்தின் முதலாவது பந்தில் டுமினி 24 பந்துகளில் 2 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 29 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதே பந்து பரிமாற்றத்தின் மூன்றாவது பந்து வீச்சில் ஷா 38 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர் இரு ஆட்டமிழப்புக்களைத் தொடர்ந்து ஹோப்பிராஸின் அதிரடி அடங்கியது. இறுதி 4 பந்து பரிமாற்றங்களில் 21 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளை இழந்தது.

இறுதியில் 20 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 145 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் மோர்கல், பொலஞ்சர், பிராவோ தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.




பதிலுக்கு சுமாரான இலக்கை விரட்டத் தொடங்கிய சென்னைக்கு ஹஸி, விஜய் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது. 5 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 41 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் விஜய் 10 பந்துகளில் 2 நான்கு ஓட்டங்களுடன் 14 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். அடுத்த பந்து பரிமாற்றத்தை டுமினி வீச மறுமுனையில் சிறப்பாக ஆடிய ஹஸி ஆட்டமிழந்தார். ஹஸி 24 பந்துகளில் 4 நான்கு, ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 29 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் வெளியேறினார். அடுத்து களமிறங்கிய பத்திரிநாத், சகா ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழந்து வெளியேற சென்னை இக்கட்டு நிலைக்கு தள்ளப்பட்டது. சகா ஆட்டமிழந்த அடுத்த பந்திலேயே சிறப்பாக ரெய்னா 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 11.5 பந்து பரிமாற்றங்களில் 77 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறியது.

அதன் பின்னர் இணைந்த அணித் தலைவர் டோனி, டுவைன் பிராவோ ஜோடி அடுத்தடுத்த ஆட்டமிழப்புக்களிலிருந்து அணியை மீட்டு முன்னேறச் செய்தனர். இடையிடையே பிராவோ மட்டும் அதிரடிகள் காட்டினார். இந்த ஜோடி இலக்குகளுக்கு இடையில் வேகமாக ஓடி ஓட்டங்களை எடுத்தது. இருப்பினும் 6 ஆவது இலக்குக்காக 43 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் டோனியின் இலக்கு சரிக்கப்பட்டது. டோனி 15 ஓட்டங்களுடன் 17.4 பந்து பரிமாற்றத்தில் ஆட்டமிழந்தார். டோனியைத் தொடர்ந்து அல்பின் மோர்கல் களமிறங்கினார்.

இறுதி இரு பந்து பரிமாற்றங்களில் 23 ஓட்டங்கள் வெற்றிக்குத் தேவையான நிலையில் 19 ஆவது பந்து பரிமாற்றத்தை ஸ்ரெய்ன் வீசினார். மூன்றாவது பந்தில் பிராவோ அதிரடியாய் ஆறு ஓட்டம் விளாசினார். அடுத்த இரு பந்துகளிலும் நான்கு ஓட்டங்கள் விளாச சென்னையின் பக்கம் வெற்றி திரும்பியது. இறுதிப் பந்து பரிமாற்றத்தில் 6 ஓட்டங்கள் தேவையானநிலையில் சென்னை 19.4 பந்துகளில் 6 இலக்குகளை இழந்து 146 ஓட்டங்களைப் பெற்றது. டுவைன் பிராவோ ஆட்டமிழக்காமல் 25 பந்துகளில் இரு ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 46 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்து வீச்சில் டுமினி 4 பந்து பரிமாற்றங்கள் வீசி 20 ஓட்டங்கள் கொடுத்து 4 இலக்குகளை சரித்தார். ஆட்டநாயகனாக சென்னையின் டுவைன் பிராவோ தெரிவானார். இந்த வெற்றி மூலம் சென்னை புள்ளி பட்டியலில் மூன்றாவது இடத்துக்கு முன்னேறியது. (15)

# கொல்கத்தாவின் தாக்குதலில் பஞ்சாய் பறந்த பெங்களூர்

கலிஸ், கம்பீர் ஜோடியின் அதிரடித் தாக்குதலினால் கொல்கத்தா அணி 9 இலக்குகள் வித்தியாசத்தில் பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியை வெற்றி கொண்டது. சம்பியன் லீக் தொடரின் குழு 'பி' ஆட்டத்தில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியும் பெங்களூரில் நேற்று இரவு மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணித் தலைவர் கம்பீர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

பெங்களூரின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக அதிரடி வீரர்களான கெயில், டில்ஷான் களமிறங்கினர். முதலாவது பந்து பரிமாற்றத்தை லீ வீச அதை எதிர் கொண்ட கெயில் அதை ஓட்டமற்ற பந்து பரிமாற்றமாக முடித்து வைத்தார். மீண்டும் மூன்றாவது பந்து பரிமாற்றத்தை லீ வீச அதை எதிர் கொண்ட கெயில் முதலிரண்டு பந்துகளிலும் அதிரடியாய் 6 ஓட்டங்கள் விளாசினார். அடுத்த பந்து பரிமாற்றத்தை கலிஸ் வீச முதலாவது பந்தில் கெயில் 6 ஓட்டம் விளாசினார். இருப்பினும் அதே பந்து பரிமாற்றத்தின் மூன்றாவது பந்தில் 16 பந்துகளில் 3 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 25 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து கெயில் வெளியேறினார். இருப்பினும் அடுத்து நுழைந்த ஹோக்லி ஓட்டமெதனையும் பெறாத நிலையில் லீயின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து நுழைந்த திவாரி வேகமாக ஓட்டங்களைக் குவித்தார். மறு முனையில் டில்ஷான் சிறப்பான முறையில் ஒத்துழைப்பு வழங்கினார். பெங்களூர் 40 பந்துகளில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தது. சிறப்பாக ஆடிய திவாரி 18 பந்துகளில் தலா ஒரு 4 ஓட்டம், ஆறு ஓட்டம் அடங்கலாக 19 ஓட்டங்களுடன் யூசுப்பின் பந்து வீச்சில் வீழ்ந்தார். அடுத்து நுழைந்த அகர்வால் நுழைந்த வேகத்தில் ஆறு ஓட்டம் விளாசினார். நிதானமாக ஆடிய டில்ஷான் 18 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். சிறிது நேரத்திலேயே அகர்வால் 7 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள் அடங்கலாய் 13 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து நுழைந்த கைவ் 5 ஓட்டங்களுடன் வெளியேற 13.1 பந்து பரிமாற்றங்களில் 91 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளை இழந்தது. அடுத்து இணைந்த அணித்தலைவர் வெற்றோரி, ராயு பகாட்கல் ஜோடி அதிரடியாய் ஆடி அணியை வலுவான இலக்கை நோக்கி அழைத்துச் சென்றது. இவர்களின் அதிரடியில் இறுதி 5 பரிமாற்றங்களில் 67 ஓட்டங்கள் குவிக்கப்பட்டது.

இறுதியில் இருபது பந்து பரிமாற்றங்கள் நிறைவில் 9 இலக்குகளை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. வெற்றோரி 23 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 44 ஓட்டங்களையும், பகாட்கல் 18 பந்துகளில் 2 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாய் 25 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் லீ, இக்பால் அப்துல்லா, உனட்கட் தலா 2 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு கடினமான இலக்கை விரட்டத் தொடங்கிய கொல்கத்தா அணிக்கு கலிஸ், ஹடின் ஜோடி அதிரடியான சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. இரண்டாவது பந்து பரிமாற்றத்தை அரவின்ட் வீச தொடர்ச்சியாய் 3 நான்கு ஓட்டங்கள் விளாசி அதிரடியை ஆரம்பித்து வைத்தார். தொடர்ச்சியாய் அரவின்டின் பந்து பரிமாற்றத்தை ஹடின் போட்டுத் தாக்க அணியின் ஓட்ட வேகம் அதிகரித்தது. 35 பந்துகளில் அணி தனது முதலாவது அரைச்சதத்தை பூர்த்தி செய்தது.

7.2 பந்து பரிமாற்றங்களில் 62 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் கொல்கத்தாவின் முதலாவது இலக்கு இழக்கப்பட்டது. 27 பந்துகளில் 2 ஆறு ஓட்டங்கள், 5 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 42 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார் ஹடிசன். அதன் பின்னர் கலிஸ், கம்பீர் ஜோடி இணைந்தது.

தொடர்ச்சியாக ஆட்டங்களில் ஏமாற்றி வந்த கம்பீர் நேற்றையதினம் அதிரடியாய் ஆடி அணியின் வெற்றிக்கு அடித்தளம் அமைத்தார். இவர்களது அதிரடியான இணைப்பாட்டத்தில் அணி விரைவாக வெற்றியை நோக்கி சென்றது. கலிஸ் 43 பந்துகளில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இரண்டாவது இலக்குக்காக இருவரும் 58 பந்துகளில் 100 ஓட்டங்களைப் பகிர்ந்து கொண்டனர். கம்பீர் 29 பந்துகளில் தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார்.

இறுதியில் ஒரு இலக்கினை மாத்திரம் இழந்து 17.3 பந்து பரிமாற்றங்களில் வெற்றியிலக்கை அடைந்தது. கலிஸ் 47 பந்துகளில் 4 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 64 ஓட்டங்களையும், கம்பீர் 31 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 55 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் வெற்றோரி ஒரு இலக்கினை கைப்பற்றினார். ஆட்டநாயகனாக கலிஸ் தெரிவானார். (15)

## நாடு... 

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முற்பகல் கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு அழைத்து வரப்பட்டு இலங்கை அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டனர். இவர்களுக்கு பாதுகாப்புக்காக 100 பிரித்தானிய அதிகாரிகள் வந்திருந்தனர்.

நாடு கடத்தப்பட்டவர்களில் 27 தமிழர்களும், 11 சிங்களவர்களும், 12 முஸ்லிம்களும் உள்ளடங்கியுள்ளனர்.

இவர்கள் திருகோணமலை, வவுனியா மற்றும் இரத்தினபுரி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களாவர் என்று விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் 17 ஆம் திகதியும் பிரிட்டனில் இருந்து 44 பேர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டனர். (த-10)

## பழைய... 

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தின் பழம் பெரும் சொத்தாகவும் மாசுபடுத்தப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்று கருதும் இவர்கள் அதற்காகச் சட்டநடவடிக்கை எடுப்பதில் தீவிரமாக இருக்கிறார்கள்.

இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ள ஒருவரைத் தொடர்பு கொண்டு, பூங்கா இடிப்பை எதிர்த்து நீங்கள் நீதிமன்றத்தை நாடப் போகிறீர்களா என்று உதயன் கேட்டதற்கு, ''ஆம்! அது குறித்து நாங்கள் தீவிரமாக சட்டத் தரணிகளுடன் ஆலோசித்து வருகிறோம். நாளை (இன்று) இது தொடர்பில் உரிய முடிவு எட்டப்படும். மக்களுக்கு அதனைத் தெரியப்படுத்துவோம்'' என்றார். (உ-15)

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

## சர்வதேச...

ஜனாதிபதி மஹிந்தவிடம் தெரியப்படுத்தினார் என அறிய முடிகிறது. இலங்கைக்கு எதிராகச் சர்வதேச சமூகம் தொடர்ந்து மேற்கொண்டுவரும் அழுத்தங்கள் குறித்து இந்தியப் பிரதமருக்கு ஜனாதிபதி மஹிந்த இந்தச் சந்திப்பில் விரிவாக எடுத்துக் கூறியுள்ளார். இதனை நன்கு கவனமாகச் செவிமடுத்த இந்தியப் பிரதமர் இலங்கை விவகாரத்தில் இந்தியாவுக்கும் அழுத்தங்கள் இருக்கிறது எனச் சுட்டிக்காட்டியிருக்கிறார். சர்வதேசத்தின் குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளிக்கும் கடப்பாட்டை இலங்கையே இனிமேல் வெளிப்படுத்தவேண்டுமெனவும், இலங்கை விவகாரத்தில் தலையிடாதிருக்க இந்தியா உத்தேசித்திருப்பதாகவும் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

இலங்கை விவகாரத்தினால் காங்கிரஸ் அரசுக்கு தமிழ்நாட்டிலிருந்தும், சர்வதேசத்திலிருந்தும் அழுத்தங்கள் வருவதை விலாவாரியாக ஜனாதிபதி மஹிந்தவிடம் தெரிவித்திருக்கும் இந்தியப் பிரதமர், இனிமேல் இலங்கைப் பிரச்சினையை இலங்கை அரசே பார்த்துக்கொள்ளவேண்டும் என்றும் வலியுறுத்தினார் என்று மேலும் தெரியவருகிறது.

சர்வதேச நெருக்கடி மிகுந்த காலத்தில் இந்தியா இவ்வாறு இலங்கையைக் கைவிட்டிருப்பது, கொழும்புக்கு மேலும் நெருக்கடிகளை ஏற்படுத்தும் என்று அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர். ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கை மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து விவாதிக்கப்பட வேண்டும் என்று கனடா உள்ளிட்ட உலக நாடுகள் தொடர்ந்து அழுத்தம் கொடுத்து வருகையில் இந்தியா இலங்கையைக் கைவிட்டிருப்பது மஹிந்த அரசுக்கு விழுந்த பேரிடி என்றும் அவர்கள் கூறுகின்றனர். (உ-சி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாழ்த்தி நன்றி கூறுகின்றோம்



யாழ். திருக்குடும்ப கன்னியர் மட மாணவி

### சவுந்தரசிங்கி ஜோதிகா

2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் 164 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றமைக்கு ஜோதிகாவை வாழ்த்துகின்றோம். அத்துடன் அதிபருக்கும், கற்பித்தல் வழிகாட்டிய அனைத்து ஆசிரிய பெருந்தகைகளுக்கும் மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம். இவர் கல்வியில் மேலும் பல வெற்றிகளைப் பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

833, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

மனதார வாழ்த்துவோர்:
அம்மா, அப்பா, அண்ணாமார், அக்காமார், பெரியம்மாமார்,
அண்ணா (சிவின்ஸ்ரான்), அத்தான் (திலகதாஸ்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கிளி/ வன்னேரிக்குளம் மகாவித்தியாலயத்தில் கல்விகற்கும்

### நடேசலிங்கம் தமிழினி

2011 ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 161 புள்ளிகளுடன் மாவட்டநிலையில் 51 ஆவது இடத்தைப் பெற்று சித்தியடைந்தமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதோடு, எமது பாடசாலையில் 100 புள்ளிகளுக்கு மேல்பெற்ற

| | | |
|---|---|---|
| வி.வர்மினா - 132 | ஜ. ஜேனுகான் - 118 | இ.சாலினி - 107 |
| யோ.கேநீபன் - 121 | யோ. கஜீபன் - 116 | ம.தாரகன் - 102 |

ஆகியோரையும் மேன்மேலும் சித்திகள் பெற்று கல்வியில் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், பழையமாணவர் சங்கம்,
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

கிளி/ வன்னேரிக்குளம் ம.வி.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ். மத்திய கல்லூரி மாணவன்
செல்வன் ஜெயசீலன் வேணுசாந்
(புள்ளிகள் 168)



யாழ். புனித ஜோன்.பொஸ்கோ மாணவி
செல்வி. அனற்கியூறி கமிலஸ்
(புள்ளிகள் 171)

இவர்களிருவரும் 2011 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமையை பாராட்டுவதுடன் இவர்கள் கல்வியில் மேன்மேலும் பலதுறைகளிலும் சிறந்து விளங்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
மகேந்திரன் மாமா குடும்பம், கனகசபை மாமா குடும்பம்.

## வீடு, காணி விற்பனைக்கு

கொழும்பு -13 புதுச்செட்டித் தெருவில் 24 (Perch) இலக்கக் காணி, ஒரு வீட்டுடனும் ஒரு இரண்டு மாடி வீட்டுடனும் [கீழ்த்தளம் களஞ்சியசாலையாகவோ, அலுவலகமாகவோ பயன்படுத்தலாம்] விலை பேசித்தீர் மானிக்கலாம். காணி உறுதிப்பத்திரத்துடன் அவசியமான சகல ஆவணங்களும் தயார் நிலையில் உள்ளன.

தொடர்புகளுக்கு:
0772593448, 011-2434030
011-2435253, 011-2344907

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் - இலங்கை

மாணவர்களுக்கான தங்குமிட வசதி

புதிய கல்வியாண்டில் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு வெளிமாவட்டங்களைச் சேர்ந்த புதுமுக மாணவர்கள் பெருமளவில் வருகைதரவுள்ளார்கள். மேற்படி மாணவர்கள் தமது உயர்கல்வியை தடையின்றி தொடர்வதற்கு அவர்களுக்கான தங்குமிட வசதி நல்லமுறையில் அமைவது இன்றியமையாததாகும்.

ஆகவே எமது பிரதேசத்தின் வளர்ச்சியிலும், மாணவர்களின் எதிர்காலத்திலும் அக்கறை கொண்டுள்ள பொதுமக்கள் எமது பல்கலைக் கழகத்தில் கல்விகற்கும் மாணவர்களின் தேவைக்காக

1. தமது வீடுகளை பல்கலைக்கழகத்துக்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர்.
2. தமது வீடுகளில் அறைகளை பல்கலைக் கழக மாணவர்களுக்கு வாடகைக்கு வழங்க விரும்புவோர்.

[மேற்படி தங்குமிட வசதியை எமது மாணவர்களுக்கு வழங்கும் வீட்டுரிமையாளர்கள் அல்லது அங்கு தங்கும் மாணவர்கள் வாடகை அடிப்படையில் பல்கலைக்கழகத்திலிருந்து கட்டில்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதனை கவனத்திற் கொள்ளவும்].

உதவிப்பதிவாளர் - நலச்சேவைகள் அவர்களுடன் அலுவலக நேரத்தில் நேரடியாகவோ, 021- 222- 6716 எனும் தொலைபேசி இலக்கத்துடனோ தொடர்பு கொள்ளும்படி அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

ஏற்கனவே மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை வழங்கிய வீட்டுரிமையாளர்கள் அந்த வசதியை தொடர்ந்து வழங்கும்படியும் அன்பாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
29.09.2011

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

### நாகமணி சண்முகம்

மலர்வு: 27.06.1934 — உதிர்வு: 11.10.2010

அன்பாலும் பண்பாலும் அனைவரையும் அரவணைத்த
எங்கள் அன்புத் தெய்வமே!
இறைவன் உம்மைப் பிரித்தாலும் என்றும்
மாறாது உம் நினைவுகள்
சித்திரம் போல் சிரித்து நின்ற உம் வதனமதை
சிலைவடிவில் பார்த்திட நாம் செய்தபாவமென்ன?
பாசத்தின் சிகரமென பாரினில் வலம் வந்து
எம் அனைவரையும் பரிதவிக்கவிட்ட காரணமென்னவோ
தெய்வமாய் நின்று எம்மை என்றும் வழிநடத்திட
தினம் தினம் பிரார்த்திப்போம்.



மிஷன் பாடசாலை வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

பிரிவினால் துயருறும்
மனைவி, மக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### சிதம்பரப்பிள்ளை தபேந்திரநாதன்

(அன்ரியப்பா)



அல்வாய் கிழக்கு, பொதிரானையை பிறப்பிடமாகவும் உண்டுவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை தபேந்திரநாதன் (அன்ரியப்பா)நேற்று (29.09.2011) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை-செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் கனகசபை-இரத்தினம் தம்பதியரின் மருமகனும்,கனகாம்பிகையின் பாசமிகு கணவரும்,சுகந்தி(பிரான்ஸ்), தமயந்தி ஆகியோரின் மாமனும், சரோஜாதேவி மற்றும் கமலாதேவி, தெய்வேந்திரநாதன், மங்களாதேவி,சுசிலாதேவி,ரவீந்திரநாதன்(கனடா), இரஞ்சினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும் மிர்னயா, யஷவின் , சுயாஸ் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.09.2011) வெள்ளிக்கிழமை மு.ப.10.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கரும்பன் இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உண்டுவத்தை,
அல்வாய் தெற்கு,
அல்வாய்.

தகவல்:
குடும்பத்தினர்.




துரிதமாக விரிவாக்கமடையும் எமது நவீன வங்கிச் சேவை இப்பொழுது

நெல்லியடியில்

நவீன வங்கிச்சேவையை உங்களுக்கு பெற்றுக்கொடுப்பதற்காக எமது 56 வது வங்கிக் கிளையினை நெல்லியடியில் திறந்திருப்பதன் மூலம் நம் தலைசிறந்த வங்கிச்சேவையை நாடளாவியரீதியில் மேலும் விஸ்தரித்துள்ளோம். எனவே இல. 208 A, யாழ்ப்பாண வீதி, நெல்லியடியில் அமைந்திருக்கும் எமது புதிய வங்கிக்கிளையில் வினைத்திறன்மிக்க வங்கித்தீர்வுகளை நீங்களும் அனுபவித்திடுங்கள்.

பான் ஏஷியா வங்கி
உங்கள் சேவைக்காக

www.sarva.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேச...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குணதாச அமரசேகர.

நாட்டுக்கு எதிரான கட்சிகளிடம் சோரம்போய்விட்டார் எதிர்க் கட்சித் தலைவர். இனி அவர் உள்ளதையும் இழக்கப்போகின்றார் என்றும் அவர் தெரிவித்தார்.

''சர்வதேசத்தினால் சுமத்தப்பட்டுள்ள யுத்தக்குற்றங்கள் அடங்கலான மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள் மற்றும் அரசியல் தீர்வு தொடர்பாகஇலங்கை அரசு இந்த வருடத்துள் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையேல் சர்வதேசத்தின் கடுமையான நெருக்கடிகளை எதிர்நோக்கவேண்டிய நிலை ஏற்படும்.

யுத்தக்குற்றச்சாட்டுகள் தொடர்பான ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையை சர்வதேசம் ஏற்றுவிட்டது. நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாட்டுக்கு ஏற்றவகையிலேயே ஐக்கிய தேசியக் கட்சி செயற்படும்.''

- இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய விசேட பேட்டியில் தெரிவித்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் கூற்று தொடர்பில் 'உதயனு'க்கு கருத்து வெளியிடுகையிலேயே தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தருஸ்மன் தலைமையிலான குழுவைத் தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கிலேயே ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ- மூன் அமைத்தார்.

அந்தக் குழுவின் அறிக்கை ஐ.நா. அறிக்கை அல்ல என்பதை நாம் ஆரம்பத்தில் இருந்தே தெளிவாகக் கூறி வருகின்றோம். அரசும் அந்த அறிக்கையை நிராகரித்துவிட்டது. ஏன்? அறிக்கைக்கு சொந்தக்காரரான பான் கீ- மூனே அறிக்கையை சர்வதேசம் ஏற்றுவிட்டது எனக் கூறவில்லை.

இவ்வாறானதொரு நிலையில் ரணில் விக்கிரமசிங்க இந்த விவகாரத்தில் முண்டியடிப்பதன் நோக்கம் என்ன? அவர் யாரைத் திருப்திப்படுத்த முயற்சிக்கின்றார்?

நாட்டுக்கு எதிரான ஒரு கட்சியே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு. அந்தக் கட்சியின் நிலைப்பாட்டைத் தாம் வரவேற்பதாக ரணில் கூறியுள்ளார். இதுவோர் அருமையான விடயம். மனப்பூர்வமாக நாம் வரவேற்கின்றோம்.

ஏனெனில், புலிகளுக்கு உதவப்போய் ரணில் விக்கிரமசிங்க இழந்தது ஏராளம். இப்பொழுது கூட்டமைப்புக்கு அதாவது, நாட்டுக்கு எதிரானவர்களுக்கு உதவப் போயுள்ளார். எனவே, உள்ளதையும் அவர் இழக்கப்போகின்றார் என்பது நிச்சயம். இதுவே எமக்கு வேண்டும். அதனால்தான், ரணிலின் கூற்றை வரவேற்பதாக நான் கூறினேன்.

எதிர்க்கட்சித் தலைவர், தருஸ்மன் அறிக்கையை சர்வதேசம் ஏற்றுவிட்டதாகக் கூறுவது அப்பட்டமான பொய். அவரின் கூற்றை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம் - என்றார் அவர். (த-சி)


## அதிர்ச்சியின் நினைவலைகள்

29.09.2011 இல் அகால மரணமான
எமது நிறுவனத்தின் தரம் 09
மாணவ தலைவர்களுள் ஒருவரான



**[illegible]வன் நல்லைநாதன் தனுசன்**
அவர்களின்
மரணச் செய்தியால் அதிர்ச்சியடைகிறோம்.

தரணியில் உதித்த தனுசன் அவன்
தாழ்மையில் தோன்றிய தனயன் அவன்
ஒழுக்கத்தின் விழுப்பமாய் விழுதானான் - இன்று
காலனின் கையில் சென்ற தேனோ...?

ஈடு செய்யமுடியாத இந்த மறைவுக்கு ஆறுதல் கூறியும், ஆத்மா சாந்தியடையவும் இறைவனை இறைஞ்சி நிற்கின்றோம்.

The Express Institute
Irupalai Junction-Kopay
கல்விச் சமூகத்தினர்.

## 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**நாகமுத்து சின்னம்மா**

பாட்டி என்று சொல்ல
தரணியில் இனி யாருமில்லை
உம்மடியில் நாம் தவழ
எந்தனுக்கு வாய்ப்பில்லை
பூட்டி வைத்த பூவுலகில் பூட்டி
நான் ஏங்கிறேன்
பூமியில் தரிசனம் தாரீரோ,
அம்மா!

கட்டுடை,
மானிப்பாய்.

*உங்கள் ஆத்மா சாந்தி தேடும் உறவு*
இ.ரவீந்திரன் குடும்பம்,

## துயர் பகிர்கின்றோம்

யா/ மயிலணி வைச மகா வித்தியாலயத்தில் உப
அதிபராகவும் கணித ஆசானாகவும்
சேவையாற்றி ஓய்வுபெற்ற
அமரர் **இளையதம்பி நவரட்ணம்**
அவர்கள் 31.08.2011 புதன்கிழமை இறைபதம்
அடைந்தமையினால் துயருற்றிருக்கும் அன்னாரது
குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா
சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
யா/ மயிலணி சைவ மகாவித்தியாலயம், சுன்னாகம்.


## நாவாந்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பட்ட பொது மக்கள் மோசமாகத் தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பாகக் கொழும்பு உயர் நீதிமன்றத்தில் அரசமைப்பின் 126 ஆவது பிரிவின் கீழ் அடிப்படை உரிமை மீறல் மனுத் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த மனுக்களில் 4 மனுக்கள் உயர் நீதிமன்றத்தில் நேற்றுப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

தாக்கல் செய்யப்பட்ட 20 வழக்குகளில் நான்கு நேற்று நீதியரசர்கள் மூவர் முன்னிலையில் பரிசீலணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

எனினும் சட்டமா அதிபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள், இந்த வழக்குத் தொடர்பான அறிவித்தல் சட்டமா அதிபர் திணைக்களத்துக்க நேற்றுத்தான் (நேற்று முன்தினம்) கிடைத்தது. அதனால் இவை மன்றில் அலோசிப்பதற்கு தமக்கு கால அவகாசம் தேவை என நீதியரசர்களிடம் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த வழக்குகளை எதிர்வரும் ஒக்ரோபர் 27 ஆம் திகதி பரிசீலனைக்கு எடுத்து அவற்றைத் தொடர்ந்து விசாரிப்பதா இல்லையா என்பதை அன்றையதினம் அறிவிப்பதாக நீதியரசர்கள் தெரிவித்தனர்.

இந்த வழக்குகளுக்கு மனுதாரர்கள் சார்பில் சிரேஷ்ட சட்டத் தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடனும் சட்டத்தரணிகளான சாந்தா அபிமன்னசிங்கம், ஜே.சி. வெலியமுன, பவானி பொன்சேகா, லக்ஸ்மன் ஜெயக்குமார், கு.குருபரன் ஆகியோரின் உதவியுடனும் சிரேஷ்ட சட்டத்தரணி கனகநாயகம் கனகேஸ்வரன் ஆஜரானார். (த-4)

## திடீரெனப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வேலைகளுக்காக மின்தடை அமுலில் இருந்த வேளை கம்பிகளில் எவ்வாறு மின்சாரம் பாய்ந்தது என்பது தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இந்தச் சம்பவங்கள் மிருசுவில் ஆசைப்பிள்ளை ஏற்றம் மற்றும் இருபாலை ஆகிய இடங்களில் நேற்றுக் காலை 9.45 மணியளவில் இடம்பெற்றன.

சம்பவத்தில் மருதங்கேணி, மட்டுவில் தெற்கைச்சேர்ந்த நவரட்ணம் அஜந்தன் (வயது 22) என்ற இளைஞரே உடல் கருகி மரணமானவராவார்.

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்த விஜயதாஸ் (வயது 24) என்ற இளைஞர் இருபாலை சம்பவத்தில் காயமடைந்தார்.

இந்த இரு இளைஞர்களும் தனித்தனி ஒப்பந்தக்காரர்களால் இந்தப் பணிக்கு அமர்த்தப்பட்டிருந்தனர்.

இந்தப் பகுதிகளில் மின் இணைப்புத் திருத்த வேலைகளுக்காக மின்சாரம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இந்த நிலையில் இவர்கள் பணியில் ஈடுபட்டிருந்த வேளை திடீரெனக் கம்பிகளில் பாய்ந்த மின்சாரத்தினாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

மின் தடைப்பட்டிருந்த வேளை கம்பிகளில் எவ்வாறு மின்சாரம் பாய்ந்தது என்பது தொடர்பில் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. பளைக்கும் இருபாலைக்கும் இடைப்பட்ட பகுதியில் எங்கோ ஓர் இடத்தில் மின்பிறப்பாக்கி ஒன்று இயக்கப்பட்டதனாலேயே இந்த அனர்த்தம் நிகழ்ந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. இது குறித்து பொறியியலாளர்களும் பொலிஸாரும் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

ஆசைப்பிள்ளை ஏற்றத்தில் இறந்தவரின் உடல் உடனடியாகப் பளை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. கிளிநொச்சி நீதிவான் பெ.சிவகுமார் இந்த விசாரணையை சாவகச்சேரி நீதிமன்றுக்குப் பாரப்படுத்துமாறு உத்தரவிட்டார். சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதிவான் மா.கணேசராஜா அந்த நேரம் இல்லாதமையால் கொடிகாமம் திடீர் மரண விசாணை அதிகாரி செல்வி ந.தவமலர் விசாரணையை மேற்கொண்டார். சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த சடலம் உடற்கூற்று பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இருபாலையில் மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளானவர் தொடர்ந்து வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்த அனர்த்தம் இடம்பெற்ற வேளை இலங்கை மின்சார சபையின் மின்விநியோகம் இந்தப் பகுதியில் தடைப்பட்டிருந்ததாகவும் வேறு ஒரு இடத்தில் இருந்து மின்பிறப்பாக்கி இயக்கப்பட்டமையே இதற்குக் காரணம் எனவும் கூறப்பட்டது. (த-207-311-131)

## புனரமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்தார்கள் என்றும் அறிய வந்தது.

''பூங்காவை அழிக்கும் பணிகளை நிறுத்துமாறு கோரி தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம், பாதுகாப்பு அமைச்சு செயலர் மற்றும் ஜனாதிபதியின் செயலர் ஆகியோருக்கு முறையிட்டபோதும் இதுவரை எதுவிதப் பதிலும் கிடைக்கவில்லை'' என்று யாழ். மாவட்ட அரச அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

தேர்தல் பிரசாரத்துக்காக அமைச்சர் பஸில் ராஜபக்ஷ யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோதே ஆளுநர் தலைமையில் பழைய பூங்கா அழிப்புக்கான திட்டங்கள் தீட்டப்பட்டுள்ளன. அதன் பின்னர் பூங்கா புனரமைப்பு மற்றும் அபிவிருத்திக்கு என பொருளாதார அமைச்சினால் 220 மில்லியன் செலவில் திட்டம் தயாரிக்கப்பட்டது.

அது குறித்து யாழ். மாவட்ட அரச அதிபருக்கு எந்த அறிவித்தலும் வழங்கப்படாமல், இரகசியமாக வைக்கப்பட்டிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் திடீரென வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன.

பொருளாதார அமைச்சின் திட்டப்படி பழைய பூங்காவில் உள்ள குளத்தினைப் புனரமைத்து, அங்கு பூங்காவுக்குரிய வசதிகள் அனைத்தையும் ஏற்படுத்தி பாதுகாப்பு வேலியையும் அமைத்த பின்னர் சுற்றுமதிலை அகற்றுவது எனவே முடிவு செய்யப்பட்டிருந்தது. ஆனால், ஆளுநர் தான்தோன்றித்தனமாகச் செயற்பட்டு பூங்காவை அழிக்கும் நடவடிக்கைகளைத் தொடங்கி உள்ளார் என்று தெரியவந்தது.

இது குறித்து மூத்த அதிகாரிகள் வழங்கிய ஆலோசனைகளையும், பணிகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் யாழ். அரச அதிபரிடம் அனுமதி பெறுங்கள் என்று கூறப்பட்டதையும் கூட புறக்கணித்த ஆளுநர், ''வடக்கின் ஆளுநராக நானே இருக்கும்போது எதற்கு அரச அதிபரிடம் அனுமதி கேட்க வேண்டும்'' என்று வீறாப்புப் பேசிவிட்டே பணிகளைத் தொடங்குவதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார் என்றும் தகவல்கள் கூறுகின்றன. (உ-15)

## யாழ்.இந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர். இவர்கள் கோயிலுக்குச் சென்று பி.ப. 2.30 மணியளவில் குறிகாட்டுவான் வந்தடைந்தனர். இவர்களை ஏற்றுவதற்கென பஸ் சாரதி பஸ்ஸை தரிப்பிடத்திலிருந்து முன் நகர்த்திப் பின்னர் பின் நகர்த்திய போது மாணவர்கள் ஓடிச்சென்று பஸ்ஸில் ஏற முற்பட்டனர் என்றும் அந்த வேளை பிரஸ்தாப மாணவனும் ஓடிச்சென்றார் என்றும் பஸ்ஸில் ஏறும்போது அவர் தவறி கீழே விழுந்ததனால் பஸ்ஸின் முன் சில்லினுள் அகப்பட்டார் என்றும் விசாரணைகளின் போது ஆசிரியர்களால் தெரிவிக்கப்பட்டது. பிரஸ்தாப மாணவனின் கால் பக்கமாக இருந்து பஸ்ஸின் சில்லு ஏறி வயிறு, நெஞ்சு, தலை என்பவற்றை நசித்து நின்றது. இவ்வாறு சில்லு ஏறியமை உடற்கூற்றுப் பரிசோதனையின் போது தெரியவந்தது.

மாணவன் பலியான இடத்தில் ஊர்காவற்றுறைப் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர். சம்பவ இடத்துக்கு விரைந்த ஊர்காவற்றுறை நீதிவான் திருமதி ஜோய் மகிழ் மகாதேவா மேலதிக விசாரணைகளை மேற்கொண்டார்.

பொலிஸாரும் கடற்படையினரும் சடலத்தை யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர். பஸ் சாரதி பொலிஸாரால் சம்பவ இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டார். பஸ்ஸை பொலிஸார் தம்முடன் நிலையத்துக்குக் கொண்டு சென்றனர்.

வைத்தியசாலையிலும் நீதிவான் விசாரணை மேற்கொண்டார். உடற்கூற்றுப் பரிசோதனையின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. பொலிஸார் விசாரணையைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். (த-4)




## கண்ணீர் அஞ்சலி

எமது இனிய நண்பர் மற்றும் பூமா விளையாட்டுக்கழக உபதலைவர் வசீகரன்
அவர்களது அருமைத் தாய்
திருமதி
**இராசமலர் இராசலிங்கம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பூமா விளையாட்டுக்கழக அங்கத்தவர்கள், தெல்லிப்பழை.

## மரண அறிவித்தல்

*திருமதி மயில்வாகனம் பாக்கியலட்சுமி*



39/9, மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் 27/5, புது வீதி, கொய்யாத் தோட்டம், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் பாக்கியலட்சுமி நேற்று (29.09.2011) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா சிவகாமி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற சின்னத்தம்பி மயில்வாகனத்தின் அன்பு மனைவியும் சத்தியதேவி, லோகநாதன் (கனடா), நிர்மலாதேவி(கனடா), தேவிகா, திலகம், விமலாதேவி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சிவானந்தன் மற்றும் அமலோட்பவி (கனடா), கஜேந்திரன் (கனடா), அருளானந்தம், பெரியசாமி, செந்தமிழ்ச்செல்வன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் குலேந்திரன், தனேந்திரன், பிரியதர்சன், நிதர்சனா, தவநாதன், யசோதினி, வினோதினி (கனடா), உமாசுதன், உமைநேசன், யசோதினி, கஜேந்தினி, கபிலநேசன், ரகுலநேசன், கிருஷ்ணபிரியா, வேணுயா, லாவண்யா, கீர்த்திகா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.09.2011) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பி.ப. 3 மணிக்கு பூதவுடல் துண்டி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அவைரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
அருளானந்தம் (அருள்)
(மருமகள்)

*22/5, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். சட்டத்தரணிகளின் பகிஷ்கரிப்பு முடிவுக்கு வந்தது

யாழ்ப்பாணம், செப்.30

யாழ் நீதிமன்ற வளாகத்துக்குள் கடந்த 19 ஆம் திகதி இடம்பெற்ற பொலிஸாரின் அடாவடியைக் கண்டித்து யாழ் மாவட்ட சட்டத்தரணிகள் மேற்கொண்டிருந்த பணிப்பகிஷ்கரிப்பு சம்பந்தப்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து நேற்றுடன் நிறைவுக்கு வந்தது.

இதன்படி இன்று வெள்ளிக்கிழமை சட்டத்தரணிகள் வழமைபோல நீதிமன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ஆம் திகதி நீதிமன்ற வளாகத்துக்குள் வைத்து நபர் ஒருவரை கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸார் பலவந்தமாக இழுத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தை ஆட்சேபித்தும், சம்பந்தப்பட்ட பொலிஸார் மீது சட்ட நடவடிக்கை எடுக்கக் கோரியும் கடந்த 20 ஆம் திகதி தொடக்கம் சட்டத் தரணிகள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வந்தனர்.

இந்த நிலையில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 7 பொலிஸாரும் யாழ். நீதிமன்றில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்பட்டனர். இந்த நடவடிக்கை தமக்குக் கிடைத்த வெற்றி எனவும், இதனையடுத்து சட்டத்தரணிகள் வழமைபோல நீதிமன்றச் செயற்பாடுகளில் ஈடுபவர் என்றும், பகிஷ்கரிப்புக் காலத்தில் நீதிமன்றுகளுக்கும், பொதுமக்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு தாம் மனம் வருந்துவதாகவும் யாழ். மாவட்ட சட்டத்தரிணிகள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர். (த-10)

# உலக உணவுத் திட்ட களஞ்சியத்தில் தீப் பற்றியது

யாழ்ப்பாணம், செப்.30

கோப்பாய் இராச வீதியில் அமைந்துள்ள உலக உணவுத் திட்டத்துக்குச் சொந்தமான உணவுக் களஞ்சியத்தில் நேற்றுப் பிற்பகல் பெரும் தீவிபத்து இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அங்கிருந்த சில உணவுப் பொருள்கள் தீயில் எரிந்து நாசமானதாக அதனை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.

உலக உணவுத் திட்டத்தினால் குடா நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் நிவாரண நடவடிக்கைகளுக்குத் தேவையான உணவுப் பொருள்களைக் களஞ்சியப் படுத்துவதற்காக இந்தக் களஞ்சியம் பயன்படுத்தப்பட்டு வந்தது.

இந்த நிலையில் நேற்றுப் பிற்பகலில் இந்தக் களஞ்சியத்தின் ஒரு பகுதி தீப்பற்றி எரிந்ததாகவும், அதனை அணைக்க அங்கு நின்ற மக்கள் முன்வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

எனினும் பின்னர் பவுசர் வாகனங்களில் இருந்து தண்ணீர் விசிறப்பட்டே தீ கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாகவும், இதன் போது அங்கிருந்த பெருமளவு உணவுப் பொருள்கள் தீயில் கருகியதாகவும் கூறப்பட்டது. தீ விபத்துக்கான காரணம் தெரியவரவில்லை. (த-26)

# மகிந்தவுக்கு வாக்குறுதி எதுவும் கொடுக்கவில்லை

நியூயோர்க்கில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இலங்கையின் மனித உரிமை நிலைமைகள் குறித்து மாலைதீவு துணை ஜனாதிபதி மொகமட் வாகிட் ஹசன் கலந்துரையாடியதாக இலங்கை அரசு வெளியிட்ட தகவலை மாலைதீவு துணை ஜனாதிபதியின் செயலகம் நிராகரித்துள்ளது.

ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்ற போது ஜனாதிபதி மகிந்தவை மாலைதீவு துணை ஜனாதிபதி சந்தித்துப் பேசியதாகவும், ஆனால் மனித உரிமை நிலைமைகள் குறித்து அதன் போது பேசப்படவில்லை என்றும் அந்தச் செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

மனிதஉரிமை நிலைமைகள் குறித்த ஜனாதிபதி மகிந்தவுக்கு இலங்கையின் நிலைப்பாட்டுக்கு ஆதரவு வழங்குவதாக மாலைதீவு துணை ஜனாதிபதி வாக்குறுதி அளித்ததாக ஹவீரு என்ற ஊடகத்துக்கு இலங்கை அரசின் மூத்த அதிகாரி ஒருவர் கூறியிருந்தார்.

ஆனால் இதுதொடர்பாக விளக்கமளித்துள்ள மாலைதீவு துணை ஜனாதிபதி செயலகம், மகிந்த ராஜபக்ஷவை நல்லெண்ண அடிப்படையில் சந்தித்ததாகவும், அதில் வர்த்தக உறவுகள் தொடர்பாகவும் ஐ.நாவில் வடக்கு, தெற்கு நாடுகளின் ஒத்துழைப்பு பற்றியும் பேசப்பட்டதாகவும் கூறியுள்ளது. (த-1

# 'மண்ணின் மகிமை' இன்றுடன் பூர்த்

யாழ்ப்பாணம், செப்.30

வடமாகாணத்தில் முதல்கட்டமாக பிரதேச செயலாளர்கள் பிரிவுகளில் மேற்கொள்ளப்பட்டுவந்த 'மண்ணின் மகிமை' வேலைத் திட்டத்தின் தகவல் திரட்டும் செயற்பாடுகள் இன்று வெள்ளிக்கிழமையுடன் முடிவடைகின்றன.

இவ்வாறு வடமாகாணக் காணி ஆணையாளர் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தமை வருமாறு:

வடமாகாணத்தின் மாவட்டங்களிலும் ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவு தெரிவு செய்யப்பட்டு முன்னோடியாக மண்ணின் மகிமை வேலைத் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்தது.

யாழ்ப்பாணத்தில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிலும், கிளிநொச்சியில் கரைச்சிப் பிரதேச செயல பிரிவிலும், முல்லைத்தீவி கரைத்துரைப்பற்றுப் பிரதேச செயல் பிரிவிலும், வவுனியாவில் வவுனிய தெற்கு பிரதேச செயலர் பிரிவிலும் தி டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வந்த

ஓகஸ்ட் மாதம் முதாலாம் திகதி ஆ பிக்கப்பட்ட மண்ணின் மகிமை வேலை திடத்தின் முதலாம் கட்டப் பணி இன்றுடன் நிறைவடைகின்றன. மே குறிப்பிட்ட ஐந்து பிரதேச செய பிரிவுகள் தவிர்ந்த வடமாகாணத் ஏனைய பிரதேச செயலர் பிரிவுகள் நவம்பர் மாதம் 20 ஆம் திகதியுடன் இ வேலைத்திட்டம் நிறைவடையவுள்ளது - என்றார்.

பொருளியல்
திரு.P.சண்
A/L 2012,2013
புதிய பிரிவு ஆரம்பம்
02.10.2011 - 10.30 a.m.
A/L 2012
பணம், வங்கி,
பொது விலை மட்டம்
ஆரம்பம்
01.10.2011 5p.m
யூனி வேர்சல்
கந்தர்மடம்

பொது அறிவு-2012
"விற்பனையாகின்றது"
450/=
P.Kamaldhasan
B.A(Cey)PGDE, PGDM, M.A, LLB(R)
கிடைக்குமிடம்
பூபாலசிங்கம்,அன்னை,துர்க்கா,சிதம்பரபிள்ளை

வணிகக்கல்வி
S.யசோதரன்
Paper Class
Sat,Sun-3.00-4.30 pm
ஆரம்பம்:-01.10.2011
(Sun 3.00pm)
*கடந்த கால மாதிரி வினாக்கள் ஆரம்ப அலகில் இருந்து மீட்கப்படும்.
NEC பருத்தித்துறை வீதி,ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கணக்கீ
A/L:2012
குறை மாத முடிவுக் கண
ஆரம்பம்: சனி 6 am
A/L:2013
கணக்கீட்டுச் சமன்பா
ஆரம்பம்: சனி 8 a.
A/L 2012
Day Paper Class
ஆரம்பம்:புதன் 4 p
S.தவா
(B.Com(Hons)(Acc
NIRU

STORE KEEPER
தேவை
யாழ். நகரில் இயங்கும் பிரபல்ய மின்சார இலத்திரனியல் பொருள்கள் விற்பனை செய்யும் முன் அனுபவமுள்ள ஸ்ரோர் கீப்பர் தேவை. நேரில் வரவும்.
யாழ்ப்பாண மின்னகம் (காட்சியறை)
இல.141, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
0212225766

பொருளியல்
NB.கஜீதரன்
B.A(Jaf),H.N.Dip-In-Acc, M.A(R)
புதிய பாடத்திட்டத்திற்கான
விசேட கருத்தரங்கு 01
உற்பத்தி சாத்திய வளையி
Sat,Sun 10.00-12.00Am
ஆரம்பம்: 01-10-2011 சனிக்கிழமை 10.00 மணி
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

THE SCIENCE CORNER
CLOCK TOWER LANE JAFFNA
2012 A/L DAY CLASS
ஆரம்பம்: 01.10.2011 (சனி முதல்)

| | |
|---|---|
| BIOLOGY<br>பொன் திவாகரன் | Mon - Fri 7 - 8 a.m.<br>Sat. - Sun 10.30 -12 |
| CHEMISTRY<br>அன்பு | Sat. - Sun 12.00 -1.30 |
| PHYSICS<br>செல்வன் | Sat. - Sun 3.00 -1.30 |
| COM.MATHS<br>சிவகரன் | Sat. - Sun 4.30 -6.00 |

உடன் விற்பனை
NOAH
ACE KR- 42-
2000(WHITE)
PA-2xxx ,
Diesel
Converted.Auto,
door,Hight roof,
Alloy Wheel
உடன் விற்பனைக்குண்டு
தொடர்புகளுக்கு:
0777563239
0212263105

LOGIC
P.கமல்
BA(Cey), PGDE, PGDM, LLB(R)
புதிய பாடத்திட்டத்திற்கான விசேட ஆசிரியர்
A/L 2012 Paper Class Sat,Sun 2.00-3.00Pm
A/L 2013 அனுமானம் Sat,Sun 11.00-12.00Am
ஆரம்பம்: 01-10-2011 சனிக்கிழமை
NEC பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

அபான்ஸ் காட்சியறையின்
திருநெல்வேலி கிளைக்கு
பின்வரும் பதவிக்கு ஆள்கள் தேவை
1) கள உத்தியோகத்தர் (ஆண்)
தகைமை:
* O/L சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
* சாரதி அனுமதிப்பத்திரம்
2) அலுவலக உதவியாளர் (ஆண், பெண்)
* O/L ஆங்கிலம் உட்பட 6 பாடங்களில் சித்தி
* AL 3 பாடங்களில் சித்தி
தகுதியுடையோர் தமது சுயவிவரக் கோவையை கீழ் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.
இல. 269, பலாலி வீதி, கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0212220247

PAPER CLASS
TAM: திரு.சிவா
LOG: திரு.துரை
H.Cl: திரு.ஜெயக்குமார்
P.Sc: திரு.செந்தூரன்
GEO: திரு.கரன்
His: திரு.தாஸ்
ACC:திரு.தவா
ECO:திரு.சண்
B.st:திரு.பிரதீபன்
A/L 2012,A/L 2013 புதிய அனுமதிகள்
யூனிவேர்சல் கந்தர்மடம்

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
A/L எழுதிய மாணவர்கள், பல்கலைக்கழக
மற்றும் நுழைவு மாணவர்களுக்கான
இலவச ஆங்கில இரண்டுநாள் வகுப்பு
அனுமதி, புத்தகம், மற்றும் சான்றிதழ் இலவசம்
பிரிவு 1 : 01.10.2011--12.30-2 மற்றும் 02.10.2011--12.30-2
பிரிவு 2 : 05.10.2011 காலை 11-1 மற்றும் 06.10.2011 காலை 11-1
MyWay 182, STANLEY RD, JAFFNA
077 33 63 456 222 9505

புலமைப் பரிசில் வகுப்பு
யாழில் சாதனை நிலைநாட்டிய பாடசாலையின் விசேட ஆசிரியர்
திரு.சி.ஞானகுமாரன்
அவர்களின் விசேட புலமைப் பரிசில் வழிகாட்டல் வகுப்புக்கள்
ஆரம்பம் : 01-10-2011 சனி மாலை 3.00மணி
தரம் 5 புலமைப்பரிசில் 2012 (தற்போது தரம் 4)
புதிய அனுமதிகள் இன்று முதல்
தரம் 4 புலமைப்பரிசில் 2013 (தற்போது தரம் 3)
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

மீண்டும் யாழ். மண்ணில்
A/L அரசியல் By: K.சுகாஷ்(LLB)
2008 வரை யாழ். முன்னணி ஆசிரியர்
தற்போதைய கொழும்பின் பிரபல ஆசிரியர்
வகுப்புகள் ஆரம்பம் 01.10.2011 (நாளை)
D.C.M. - யாழ். நகர் (வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)
BITSMANS - மானிப்பாய்
SUBRA - சித்தன்கேணி
2012 - Paper Class (முழுப் பாடத் திட்டம் முடிக்கப்படும்)
2013 - ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும்.

பணியாள்கள் தேவை
திருநெல்வேலி நேர்சிங்ஹோமுக்கு முன்பாக உள்ள உல்லாச விருந்தினர் விடுதிக்கும் அதன் தலைமையகத்துக்கும் பணியாளர்கள் உடன் வேண்டப்படுகின்றனர்.
* உணவு பரிமாறுபவர்(STEWARDS)
* சமையல் உதவியாளர்(Kitchen Helpers)
* அறை பராமரிப்பாளர்(Room Boys)
* பாதுகாப்பு உத்தியோகத்தர்கள்
தகுதி உடையோர் 01.10.2011 சனிக்கிழமை பி.பகல் 2 மணிக்குப் பின்பும் ஞாயிறு காலை 9 மணிக்குப் பின்பும் நேரில் வரவும்.
BRIGHT INN
இல:-51,சிவன் அம்மன் வீதி,
திருநெல்வேலி.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30.09.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org